JUDE

www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

ஒக்.03-09,1999

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 329




## பழிக்குப் பழி!

## மற்றுமொரு எச்சரிக்கை!

## முகமூடியுடன் வருகிறது மொழித்திணிப்பு உஷார்

## புலிகளுக்கு இந்தியா தடை!





## சுந்தர் எனக்கு சொந்தமில்லை

ரம்பா

## 'அவர்கள் என்னை விரும்புகிறார்கள்'

கார்த்திக்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## வெறும் கண்டனங்கள்

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

புதுக்குடியிருப்பில்
குண்டுத் தாக்குதலோடு
ஆரம்பித்து தொடர்ச்சியாக
வருந்தத்தக்க சம்பவங்கள்
பல நடந்துள்ளன!

இவற்றைக் கண்டிக்கும்
அருகதையை
ஆட்சியாளர் இழந்துள்ளனர்!

பொதுமக்கள்மீதான
குண்டுவீச்சை
'யுத்த விபத்து' என்றே
அரசதரப்பு
வெகு அலட்சியமாக
விவரித்திருந்தது!

அதற்கு முன்னர்
படைத்தரப்பினர்
புலிகள்தான் பலியாகினர்
என்று கூறியிருந்தனர்!

இவ்வாறான
பொறுப்பற்ற நியாயப்படுத்தல்
புலிகளை ஆத்திரமூட்டியுள்ளது!

அதன் விளைவை
அம்பாறையில் கண்டோம்!

அம்பாறைப் படுகொலைகள்
நமக்கு ஏற்புடையவையல்ல!
அப்பாவி மக்கள்
எங்கு பலியானாலும்
கண்டிக்கப்பட வேண்டியதே!

அதே சமயம்
விடுதலைப் புலிகள் அமைப்பினர்
கடந்த சில ஆண்டுகளாக
சிங்கள மக்களை
பாதிக்காத விதமாகவே
தாக்குதல்களை நடத்தி வந்ததும்
மறுக்க முடியாத விஷயம்!

கொழும்பில்கூட
மக்கள் நடமாட்டம் குறைந்த
நாட்களிலேயே
தாக்குதல்கள் நடத்தியிருந்தனர்!

மக்கள் கூடும் இடங்கள்
தவிர்ந்த பகுதிகளிலேயே
குண்டுகள் பொருத்தப்பட்டன!

அதேசமயம்
வடக்கு-கிழக்கில்
படைத்தரப்பின் பதிலடிகளால்
தமிழ் மக்கள்
தொடர்ந்தும் பாதிப்புற்றனர்!

ஷெல் வீச்சுக்கள்,
விமானக் குண்டுத் தாக்குதல்கள்,
பொதுமக்கள்மீது பதிலடி
போன்ற நடைமுறைகள்
தமிழ் மக்கள்மீது
தொடர்ந்தே வந்தன!

அதிலும் சமீபகாலத்தில்
எங்கு புலிகள் தாக்கினாலும்
அப்பகுதியில் உள்ள
தமிழர்களை தாக்குவது
சகஜமாக மாறியிருக்கிறது.

இவற்றையிட்டு
மனித உரிமை அமைப்புக்கள்
மௌனம் சாதித்தன!

உலக நாடுகள்
ஒரு வார்த்தை கூறவில்லை!

நீலனின் மறைவுக்காக
நீண்ட கியூ வரிசையில்
அனுதாபங்கள் வந்து குவிந்தன!

அதனையிட்டு
நாம் குறை காணவில்லை!

ஆனால், அதே சக்திகள்
அப்பாவித் தமிழ் மக்களது
அநியாய உயிரிழப்புக்கள்
பற்றி துளியளவும்
கவலை காண்பிப்பதில்லை!

இவ்வாறான கண்ணோட்டங்களே
பாதிக்கப்படும் மக்களிடம்
மனித உரிமை
முழக்கங்கள் தொடர்பாக
நம்பிக்கையீனங்களை வளர்க்கின்றன!

புலிகள் போன்ற அமைப்புக்களும்
பதிலுக்குப் பதில்
என்று இறங்கிவிடுகின்றன!

அவ்வாறு நிகழ்வுகள்
நடந்ததின் பின்னர்
கண்டிப்பதில் யாது பலன்?

வெள்ளம் வர முன்னர்
அணை கட்ட வேண்டும்!

பழிக்குப் பழி
என்ற சூழ்நிலை
தோன்றுவதற்கு முன்னரே,
மனித உரிமை அமைப்புக்கள்
துரிதமாகச் செயற்பட்டு,
ஆட்சியாளரை
கண்டித்து கண்காணித்திருக்கலாம்!

நவாலி சென்பீற்றர்ஸ்
தேவாலயப் பகுதியில்
நடந்த விமானத் தாக்குதல்
முதற்கொண்டு,
பல்வேறு விமானத் தாக்குதல்களில்
பொதுமக்கள் பலியாகியுள்ளனர்!

பலியானவர்களுக்கு
நஷ்ட ஈடும் கிடைத்ததில்லை!
நடந்த கொடுமைக்கு
நீதி நடவடிக்கையும்
எடுக்கப்பட்டதில்லை!

இவற்றை ஆராய்ந்து
அரசுக்கு அழுத்தம் தருவதற்கு
மனித உரிமை அமைப்புகள்
ஏதாவது முயன்றதுண்டா?

ஐ.நா. சபைதான்
இங்கு நடப்பது என்ன
என்று எட்டிப் பார்த்ததுண்டா?

இவ்வாறெல்லாம்
பாராமுகமாய் இருப்பதுதான்,
'நமக்கு நடந்தால்
உலகமா கேட்கப்போகிறது.
நாம்தான் பழிவாங்கவேண்டும்!'
என்ற உணர்வை
ஏற்படுத்துகின்றன!

இவற்றை உணராது
வெறும் கண்டனங்களை
மட்டும் தொடுத்துக் கொண்டிருப்பது,
அர்த்தமுள்ள பணியாகாது!
பொருத்தமான தீர்வுமாகாது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## பக்திக்கோர் அனுமன்

பக்தியால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை. பக்தியின் அடிப்படை நம்பிக்கை. பக்தி சிரத்தையோடு வணங்கும் தெய்வத்தை முன்னிறுத்தி எத்தகைய சாதனையையும் நிலைநாட்டலாம்.

பக்தியால் அளப்பரிய சாதனைகளை நிலைநாட்டியவர் ஆஞ்சநேயர். இராமபிரான் மீது அளவற்ற அன்பும் நம்பிக்கையும் வைத்து பக்தி செலுத்திய அனுமன், இராமநாமத்தை ஜபித்த வண்ணம் அண்டசராசரம் அனைத்தையும் தன் உருவத்தால் நிறைத்து நின்றார். அதே இராம நாமத்தை உச்சரித்தவண்ணம் இமயமலைச் சாரலுக்கு வானில் தவழ்ந்து சென்று சஞ்சீவி மலையையே பெயர்த்து வந்தார்.

தென் இந்தியாவின் சேதுக்கரையிலிருந்து இலங்கையை வானில் தவழ்ந்தே சென்றடைந்தார். இதற்கும் அவரை ஊக்குவித்ததும் இராம நாமமே. இராவணேசனுடன் இராமபிரான் புரிந்த யுத்தத்தின்போதும், இராமபிரான் மீது கொண்ட பக்தியின் பேராற்றலால் அரும் பெரும் சாதனைகளை நிலைநாட்டினார் ஆஞ்சநேயர்.

இலங்கையில் அசோக வனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த சீதாபிராட்டியாரைக் கண்டு இராமபிரான் பற்றிய தகவலை பிராட்டியாருக்கு எடுத்துக்கூறி, அவரைத் தேற்றியவரும் ஆஞ்சநேயரே! எக்காரியத்தில் ஈடுபட்டபோதும் அவர் இராமபிரான் மீது பக்தி செலுத்தியே வெற்றிகரமாக முடித்தார். இதனால் என்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகிறார் அனுமன். அவர் மீதும் உளத்தூய்மையுடன் பக்தி செலுத்துபவர்களை எத்துன்பமும் நெருங்குவதில்லை.

ஞானேந்திரன்

## ஷைத்தான் கொண்ட அச்சம்

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்கள் இறை இல்லத்தின் வாயிலை நோக்கியபோது அங்கே ஷைத்தான் நின்று கொண்டிருந்தான். "ஓ ஷைத்தானே! நீ இங்கே நின்று கொண்டிருக்கக் காரணம் என்ன?" என்று நபி (ஸல்) அவர்கள் வினவ: "அதோ இறை இல்லத்தில் தொழுது கொண்டிருக்கிறவனை கெடுக்க முனைகின்றேன். ஆனால் உறங்கிக் கொண்டிருக்கிறாரே அவரைப் பார்த்து பயம் ஏற்படுவதால் உள்ளே நுழைவதற்குத் தயங்குகிறேன்" என்று ஷைத்தான் கூறினான்.

"தொழுது கொண்டிருக்கும் தொழுகையாளிக்குப்பயப்படாமல் ஏன் உறங்கிக் கொண்டிருப்பவருக்குப் பயப்படுகிறாய்?" என்று ஷைத்தானை நோக்கி நபி (ஸல்) அவர்கள் வினவியபோது,

"தொழுபவன் ஒரு அறிவிலி. இவன் தொழுதாலும் இவனை வழி கெடுப்பது மிக மிக சுலபம். ஆனால் அதோ தூங்கிக் கொண்டிருக்கிறாரே, அவர் மார்க்க அறிவைக் கற்றவர் என்பதால்தான் நான் அவருக்கு அஞ்சுகிறேன். அவருடைய தூக்கம் கலைந்தால் என்னால் தொழுபவனைக் கெடுக்க முடியாது போய்விடும்." என்று ஷைத்தான் கூறினான்.

ஆயிரம் வணக்க சாலிகளைவிட ஒரு மார்க்க மேதை ஷைத்தானுக்கு மிக வலிமையானவன்.

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## பரிசுக்குரிய கவிதை

### அரவணைப்பு

பூனையின்
அரவணைப்பில்
புதைந்துள்ள
வெள்ளெலியே...!
புரியாதோ உன் ஆயுள்
பூனையின் கையிலென்று!

எஸ். றெட்ணராஜ்-
ஆரையம்பதி.

## கவிதைப் போட்டி இல. 326

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### சமாதானம்

உனக்கிப்பொழுது!
எனக்கெப்பொழுது?

பெ. பாலசந்திரன்-மட்டக்குளி.

### மாறியதோ ஆறறிவு?

நகமும் சதையுமாய்
நாமிருப்போம்!
எலியும் பூனையுமாய்
மானிடர் இருக்கட்டும்!

பி.சி. அன்ரன்-மட்/ கூளாவடி.

### பசி வரும் வரைஷ!

அரசும்
தமிழ்க் கட்சியும்
பசி வரும் வரை
நட்பாக இருப்போம்.

கா. சுஜந்தன்-கிளிநொச்சி.

### கபடவேடம்?

இதமான அரவணைப்பு
இரக்கத்தால் அல்ல;
இனத்தையே
அழிக்கப்போடும்
கபட வேடம்!

மங்களா மனோரஞ்சன்-
கல்முனை-02.

### பாசவலை

உயிரோடு உனைப்பிடிக்க
இப்படியோர் பாசவலையோ?

பி. ராதாகிருஷ்ணன்-தெகிவளை.

### தேர்தல் காலம்?

புத்திசாலிப்
பூனையாருக்கு
இது தேர்தல் நேரமோ?

மா. சுதாகர்-தெகிவளை

### அறிவு!

மனிதா! நில்!
ஐந்தறிவில்-எம்
உறவைப் பார்த்தாயா?
வேணு மென்றால்-உன்
அறிவில் ஒன்றைக்
குறைத்துக் கொள்!

எம். சுயர்சன்- யாழ்ப்பாணம்.

### ஆறாவது அறிவு

ஆளை ஆள் அழிக்கும்
ஆறறிவு எதற்கு
ஐந்தறிவே போதும்
நமக்கு!

பொ. பார்த்திபன்-கண்டி.

### நம்பாதே!

விழித்தெழுந்த
வெள்ளெலியே
வேண்டாத பூனை உனை
எப்போதும்
தீண்டவரும் கவனம்!

எஸ். ஆதித்தன்-மட்டக்களப்பு.

### ஏன்?

அஃறிணைகள்
ஒன்றாயிணைந்தும்
உயர் திணைகள்
அண்டாதிருப்பதேன்?!

வை. தில்லைரூபன்-திருமலை.

### சூழ்ச்சி

அன்பின்
அரவணைப்பா...
அல்லது
அதிரடியின்
ஆரம்பமா?

சிவராம்-வவுனியா.

## கவிதைப் போட்டி இல.329



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 09.10.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.329
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



என் அன்பின் முரசே!

நீ சுமந்து வருகின்ற அனைத்து அம்சங்களும் சுப்பர். இராஜதந்திரியின் அலசலில் புளொட்டினதும், தமிழ்க் கட்சிகளினதும் நிலைமையை சிறப்பாக விளக்கியிருக்கிறாய். இனி மேலும் தமது நிலையை மாற்றாவிட்டால்... பரிதாபமே. மற்றும் அனைத்து அம்சங்களும் அருமை! அருமை!!

பி. கரன், திருச்சி-21.

## முதல் ஆயுதம்

அன்பு முரசே!

கல்லோயாக் குடியேற்றம் பற்றிய இராஜதந்திரியின் அலசலில் அற்புதமான தகவல்கள் தரப்பட்டன. முதன் முதலாக குடியேற்றத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தியவர்கள் துறைநீலாவணை மக்கள் என்பது பெருமைக்குரிய தமிழ் மக்களது முதலாவது, அதாவது 1948ம் ஆண்டின் பின்னர் முதலாவது ஆயுதப்போர்-அதுதான் என்பதும் சிறப்பு.

இ. வாமதேவன், மட்டக்களப்பு.

## அதே பாணியில்

'சந்திக்கு வராத சங்கதிகள்' நக்கீரன் தரும் சங்கதிகளுக்கு பாராட்டு. முரசில் எது வந்தாலும் சிறப்புத்தான். அதனால் தான் ஏனையோரும் அவற்றைப் பின்பற்றி அதேபாணியில் தாமும் செய்கிறார்கள். பின்னர் முரசையும் சாடுவார்களப்பா!

செல்வி வி. சியாமளா,
கொழும்பு-06.

அன்புள்ள முரசுக்கு,

'ரெலோ தாக்கப்பட்டதை தமிழ்க் கட்சிகள் கண்டிக்கவில்லை.' என்று நக்கீரன் விளக்கியிருந்தார். அப்பாவி மக்கள் காரணமே இன்றிக் கைதாவதையும், படுகொலை செய்யப்படுவதையும் கண்டும் காணாமல் தூங்கும் தமிழ்க் கட்சிகள் இதையா கண்டிக்கப் போகிறார்கள்?

க. சித்ரா, திருக்கோவில்.

## நிழலாக வந்தது

குடியேற்றத் திட்ட பொன்விழாவை அம்பாறையில் கொண்டாடிய பின்புதான் 'வீரவிதான' இயக்கம் இங்கும் புகுந்தது. பேரினவாதத்தைத் தூண்டி வருகிறது. அப்படியாயின் கொண்டாட்டம் நடத்தியவர்களது நிழலாகத்தானே இந்த இனவாத அமைப்பு இருக்க வேண்டும்? பின்னணியில் நிற்பவர் யார் என்று முரசு சூசகமாக சுட்டிக்காட்டியது சரிதான்.

ஏ. சித்திரன், அம்பாறை.

## தான் பிரீன்

முரசே!

உன் தொடர்கள் யாவும் தித்திப்பு. 'வீரன் தான் பிரீ'னின் தொடர் விறுவிறுப்பு. கிணற்றுத் தவளைகளாக இருக்காது, உலகப் போராட்ட அனுபவங்களை நாமும் அறிய வேண்டும். 'தாய்', 'தூக்குமேடைக் குறிப்பு', சேகுவேரா வரலாறு போன்றவற்றைத் தந்தாய். இப்போது தான் பிரீனைத் தருகிறாய். உனது பணி தூற்றுவோரால் பிரபலமாகிறது. போற்றுவோராலும் பிரபலமாகிறது.

எஸ். மகேந்திரன்,
கொழும்பு-10.

## நேற்று இன்று

முரசே!

நேற்று கல்லோயா, இன்று வலிகாமம். தமிழ்பேசும் பாரம்பரிய பூமி முழுவதையும் விழுங்குவதற்கு திட்டங்கள் நீள்கின்றன. தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. இவற்றைத் தட்டிக் கேட்டு, எதிர்த்து நிற்க வேண்டியவர்கள் வாயமூடி நிற்கிறார்களே.

ஆ. அருணாசலம், திருமலை.

இனிய முரசே!

பன்னிரண்டாம் பக்கத்தில் நீ தருபவை படங்கள் அல்ல பாடங்கள்! அவற்றுக்கு நீ தரும் விளக்கங்கள் நோத்தியாக உள்ளன. உனது பணி தொடரட்டும்.

இ. பார்த்திபன், வவுனியா.

முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்.

- ★ ஆர். கிருஷ்ணன், மத்துகம.
- ★ சரவணமுத்து நவேந்திரன், வெல்லாவெளி.
- ★ ஈஸ்வரன் அம்மான், பூந்தோட்டம்.
- ★ ஆர். சுரேக்கா, மாபோலை, வத்தளை.
- ★ ஆர். அசோக்குமார், டிக்கோயா.
- ★ ஏ. சதாம், வவுனியா.
- ★ கே. நாகேந்திரன், புத்தளம்.
- ★ மர்லியா முஹாஜிரீன், மீவலதெனிய.
- ★ எல்.டி. பிரகாஷ், வவுனியா.
- ★ ரி. துரையப்பா, நுவரெலியா.
- ★ குமாரசாமி தயாழினி, வாழைச்சேனை.
- ★ செல்வி புஸ்பராணி தேவராஜ், சைப்பிரஸ்.
- ★ பி. சூரி, தெகிவளை.
- ★ எல். மனோஜ்குமார், மாத்தளை.
- ★ சு. தேவன், யாழ்ப்பாணம்.
- ★ தி. செனலோஸ் ராஜபால், மன்னார்.
- ★ பா. சசிகலா தேவி, வத்தளை.
- ★ திருமதி சி. ஜெயகுமாரி, மட்டக்களப்பு.
- ★ சிந. தண்டாயுதபாணி, கிளிநொச்சி.
- ★ மா. முருகதாஸ், மட்டக்களப்பு.
- ★ க. டினேஸ், வட்டக்கச்சி.
- ★ பீ. நளன், முள்ளியவளை.
- ★ சு. சேதுபதி ஜீவரட்ணம், கிளிநொச்சி.
- ★ தேவராஜா அச்சுதன், முழங்காவில்.
- ★ ஆர். குமார், அமெரிக்கா.
- ★ பி. ராஜேந்திரன், கனடா.
- ★ எஸ். இளங்கோ, ஜெர்மனி.
- ★ மு. கௌரிதாஸ், கனடா.
- ★ ஆ. உதயகுமார், சுவிற்ஸர்லாந்து.
- ★ எம். ரகுநாதன், நோர்வே.
- ★ தமிழரசன், தம்பிலுவில்.
- ★ ரா. கேசவன், ஃபிரான்ஸ்.
- ★ ரி. கோகிலராணி, மாங்காடு.
- ★ கே. மஞ்சுளா, மணல் தோட்டம்.
- ★ ஆர். கிருபாகரன், வவுனியா.
- ★ சி. பிரேம்தாஸ், மட்டக்களப்பு.
- ★ சி. சிவகௌரி, சாவகச்சேரி.
- ★ ஜே. பிரின்ஸ், கொழும்பு-12.
- ★ ஜெ. பிரகாஷ், குவைட்.
- ★ பிரகாழினி, இரஜவெல்ல.
- ★ சு. தனராஜ், கட்டுநாயக்க.
- ★ ஆர். மலர்வதனி, மட்டக்குளி.
- ★ மா. அருள்தாஸ், ஜப்பான்.
- ★ கோ. சுமதி, கனடா.
- ★ வி. ரவிக்குமார், அவுஸ்திரேலியா.
- ★ மா. தியாகரூபன், மலேசியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

www.padippakam.com

# பஸ் வண்டிகளில் குண்டு வெடிப்பு!

# கலவரத்தைத் தூண்டும் சதியா?

சமீபத்தில் நீர்கொழும்பு, தங்கொட்டுவ ஆகிய பகுதிகளிலும், பதுளையிலும் பஸ் வண்டிகளில் குண்டுகள் வெடித்துள்ளன.

இக் குண்டு வெடிப்புக்கள் மூன்றிலுமாக 71 பயணிகள் காயமடைந்தனர். இருவர் பலியானார்கள்.

இவற்றில் நீர்கொழும்பு, தங்கொட்டுவ ஆகிய பகுதிகளில் 22.09.99 அன்று பஸ்களில் குண்டு வெடித்தன.

இத்தினத்தில்தான் வீரவிதான உட்பட நான்கு சிங்கள அமைப்புக்கள் தமது சமாதான எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகும் தினம் என்று அறிவித்திருந்தன.

அதனை முன்னிட்டு 22.09.99 அன்று கொழும்பில் ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

எனவே குறிப்பிட்ட சிங்கள தீவிரவாத அமைப்பு ஒன்று குண்டு வெடிப்புக்களது பின்னணியில் உள்ளதா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இவ்வாறு பயணிகள் பஸ்களில் குண்டுகள் வெடித்தால் சிங்கள மக்களிடையே தமது பிரசாரங்களை மேற்கொள்வது சுலபம் என்றும், தமக்கு ஆதரவான நிலை உருவாகும் என்றும் குறிப்பிட்ட அமைப்புக்கள் கருதியிருக்கலாம் என்று சந்தேகம் வலுத்துள்ளது.

## வீரவிதானவின் அச்சுறுத்தல் அதிகரிப்பு

சிங்கள தீவிரவாத அமைப்பான வீரவிதானவில் முன்னாள் படைவீரர்கள் உட்பட இந்நாள் சீருடையினர் சிலரும் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்குடியிருப்பு தாக்குதலுக்குப் பதிலடியாக கோணகலவில் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதன் பின்னர் பஸ்வண்டிகளில் குண்டுகளை வைக்கும் அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டிருக்காது என்பதே அரசியல்-இராணுவ விமர்சகர்கள் பலரது கருத்தாகும்.

### அதிகாரி கைது

நாட்டில் கலவரத்தை தூண்ட முனையும் சக்திகளிடமும் ஆயுதங்களும், வெடி பொருட்களும் தற்போது தாராளமாக உள்ளன.

இதுதவிர படையில் இருந்து தப்பி ஓடியவர்கள் ஏராளமாக உள்ளனர். அவர்கள் ஆயுதங்களையும் களவாடி விற்றுமுள்ளனர்.

அண்மையில்கூட இராணுவ அதிகாரி ஒருவர் வெடிகுண்டுகளை வெடிக்க வைக்கும் கருவிகளை முகாமிலிருந்து களவாடிக் கொண்டு சென்றபோது கைது செய்யப்பட்டார்.

இந்த இராணுவ அதிகாரி யாருக்காக அவற்றைக் கொண்டு சென்றார்? என்ற விபரங்கள் இதுவரை வெளியாகவில்லை. இவ்வாறான அதிகாரிகளுக்கும் சிங்கள தீவிரவாத இயக்கங்களுக்கும் தொடர்பு இருக்கவும் வாய்ப்பு உள்ளது.

இவற்றின் பின்னணியிலேயே பஸ்வண்டிகளில் குண்டு வெடிப்புக்களுக்கு சிங்கள தீவிரவாத அமைப்புக்களே காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் பெரிதாகி இருக்கிறது.

இதேவேளை வீரவிதானவின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### கண்துடைப்பு

மலையகப் பகுதிகளில் தமிழ் எழுத்துக்கள் வீரவிதானவால் அழிக்கப்பட்டன. அம்பாறையில் தமிழ், முஸ்லிம் மக்கள் எச்சரிக்கப்பட்டனர். இவை பற்றி எவ்வித விசாரணையும் நடந்ததாகத் தெரியவில்லை.

ஏற்கனவே இ.தொ.கா. அலுவலகத்திற்குள் புகுந்து கொடி எரித்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் கூறியிருந்தது. அவ்வாறு எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வீரவிதான பற்றி அரசாங்கத்திலும், எதிர்க்கட்சியிலும் உள்ள சில உறுப்பினர்கள் கண்டித்து உரையாற்றுகின்றனர். இது வெறும் கண்துடைப்பே என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

மேற்கண்ட உறுப்பினர்களுக்கு தமது தரப்பில் இருந்து வீரவிதானவுக்கு உதவுபவர்கள் யார் என்பது நன்கு தெரியும் என்கிறார்கள் விமர்சகர்கள்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வீரவிதான உட்பட நான்கு அமைப்புக்களது ஆர்ப்பாட்டத்தில் கூட்டம் அதிகம் இருக்கவில்லை.

இதற்கு முன்னர் வீரவிதான நடத்திய கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். புலிகள் தாக்கக்கூடும் என்ற அச்சம் தான் இம்முறை கூட்டம் குறையக் காரணமாகும். கோணகல தாக்குதலை அடுத்து இந்த அச்சம் ஏற்பட்டிருந்தது.

## சட்டத்திற்கு புறம்பான விதிகள்!

### எதிர்த்து கேள்வி கேளோம் என நினைத்தனரா?

"யாழ் குடாநாட்டுக்குச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என்பது சட்ட பூர்வமான ஒன்றல்ல என்பது தெளிவாகிவிட்டது. தமிழர்கள் எதிர்த்துக் கேள்வி கேட்கமாட்டார்கள் என்று நினைத்துத்தான் தம்மிஷ்டப்படி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

எனக்கு யாழ் செல்ல அனுமதி மறுக்கப்பட்டமைக்காக நான் தொடுத்துள்ள வழக்கு முழு தமிழ் மக்கள் சார்பாகவுமே தொடுக்கப்பட்டுள்ளது. நாம் தமிழர்கள். எங்களுக்கும் சட்டம் தெரியும். எல்லாவற்றுக்கும் பணிந்து கொண்டே போனால் குனிந்துதான்-கூனித்தான் நிற்கவேண்டியிருக்கும்!" இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் முரசுக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தபோது இவ்வாறான சட்டத்திற்குப் புறம்பான ஒரு விதியின் பிரகாரம் இதுவரை பல ஆயிரம் தமிழர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காகக் காத்துக் கிடக்க நேர்ந்தது. ஐயாயிரம் ரூபா பணம் கொடுத்து அனுமதி இன்றியே பயணச்சீட்டு பெறப்பட்டவற்றையும் என்னால் நிரூபிக்க முடியும். என்றும் குமார் பொன்னம்பலம் கூறினார்.

## யாழில் மரண தண்டனை

### தகவல் கொடுத்தவருக்குச் சூடு!

யாழ் குடாநாட்டில் புலிகளால் மரண தண்டனை ஒன்று விதிக்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டில் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்தவர் வைத்திலிங்கம் மதியாபரணம்-வயது 51. ஐந்து பிள்ளைகள் உள்ளனர்.

இவர் உரும்பிராய் கற்பக பிள்ளையார் கோவில் முன்பாக கடை ஒன்று வைத்துள்ளார். வாடகைக் கார் ஒன்றும் வைத்திருந்தார்.

23.09.99 அன்று மாலை இவரது வீட்டுக்குச் சென்று இளைஞர்கள் சிலர் மதியாபரணம் எங்கே என்று விசாரித்தனர்.

அவர் கடையில் நிற்பதாக வீட்டில் கூறியதால், கடைக்குச் சென்றனர். மதியாபரணம் தோட்டத்தில் நிற்பதாக கடையில் கூறினராம். தோட்டத்திற்குச் சென்று மதியாபரணத்தை அழைத்தனர்.

கார் வாடகைக்குத் தேவை என்று கேட்டுள்ளனர். அவர்களுடன் மதியாபரணமும் புறப்பட்டுப்போயிருக்கிறார். தனியான இடம் ஒன்றில் வைத்து பிஸ்டலால் சுட்டுள்ளனர். மார்பிலும், கழுத்திலும் சூடுகள் விழுந்துள்ளன. மதியாபரணம் பலியாகிவிட்டார்.

மதியாபரணத்தின் மகளது பூப்புனித நீராட்டு விழாவில் படையினர் கலந்து கொண்டனராம். ஊரடங்கு நேரத்திலும் படையினரின் அனுசரணையோடு மதியாபரணத்தின் கார் ஓடித்திரியுமாம். உரும்பிராயில் பலியான புலிகள் சிலர் தொடர்பாகவும் இவர்தான் தகவல் கொடுத்தாராம். ■

## உதவியவர் சுட்டுக் கொலை

மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் மன்னார்த் தீவுப் பகுதியில் புலிகளினால் பொது மகன் ஒருவருக்கு, தேசத்துரோகச் செயலில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டின் பேரில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மணிக்குமார் என அழைக்கப்படும் சுப்ரமணியம் இராஜரட்ணம் (வயது-41) என்பவரே மரண தண்டனை பெற்றவராவார்.

கடந்த 05.09.99 ஞாயிற்றுக்கிழமையன்று தாராபுரம் சந்தியில் இச்சம்பவம் நடைபெற்றது.

இதுபற்றி முரசுக்கு தற்போது கிடைத்துள்ள தகவல்கள் வருமாறு:

மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட மணிக்குமார் முன்னாள் புலிகளின் தீவிர ஆதரவாளராக செயற்பட்டவராவார். அண்மைக் காலமாக படையினருடனும், பொலிஸாருடனும் மிக நெருங்கிய உறவுவைத்திருந்தார்.

கடந்த 05.09.99 இரண்டு சைக்கிள்களில் மன்னார் வந்த புலிகள் இவரைக் கடத்திச் சென்றனர். மாலை 5.10 மணியளவில் தாராபுரம் சந்தியில் வைத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்பு அப்பகுதியால் சென்ற புலிகள் "காட்டிக் கொடுக்கும் தேசத் துரோகிகளுக்கு இதுதான் தண்டனை!" எனக் கூறிச் சென்றனர். ■

## அம்மன் ஆலயம் சுற்றிவளைப்பு!

அம்பாறை கோணகல பகுதியில் உள்ள குடியேற்றவாசிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மல்வத்தை விவசாய பயிற்சி பாடசாலையில் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆயுதத்தை இயக்குவது எப்படி என்பதை அவசரமாக செய்து காண்பித்தனர்.

இந்த அவசரப் பயிற்சி முடிந்த குடியேற்றவாசிகளது ஊர்க்காவல் படையினர் 25.09.99இல் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தில் சுற்றிவளைப்பில் ஈடுபட்டதாக அறியப்படுகிறது.

பச்சை உடை அணிந்த இந்த ஊர்க்காவல் படையினர் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வேலைகளில் இறங்கியுள்ளனர்.

1994ம் ஆண்டு கோணகலவில் இருந்து வெளியேறிய சிங்களவர்கள் பலரும் கோணகலவுக்கு அழைக்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்பட்டதாக்க் கூறப்படுகிறது. ■

## தோல்விக்குப் பொறுப்பேற்ற அதிகாரி

### ரணகோஷ 05-132 படையினர் பலி

செப்டம்பர் 12ம் திகதி மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ 05 நடவடிக்கையில் 132 படையினர் உயிரிழந்தனர். 950 பேர் காயமடைந்தனர்.

ரணகோஷ 05 நடவடிக்கைக்கு எதிரான முறியடிப்புச் சமரை பிரபாகரனே நேரடியாக நெறிப்படுத்தியுள்ளதாக படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர்.

ரணகோஷ 05 தோல்வி அடைந்தமைக்கு படையணியின் உயர் அதிகாரி ஒருவர் பொறுப்பு ஏற்றுள்ளார். அரசியல் ரீதியான அழுத்தம் காரணமாகவே இந் நடவடிக்கையை தான் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட தகவல்களை கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ளது.

இராணுவ ரீதியான நிலமைகளை ஆராய்ந்து, நடவடிக்கையில் இறங்குவதை விடுத்து, அரசியல் அழுத்தங்களுக்காக நிர்ப்பந்திக்கப் படுவதால்தான் இந்த யுத்தம் 17 வருடங்களாக முடிவில்லாமல் தொடர்கிறது என்றும் சண்டே ரைம்ஸ் கட்டுரையாளர் கூறியுள்ளார். ■

## போலி வைத்தியர் புலிகளிடம்!

மட்டக்களப்பு-செங்கலடியில் பாமசியை வைத்துக் கொண்டு தன்னை டாக்டர் என போலியாகக் காட்டிக் கொண்ட நபரொருவரை புலிகள் வழிமறித்துக் கடத்திச் சென்றனர்.

கடந்த 21.09.99 அன்று மாலை 5.20க்கு அந்நபர் பஸ்ஸில் செல்லும்போது வழிமறித்து பஸ்ஸில் ஏறிக் கொண்ட புலிகள் குழுவினர், பஸ்ஸின் சாவிக் கொத்தைப் பறித்துக் கொண்டு சம்பந்தப்பட்ட நபரை பஸ்ஸிலிருந்து இறக்கி எடுத்துக் கொண்டு பஸ் சாவியைக் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள மைலம்பாவெளியில் வைத்தும் இதே பஸ்ஸை வழிமறித்த புலிகளின் வேறொரு குழுவினர், அங்கும் குறித்த நபரை விசாரித்தனர். அவர் செங்கலடியில் இறக்கப்பட்டு விட்டார் என்றதும் புலிகள் இறங்கிச் சென்றனர்.

தங்களை வந்து சந்திக்குமாறு புலிகள் பல முறை விடுத்த வேண்டுகோளை இந்நபர் உதாசீனம் செய்திருந்தாராம்.

முன்னர் ஒருமுறை இவர் மோட்டார் சைக்கிளில் வரும்போது புலிகள் வழிமறித்தனர். அவ் வேளையில் இவர் புலிகளின் கையைத் தட்டிவிட்டு தப்பி ஓடிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. ■

## தங்கச் சங்கிலியும்-கண்ணிவெடி வயரும்!

மட்டக்களப்பு நகரப் பகுதியில் உள்ள சில பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் அவ்வப்போது கூடி விருந்துண்பது வழக்கம்.

மட்டக்களப்பு கோப்-இன் விடுதியில் வழக்கமான பாணியில் மூன்று பொலிஸ் காவல் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் கூடினர். 26.09.99 அன்றிரவு அந்த விருந்து நடந்தது.

உற்சாக பானம் அதிகரித்த நிலையில் அங்கிருந்த சீருடை பொறுப்பதிகாரிகள் இருவருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. அது மேலும் தீவிரமடைந்து சேட்டின் கொலரில் பிடித்திழுக்கும் அளவுக்குச் சென்றது. அதனால் அவரின் கழுத்தில் அணியப்பட்டிருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியில் பாதி அறுந்து விட்டது. ஆனாலும் யாரும் அதை அங்கு கவனிக்கவில்லை.

ஏனைய அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு நிலைமையைச் சமாளித்து தர்க்கப்பட்ட அதிகாரிகளை அனுப்பி வைத்தனர். அந்த இராப்பொழுதில் அங்கிருந்த ஓட்டோவில் ஒரு அதிகாரி சென்றார். மயக்கம் தெளிந்த அதிகாரி கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைப் பார்த்தார். பாதிதான் இருந்தது. மீதியைக் காணவில்லை.

நள்ளிரவு 2 மணியளவில் ஓட்டோக்காரரை வந்து விசாரித்தார்கள். அங்கும் சங்கிலி இல்லை.

பின்னர் அதிகாலை 4 மணியளவில் இருந்து விருந்துபசாரம் நடந்த கோப்-இன் விடுதியைச் சூழ்ந்து கொண்டு அங்கு கண்ணி வெடிபொருத்தப்பட்ட வயர்கள் இருப்பதாக தேடுதல் நடத்தப்பட்டது.

ஆனால் உண்மையில் கண்ணிவெடி வயர்கள் இருப்பதாகக் கூறி தொலைந்து போன தங்கச் சங்கலியின் பாதியையே தேடினார்களாம். எனினும் கண்டு பிடிக்க முடியவில்லையாம். ●

## பயணிகள் பஸ்ஸில் படையினர்

### பயணம் செய்ய அச்சம்

மன்னார்த்தீவுப் பகுதியில் அண்மைக் காலமாக புலிகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதையடுத்து பாதுகாப்புத் தரப்பினர் உஷாராகி வருகின்றனர்.

மன்னார்-பூநகரி நெடுஞ்சாலையைக் கைப்பற்றும் நோக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் ரணகோஷ நடவடிக்கையை திசை திருப்பும் நோக்கிலேயே தீவுப் பகுதியில் தாக்குதல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

இதற்கென புலிகளின் விசேட அணியொன்று மன்னாருக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நகருக்குள் பிஸ்டல் குழுவும் நடமாடி வருகிறது. இதனால் தாக்குதல் சம்பவம் தொடரக்கூடும்.

கடந்த 24.09.99 அன்று தலைமன்னாரிலிருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த 29 ஸ்ரீ-116 இலக்கமுடைய பயணிகள் பஸ்மீது நடுக்குடாப் பகுதியில் மறைந்திருந்த புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஒரு கடற்படை வீரர் ஒரு பொலிஸார் ஆகியோர் கொல்லப்பட்டதுடன், 2 பொலிஸாரும், 3 பொதுமக்களும் காயமடைந்தனர்.

பயணிகள் பஸ்ஸில் படையினர் பயணம் செய்வது முன்னரைவிட தற்போது அதிகரித்துள்ளது. படையினருடன் பஸ்ஸில் பொது மக்களை பயணம் செய்ய வேண்டாமென புலிகள் முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் தலைமன்னார்-மன்னார் பஸ் சேவை மிகவும் குறைவாகவுள்ளதால் பயணிகள் இந்த பஸ்களையே நாடவேண்டியுள்ளது. தற்போது படையினருடன் வரும் பஸ்களில் பொதுமக்கள் பயணம் செய்ய அஞ்சுகின்றனர்.

இதேவேளை தாக்குதலின் மறுதினம் மன்னார் டிப்போவுக்கு வந்த படையினர் தமது தேவைக்காக பஸ் ஒன்றைத் தருமாறு கேட்கவே, தாக்குதலுக்கிலக்கான 29 ஸ்ரீ-116 இலக்க பஸ்ஸை கொடுத்தனர். படையினர் சந்தோசத்துடன் பஸ்ஸை எடுத்துச் சென்று பயன்படுத்தி வருகின்றனர். ●

## புலனாய்வாளர்மீது புலிகள் பாய்ச்சல்

முன்னாள் புளொட் இயக்க உறுப்பினரும் இறக்கும்வரை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் வழங்கிக் கொண்டிருந்தவருமான கே.கோபாலபிள்ளை (35) சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த 21.09.99 மாலை 7.20 மணியளவில் இவர் மட்டக்களப்பு நகரில் சென் மைக்கல் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள பேக்கரிக்கு முன்னால் வைத்துப் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுடப்பட்டார்.

இவர் தனது குழந்தையுடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது வழி மறித்த புலிகள் பிஸ்டலை உருவிச் சுட்டுவிட்டு சத்தமில்லாமல் தப்பிச் சென்றனர்.

'இன்ற் மாமா' என்று அழைக்கப்பட்ட கோபாலபிள்ளை முன்னர் முனாஸ் எனும் அக்கிரமம் புரிந்த கூட்டத்தவருடனும், பின்னர் புளொட் இயக்கத்திலும், இறக்கும்வரை கொழும்பு இராணுவ புலனாய்வுப் பிரிவிலும் சேர்ந்து பணியாற்றினார் என்று தெரிய வருகிறது.

இறந்தவரின் மனைவி மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கடமை புரிகிறார். கணவர் புலனாய்வுப் பிரிவில் இருந்தார் என்பதால் வைத்தியசாலையிலும் சக ஊழியர்கள், வைத்தியர்கள் எல்லோரும் அடக்கப்பட்டே இருந்தார்களாம். வைத்தியசாலைச் சீருடையின்றி அவர் விரும்பியவாறு உடையணிந்தே கடமைக்கு வருவதுண்டாம் என்று வைத்தியமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ●

## உழவு இயந்திரம் கடத்தல்

ஏறாவூர் நகர பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று அதன் இழுவைப் பெட்டியுடன் புலிகளால் கடத்தப்பட்டது. புலிகள் ஏறாவூர் நகருக்குள் வந்தே உழவு இயந்திரத்தைக் கடத்திச் சென்றனர்.

உரப்பைக்குள் துப்பாக்கிகளை மறைத்து வைத்துக் கொண்டு சைக்கிளில் வந்த புலிகள் உழவு இயந்திரம் குறிப்பிட்ட இடத்திற்கு வருமென காத்திருந்து கடத்திச் சென்றனர்.

23.09.99 அன்று காலை 9 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

சில வருடங்களுக்கு முன்னரும் ஏறாவூர் நகர பிரதேச சபைக்குச் சொந்தமான மற்றுமொரு உழவு இயந்திரத்தையும் கடத்திச் சென்றது நினைவிருக்கலாம். ●

## சமாதான நகரில் சோதனை!

### புது விதிகளும் அமுல்

சமாதான நகரப் பிரகடனத்தை அறிவித்த பின்னர், திருக்கோணமலையில் குடியிருப்பாளர் பதிவுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருக்கோணமலை, உப்புவெளி குச்சவெளிப் பொலிஸ் பிரிவுகளில் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட படிவங்கள் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டு, புதிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய பதிவுகளில் ஏற்கனவே அமுலில் இருந்துவரும் சமாதானக் குழுக்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலை தலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் 12 சமாதானக்குழு வலயங்களாகப் பிரிக்கப்பட்ட பழைய பதிவு அட்டைகளில் குழுத்தலைவரின் கையொப்பம் முக்கியமாகப் பெறப்பட்டிருந்தது. தற்போது இந்த நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிலாவெளிப் பகுதியில் உள்ளோருக்கு இராணுவத்தால் வழங்கப்பட்டு வரும் அடையாள அட்டைகளைப் புதுப்பிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலிருக்கும் அடையாள அட்டை மிக அண்மைக் காலத்திலேயே பொதுமக்களுக்கு வழங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

காவலரண்களிலும் சோதனைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சைக்கிளோட்டிகளை கட்டாயமாக இறங்கிச் செல்லுமாறு பணிப்பதில் காவலரண்களில் உள்ள பொலிஸார் மகிழ்ச்சியடைகிறார்கள்.

சமாதான நகராகப் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் கெடுபிடிகளும், புதுவிதிகளும் தீவிரமாகியுள்ளதாக தமிழ் பேசும் மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். ●

## கரும்புலிக்கு சிலை

மட்டக்களப்பு-வாகரை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த இலங்கை இரண்டாவது காலாட்படையின் இரண்டாவது ஆணையிடும் அதிகாரியான மேஜர் கருணாநாயக கரும்புலியால் கடந்த 09.08.99 அன்று கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பாலசிங்கம்-ஆனந்தன் அல்லது மேஜர் இரட்ணா என்றழைக்கப்படும் கரும்புலியே மேற்படி தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டு பலியானார்.

அவரது நினைவாக பலியான 41ஆம் நாளன்று புலிகள் அவரின் சிலையைத் திறந்து வைத்துள்ளனர்.

புலிகளின் நிர்வாகப் பகுதியிலுள்ள மட்டக்களப்பு-பதுளை வீதி இலுப்பயடிச் சேனையில் கரும்புலியின் சிலை திறப்பு வைபவம் இடம் பெற்றது.

புலிகளின் முக்கியஸ்தர்களும், கரும்புலியின் குடும்பத்தினரும், மற்றும் பொது மக்கள் பலரும் வைபவத்தில் கலந்து கொண்டனர். ●



படிப்பகம்

www.padippakam.com

# கண்டியில் பலர் கைது

(கண்டி நிருபர்)

தோட்டப் புறங்களை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதைகளையும் தேயிலைத் தொழிற்சாலைகளையும் ட்ரான்ஸ் போமர் களையும் குண்டு வைத்துத் தகர்க்கும் நோக்கில் தோட்டப்புறங்களுக்குள் புகுந்திருக்கும் போராளிகள் குறித்து மலையகப் பொலிஸார் உஷார் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் அட்டன் நகரின் ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்த இரு பெண்களும் ஒரு ஆணும் விசேட பொலிஸ் குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவர்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து வந்தவர்கள் ஆவர். இவர்கள் பொலிஸாருக்குத் தெரிவித்திருக்கும் தகவலின் அடிப்படையில் 'சுதாகரன்' என்ற பெயரை உடையவரிடம் வெடி பொருட்கள் அடங்கிய எட்டுப் பார்சல்கள் இருப்பதாகவும் அவர் எங்கு தங்கி இருக்கின்றார் என்ற விபரம் தமக்குத் தெரியாதெனவும் கூறியதாக பொலிசார் கூறுகின்றனர்.

இதேவேளையில் சுமார் 18 வயதும் 19 வயதும் நிரம்பிய இரு தமிழ் யுவதிகள் தமிழ்நாட்டு அகதி முகாமில் இருந்து வந்து நாவலப்பிட்டியில் தங்கியிருந்தபோது, சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதுடன் இவ்விருவரும் கம்பளையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

## முதலாவது சஞ்சிகை

(நமது நிருபர்)

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 50 வருடகால வரலாற்றில் முதற் தடவையாக வர்த்தக ஆசிரியர் ஒன்றியத்தினால் 'வணிகத் தாரகை' எனும் பெயரில் புதிய சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது.

இச் சஞ்சிகையின் வெளியீட்டுவிழா வைபவம் கடந்த 08.09.99 அன்று கலாசாலை ஆராதனை மண்டபத்தில் விரிவுரையாளர் எம்.ஐ. அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்றது. தலைமையுரையினை பயிற்சியாசிரியர் ஏ.எஸ்.எம். சிஹாம் நிகழ்த்த சஞ்சிகைக்கான அறிமுக உரையினை விரிவுரையாளர் எம்.ஐ. அப்துல் லத்தீப் வழங்கினார்.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கலாசாலை முதல்வர் எம்.எஸ்.நெய்னா முஹம்மட் கலந்து சிறப்பித்தார். சஞ்சிகைக்கான ஆய்வுரையினை அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலய அதிபர் எம்.ஐ.ஏ. சஹாப்தீன் நிகழ்த்தினார்.

'வணிக தாரகை' இதழாசிரியர் எம்.எஸ். இர்பான் சஞ்சிகைக்கான பதிலுரையினை வழங்கினார்.

# புத்தகங்கள் மாயம்!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு-கல்லடி விவேகானந்தா மகளிர் கல்லூரியிலுள்ள நூலகத்தில் இருக்க வேண்டிய அதிக எண்ணிக்கையான புத்தகங்கள் மாயமாய் மறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த வாசிகசாலையில் மாணவிகளின் பாவனைக்கான பல பெறுமதிமிக்க புத்தகங்கள் பாடசாலை உயரதிகாரிகளின் சொந்தப் பாவனைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனவாம். ஆனால் அவை பற்றி நூலகத்தில் எதுவிதமான பதிவுகளுமில்லா வண்ணம் மறைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

நூலகத்தில் இருக்கவேண்டிய புத்தகங்கள் பலவற்றின் விவரங்களும், கணக்கெடுப்புக்களும் இல்லாததால் புதிதாக நியமனம் பெற்றுள்ள நூலக உத்தியோகத்தர் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறார். இதுபற்றி அவர் பாடசாலை அதிகாரிகளுக்கு அறிவித்துமுள்ளார்.

கல்வி சம்பந்தப்பட்ட மேலதிகாரியின் ஒத்துழைப்புடனேயே இந்த நூலகத்திலிருந்த புத்தகங்கள் மாயமாய் மறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மலையகத்தில் வீரவிதான தீவிரம்

(கண்டி நிருபர்)

'சிங்களவரே! வீறு கொண்டெழுங்கள்!' என்ற பதம் எழுதப்பட்ட மஞ்சள் நிற போஸ்டர்களும் கண்டி நகரில் ஒட்டப்பட்டிருக்கின்றன. அநகாரிக தர்மபாலா நினைவாகவே இவை இப்படி ஒட்டப்பட்டிருக்கின்றன.

சிங்கள வீரவிதான இயக்கத்தின் செயற்பாடுகள் இப்பொழுது மலையகம் எங்கும் விரிவுபடுத்தப்பட்டும் வருகின்றன.

கம்பளை, பேராதனை, ஹரிஸ்பத்துவ, குண்டசாலை, பாத்ததும்பறை, தெல்தெனிய, அட்டன் போன்ற பல இடங்களில் கிளை அமைப்பு அமைக்கப்பட்டு பொதுக் கூட்டங்களையும் நடாத்துவதுடன் சிறுபான்மை மக்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களையும் மஞ்சள் தாளில் பிரசுரம் செய்து வருகின்றனர்.

அட்டன் ஸ்ரீபாத கல்விக் கல்லூரிக்கு மலையக தமிழ் மாணவர்களை டிப்ளோமா கல்வித் தர பயிற்சிக்கு அனுமதிக்கும் மூன்று வருடகால நெறிக்கான 130 புள்ளிகளை அதே மட்டத்தில் சிங்கள மாணவர்களையும் அனுமதிக்குமாறும் வீரவிதான அமைப்பு துண்டுப்பிரசுரம் மூலம் வலியுறுத்தியுள்ளது.

விளம்பரப் பகுதி


என்றும் முதல் தரம் 'சன்வே' கிரா.பிக்ஸ்

Sunway GRAPHICS

Photographer, Videographer, Wedding Album Makers, Laminating and Duragard

Contact: K.S. JAYAKODI (MANI)
25/1A, Sagara Road, Bambalapitiya. Colombo-04.
Tel: 597879 Hot Line: 0722-72119.

SPOKEN ENGLISH

By K.M.N. NALRAVI

யாருக்காக?

- தொழில் புரிபவர்களுக்காக.
- 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
- வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக
- இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒரு வகுப்பில் 20 மாணவர்கள் மட்டும்
- ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட கவனம்
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி. ● அடிப்படையிலிருந்து இலக்கணம்
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள். ● Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி ●வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassette கள்
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

குறிப்பு: ● பழைய மாணவர்களுக்கு Diploma வகுப்புகள் ஆரம்பம்
● அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
● புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06.(Hotel Ceylon Innsக்கு அருகில்)

TNT GRAFIX

குரு புக்ஸ் – லண்டன்

ஐரோப்பாவில் தலைசிறந்த புத்தக விற்பனையாளர்கள்.

எங்களிடம் இந்தியா, இலங்கை வெளியீடுகள், பிரபல தமிழ் எழுத்தாளர் நாவல்கள், வைத்தியம், ஜோதிடம், இந்து சமயம், யோகம், குழந்தைகள் நூல்கள், ஆங்கிலம் தமிழ் அகராதிகள், பத்திரிகை- சஞ்சிகைகள் அனைத்தும் மொத்தமாகவும் கிடைக்குமிடம்

GURU BOOKS
LOTUS HOUSE, 106 DRUMMOND STREET,
LONDON N.W.1-2HN (U.K.)
Phone: (0171) 388-3939- Fax (0171) 387-0778

TINY TOTS' MONTESSORI

USING AMI MONTESSORI METHOD AND PRE SCHOOL METHOD

2000ம் ஆண்டுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- முதலாவது மொழி ஆங்கிலம். இரண்டாவது மொழி தமிழ்/சிங்களம்.
- குறிக்கப்பட்ட அனுமதிகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வயதெல்லை 2 1/2 வருடம் முதல் 4 வயது வரை.
- அனுமதிகளை டிசம்பர் 10க்கு முன்பு பெற்றுக்கொள்ளவும்.

ACA 55, ST. LUCIA'S ST, KOTAHENA. TEL : 335287


## நினைவு அஞ்சலி



வைத்தியலிங்கம் ரகுநாதன்

தோற்றம் 06.01.1975

★★

மறைவு 11.08.1999

ஒன்றாகக் கூடினோம்!
உவந்து விளையாடினோம்!
இன்று நீ எமைவிட்டு எங்கோ மறைந்திட்டாய்!
ஏக்குமுடன் எம் கண்கள் கண்ணீரைச் சொரிகிறதே!
உன் நினைவில் என்றுமுன் நண்பர்கள்.


உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களே சிறப்பாக உங்களுக்காகவும் ஏனையோருக்காகவும் நாம் வழங்கும்

Quality COMPUTER COURSES

ஆரம்பம் 02.10.1999 சனி மாலை 4.00 மணி | விரிவுரைகள் யாவும் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் நடாத்தப்படுகின்றன.

DIPLOMA IN COMPUTER STUDIES
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
MICROSOFT OFFICE 97
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN SOFTWARE ENGINEERING
DIPLOMA IN HARDWARE ENGINEERING

INDIVIDUAL TRAINING PROGRAMME
Visual Basic, Word Processing, Spread Sheet Application, DataBase Management System, Operation System, Children Course

INTERNATIONAL COURSES
City & Guilds, ACS, ICM

பரீட்சைகள் யாவும் நவீன முறையில் நடைபெறும். காலை மாலை பகுதி நேர வகுப்புக்கள்.

ACA ACADEMY OF COMPUTING & ACCOUNTING
55, ST. LUCIA'S ST, KOTAHENA. COLOMBO - 13.
TEL : 470519, 335287


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் சுரேந்திரன் சஞ்ஜேய் | 01.10.1999

OSLO நோர்வேயை வசிப்பிடமாகக் கொண்ட சுரேந்திரன்-சிவவதனா தம்பதியினரின் செல்லப் புதல்வன் சஞ்ஜேய் தனது முதலாவது பிறந்த நாளை 01.10.99 அன்று கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா, கொழும்பில் வசிக்கும் அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா OSLOவில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான் மற்றும் அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார் மச்சாள்மார், மச்சான்மார், நோர்வேயில் வாழ்கின்ற நண்பர்கள் அன்பர்கள். மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சி.சிவசண்முகநாதன், 'சுரேந்திரவதனம்', 15ஏ லில்லி அவின்யூ, கொழும்பு -06.


MANTEK ENTERPRISES

டுபாய் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

10 நாட்களில் பயணம் மேற்கொள்ளலாம்

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம் |
|---|---|---|
| வீட்டுப்பணிப்பெண்கள் | 50 | 500DHS |
| சமையல்காரர் (பெண்) | 50 | 500DHS |
| வாகன ஓட்டுனர்கள் | 50 | 750DHS |

சவூதி அரேபியாவில்



மருத்துவமனையில் தொழில்புரிய
பெண் சுத்திகரிப்பாளர்கள் தேவை
சம்பளம் - 500 SR

உணவு, பாதுகாப்புடன் கூடிய தங்குமிட வசதி, மருத்துவம் மற்றும் ஒருவழிப்பிரயாணச்சீட்டு இலவசம் உடனடியாகப் பாஸ்போட், பாஸ்போட் அளவு 3 புகைப்படங்கள், முழு அளவு புகைப்படம் ஒன்று சகிதம் அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

MANTEK ENTERPRISES

மேன்டெக் எண்டர்பிரைசஸ்

535 - 2/1, காலி வீதி, கொழும்பு – 06.
(ரெக்சி தியேட்டர் அருகாமையில் - பெட்ரோல் நிலையத்திற்கு முன்பாக)

LICENCE NO:1449 APP-NO :

TNT GRAFIX

உங்கள் வீடியோ கசற்றில் உள்ளதை C.D.க்கு மாற்றி 100 வருடங்களுக்கும் மேலாக பாதுகாத்துக் கொள்ளுங்கள்

STUDIO CHHAYA

40 -1/1, Galle Road,
(Next to Hong Kong Bank)
Wellawatta, Colomb-06.
T.P.:- 594492


## மரண அறிவித்தல்



திரு.சதாசிவம் கார்த்திகேசு (இந்திரசித்து)

வேலணை மேற்கு சிற்பனை முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமான இந்திரசித்து என்று அழைக்கப்படும் சதாசிவம் கார்த்திகேசு 30..08.99 திங்கட்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம், அன்னம்மா என்றழைக்கப்படும் சிவரெத்தினம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசம்மாவின் அன்பு மருமகனும், அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், தர்மலெட்சுமியின் அன்புச் சகோதரரும், பூபாலகுணசிங்கம், நவரெத்தினம், சிவபாலன், ஞானேஸ்வரி, அம்பிகாபதி ஆகியோரின் உடன் பிறவாத சகோதரரும், சதாசிவம் (கனடா), சந்தியரூபி(இலண்டன்), பாலசுப்பிரமணியம் (கனடா), சுவேந்திரன் (கனடா), சாந்தினி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், தவலெட்சுமி (கனடா), இராசலிங்கம் (லண்டன்), கனகேஸ்வரி (கனடா), பத்மாதேவி (கனடா), பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், வைத்தியலிங்கம், சிவபாக்கியம், சிவயோகம், இராசையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சுந்தரம், காலஞ்சென்ற முத்துத்தம்பி, இரத்தினம், திலகேஸ்வரி ஆகியோரின் சகலனும், தர்சினி, சரஞ்சன், அபிராம், தர்சன், தர்சா, தர்சிகா, நிதர்சனா, லக்சனா, செந்தூரன், நிசான், அஞ்சனா, கோபினி, பகீரதன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02.09.99 கனடாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: சி.பூபாலகுணசிங்கம், 27/7, கடற்கரைவீதி, நீர்கொழும்பு.தொ.பே.031-38920



படிப்பகம்

www.padippakam.com



மட்டக்களப்பு நகருக்குள் புலிகளது அணிகள் தாக்குதலுக்கு தயாராகியுள்ளதாக கூறியிருந்தோம்.

24.09.99 அன்று மட்டக்களப்பு நகருக்குள் நடைபெற்ற கிளைமோர் தாக்குதல் புலிகளது நகர்ப்புற கெரில்லாக்களின் பிரசன்னத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் புலிகளது தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. போர் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ள இந்த ஆண்டுக்குள் பல்வேறு அதிரடித் தாக்குதல்களுக்கு கிழக்கில் திட்டமிடப்பட்டுள்ளது.

கிழக்கில் புலிகளது தாக்குதல்கள் தீவிரமாவது, அரசாங்கத்தின் போர் வெற்றிப் பிரசாரத்திற்குப் பாதகமாக இருக்கிறது.

இதனால் மட்டக்களப்பில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட படை நகர்வுக்கு அரசாங்கம் உத்தரவிட்டது.

மட்டக்களப்பு நகரில் இருந்து 45 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கதிரவெளியை படையினர் சமீபத்தில் கைப்பற்றினார்கள்.

புலிகளது முக்கிய தளம் கைப்பற்றப்பட்டதாக படையினர் வெளியிட்ட செய்திகள் கூறின.

ஆனால் கிழக்கைப் பொறுத்தவரை, நிரந்தரமான தளப்பிரதேசம் ஒன்றை தக்கவைக்கும் சூழ்நிலை நிலவவில்லை.

எனவே அங்கு புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் கெரில்லா பிரதேசங்கள் என்றே அழைக்கப்படக் கூடியவையாகும்.

கெரில்லாப் பிரதேசம் என்பது அடிக்கடி கைமாறிக்கொண்டிருக்கும் பகுதியாகும். தமது எதிரிகள் இல்லாதபோது கெரில்லாக்கள் அங்கு நிலை கொண்டிருப்பர். எதிரிப் படைகள் பலமாக வரும்போது அப்பிரதேசத்தைவிட்டு அகன்று விடுவார்கள்.

எனவே தமது பிரதேசத்தை நோக்கி நகரும் படைகளை எதிர்த்து பெரும் சமர் ஒன்றை நடத்தமாட்டார்கள்.

கிழக்கில் படைநகர்வுகளின்போது பெரும் எதிர்ப்பைக் காட்டாதிருப்பதும், பின்னர் தாக்குவதுமே புலிகளது உத்தி.

கதிரவெளியைப் படையினர் கைப்பற்றியதால் மட்டக்களப்பு, அம்பாறையில் புலிகளைக் கட்டுப்படுத்திவிட்டதாக நினைப்பது தப்புக் கணக்கு.

ஏனெனில் கிழக்கில் புலிகள் நடத்துவது மரபுப் போர் அல்ல; கெரில்லாப்போர். பிரதேசங்களைக் கைப்பற்றுவதால் கெரில்லாக்களைக் கட்டுப்படுத்த முடியாது. கெரில்லாத் தாக்குதல்களையும் முடக்க முடியாது.

மாறாக, படையினரின் முகாம்கள் கிழக்கில் அதிகமாகும்போது கெரில்லாக்களுக்கு இலக்குகள் பல கிடைக்கும். தாக்குதல்கள் பரவலாக நடத்தவும் வாய்ப்பாகிவிடும்.

புலிகளது வசமுள்ள பகுதிகளை நோக்கி படை நகர்வு ஒன்றுக்குத் திட்டமிட்ட போதே, 11.08.99 அன்று மட்டக்களப்பு நகரில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதன்பின்னர் படை நகர்வு மேற்கொள்ளப்பட்டு கதிரவெளி கைப்பற்றப்பட்டது.

புலிகளது பிரதேசம் நோக்கி நகர்வதாக படையினர் பிரசாரம் செய்து கொண்டிருக்க, மட்டக்களப்பில் படையினரின் தலைவாசல் தேடி புலியணிகள் வந்துள்ளன.

புலிகளைத் தேடி காட்டுக்குள் வேட்டை நடப்பதாக படையினர் கூறிக்கொண்டிருக்க, படையினரைத் தேடி புலிகள் நகருக்குள் பொறிவைத்துக் காத்திருந்தனர்.

11.08.99 அன்று கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற சுற்றாடலிலேயே 24.09.99 அன்றும் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஒரு பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டால் மீண்டும் அங்கே தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்று படைத்தரப்பு அலட்சியமாக இருக்கும் என்று கணிப்பிட்டே மீண்டும் அப்பகுதியில் வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, கிளைமோர் பொருத்தப்பட்ட முறையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானதே.

11.08.99 அன்று நடைபெற்ற தாக்குதலிலும் நீண்டநாட்களாக பூட்டிக்கிடந்த கடை ஒன்றின் உள்ளே கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது.

தற்போது 24.09.99 நடைபெற்றுள்ள தாக்குதலிலும் பூட்டிக்கிடந்த கடையின் மேல் முகப்புக் கூரையில்தான் கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் உள்ளது தாண்டவன்வெளி. அங்கு பற்றிமாகிரி ஒழுங்கையில் பூட்டிக் கிடந்த கடை ஒன்றின் மேல் கூரையில்தான் இரை தேடிக் காத்திருந்தது கிளைமோர்.

பற்றிமாகிரி ஒழுங்கை பிரதான வீதி வளைவில் இணைகிறது. அந்த வளைவில் வாகனங்கள் வேகத்தைக் குறைத்தே செல்ல முடியும். எனவேதான் அந்த வளைவில் உள்ள கடையை புலிகள் தெரிவு செய்தனர்.

ஆனால் இந்தக் கிளைமோர் வாகனத் தொடரணிக்காக என்று மட்டும் குறிவைத்துப் பொருத்தப்பட்டதல்ல.

குறிப்பிட்ட கடையின் முன்னால் படையினரதும், பொலிசாரினதும் விசேஷட நடமாடும் சோதனை அணி திடீரென்று நின்று சோதனை நடத்துவதுண்டு.

நல்ல வாய்ப்பான இரை கிடைத்தால் தாக்குவது என்று திட்டமிட்டுத்தான் கிளைமோரை பொருத்திவிட்டு காத்திருந்தனர் புலிகள்.

ஆனால் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல தொடரணி வந்து புலிகளின் குறியில் விழுந்துவிட்டது.

11.08.99 அன்று இதே சுற்றாடலில் கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற பின்னர் படையினரின் வாகனத் தொடரணி இப்பாதை வழியாக செல்வது நிறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு வாவிக் கரை வழியாகச் செல்லும் புதுவீதியையே படையினா பயன்படுத்த ஆரம்பித்தனர்.

ஆனால் 24.09.99 அன்றுதான்- 44 நாட்களின் பின்னர் மீண்டும் மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதிவழியாக வாகனத் தொடரணி வந்துள்ளது.

எனவே இதனை எதிர்பார்த்து புலிகள் கிளைமோர் வைத்திருக்க முடியாது.

இந்த வழியாக வாகனத் தொடரணி வரப்போகிறது என்பதை புலிகள் உள்தகவல் மூலம் அறிந்திருப்பார்களோ? என்று கேள்வி எழக்கூடும்.

அதற்கு வாய்ப்பேயில்லை. வாகனத் தொடரணி புறப்படும் கடைசி நிமிடத்தில்தான், அது எப்பாதையில் செல்லுவது என்று முடிவு எடுக்கப்படுவதுண்டு.

புலிகளது தாக்குதல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்டு வரும் நடைமுறை இது.

எனவே, உள்தகவல் திரட்டி புலிகள் குறிப்பிட்ட வாகனத்தொடரணிக்காக என்று கிளைமோர் பொருத்த எந்த வாய்ப்பும் இல்லை.

எனவே, புலிகள் நகருக்குள் இரைகளைத் தேடி பல பொறிகளை வைத்துள்ளனர் என்பதும், வசமாக எந்த இரை மாட்டுகிறதோ, அதனை தீர்த்துக் கட்டிவிடுகின்றனர் என்பதும் உறுதியாகிறது.

புலிகளின் அதிஷ்டம் பெரிய இலக்காக மாட்டியுள்ளது. 19 படையினர் பலியாகியுள்ளனர். 16 பேர் காயமடைந்துள்ளனர்.

தமக்கு எவ்வித இழப்பும் இன்றி புலிகள் நடத்தியுள்ள பாரிய தாக்குதல் இது.

44 நாட்களுக்குள் ஒரே சுற்றாடலுக்குள் ஒரே விதமான தாக்குதலில் படையினரும், பொலிசாருமாக மொத்தம் 28 பேர் புலிகளின் தாக்குதலில் பலியாகியுள்ளனர். 36 பேர் காயமடைந்தனர்.

சென்ற முறை கிளைமோரில் இருந்து வயரை இழுத்துச் சென்று வெடிக்க வைத்தனர். அதற்கான சூழ்நிலை தாக்குதலுக்கு தெரிவு செய்த பகுதியில் இருந்தது.

ஆனால் இம்முறை 'ரிமோட் கொன்ட்ரோல்' மூலமே கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

எனினும் பற்றிமாகிரி ஒழுங்கையில் 50 யார் தூரத்திற்கு அப்பால் வயர் இழுத்துச் சென்று, அங்கிருந்தே வெடிக்க வைக்கப்பட்டதாக உடனடியாக ஊகங்கள் கூறப்பட்டன. அவை தவறானவையாகும்.

ஏனெனில் பற்றிமாகிரி ஒழுங்கையில் 50 யார் வரை வயரை இழுத்துச் செல்ல வேண்டுமானால் பல வீடுகளது முன்வாசல்கள் ஊடாகத்தான் வயர் செல்ல வேண்டும். ஒழுங்கை வழியாக இழுத்துச் சென்றாலும் பலரது கண்ணில் பட்டு விடும்.

அது மட்டுமல்ல,பற்றிமாகிரி ஒழுங்கையில் 50 யார் தூரத்திற்கு அப்பால் மறைந்திருந்து கிளைமோரை வெடிக்க வைக்க முடியாது. ஏனெனில் பற்றிமாகிரி ஒழுங்கை வளைவு கொண்டது.

அதனோடு இணையும் பிரதான வீதியும் அவ்விடத்தில் வளைகிறது. இதுதவிர பற்றிமாகிரி ஒழுங்கையின் இருமருங்கிலும் உயர்ந்த வீடுகள் உள்ளன.

எனவே அந்த ஒழுங்கையின் 50 யார் தூரத்தில் மறைந்திருக்கும் ஒருவரால் பிரதான வீதியையோ, அதில் வரும் வாகனங்களையோ அவதானிக்க முடியாது. அவ்வாறு அவதானிக்க முடியாதபோது படையினரின் வாகனத்தைக் குறிவைத்து கிளைமோரை வெடிக்க வைக்க எப்படி முடியும்? சாத்தியமே இல்லை.

எனவே அந்த ஊகங்களை விட்டு விடலாம்.

பின்னர் எவ்வாறு கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டது?

குண்டு பொருத்தப்பட்டிருந்த கடைக்கு நேர் எதிரே உயரமான இடம் ஒன்றில் இருந்து, பிரதான வீதியை அவதானிக்க முடியும். அங்கிருந்து ரிமோட் கொண்ட்ரோல் மூலம் கிளைமோரை வெடிக்க வைக்க முடியும்.

மறுபக்கத்தில் தரையில் நின்று வெடிக்க வைக்க முடியாது. வாகனங்கள் குறுக்கே தடையாக இருக்கும். அதனால் ரிமோட் கொண்ட்ரோலை இயக்குவது கடினம். எனவே உயரமான இடத்தில் இருந்து ரிமோட் கொண்ட்ரோலை அமுக்கிவிட்டு இறங்கி நழுவியிருக்கலாம்.

குண்டு பொருத்தப்பட்ட கடையின் மறுபக்கம் உயரமான கட்டடங்கள் உள்ளன. அக்கட்டடத்தில் உள்ளவர்களுக்கு தெரியாமலேயே ஒருவரோ இருவரோ ரிமோட் கொண்ட்ரோலுடன் காத்திருந்து, இரை தேடி, இரை கிடைத்ததும் அமுக்கிவிட்டுப் போயிருக்கலாம்.

இந்த வாகனத் தொடரணி மாட்டியிருக்காது விட்டால், நகரில் திடீர் சோதனைகள் நடத்தும் விசேஷ அணி பொறியில் சிக்கியிருக்கக்கூடும். இந்த அணிமீதும் புலிகளுக்கு ஒரு கண் இருப்பது தெரிந்த விஷயம்.

மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் இயக்க கெரில்லாக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. எனவே தாக்குதல்களும் மேலும் தீவிரமாகவே செய்யும்.

***

புதுக்குடியிருப்பில் தமிழ்க் குடிமக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து சர்வதேச மன்னிப்புச் சபை மட்டுமே கண்டித்தது. ஏனைய மனித உரிமை அமைப்புக்கள் கண்டு கொள்ளவில்லை.

அம்பாறை கல்லோயா குடியேற்ற கிராமமான கோணகலவில் புலிகள் தாக்குதல் நடத்திய பின்னர்தான் அதுவும் பிழை, இதுவும் பிழை என்ற ரீதியில் பரவலான கண்டனங்கள் வெளியாகின.

இதற்கு முன்பும் புலிகள் சிங்களக் குடியேற்ற கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். வன்னியில் டொலர் பாம், கென் பாம் போன்ற பகுதிகளில் குடியேற்றவாசிகள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காயினர்.

கொழும்பிலும், அநுராதபுரத்திலும் சிங்கள மக்களை குறிவைத்து புலிகளால் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படுத்துவது, சிங்கள மக்களுக்கு யுத்தத்தின் கோரத்தை புரியவைப்பது என்ற நோக்கங்களோடு புலிகள் அத்தாக்குதல்களை நடத்தினார்கள்.

அப்பாவிச் சிங்கள மக்களை குறியாக வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் அனாவசியமானவை என்று பலராலும் சுட்டிக் காட்டப்பட்டது.

பின்னர் புலிகளே அவ்வாறான தாக்குதல்களை நிறுத்திக் கொண்டனா. கொழும்பில் தமது தாக்குதல்களை மக்கள் நடமாட்டமில்லாத விடுமுறை தினங்களிலோ, அல்லது அதிகாலையிலோ மேற்கொண்டனர்.

கண்டி தலதா மாளிகைமீதான தாக்குதல் கூட அங்கு மக்கள் நடமாட்டமே இல்லாத ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலேயே நடத்தப்பட்டது.

மக்கள் நடமாட்டமோ, வாகனங்களது நடமாட்டமோ அதிகம் இல்லாத நேரத்தில் குண்டு லொறியுடன் செல்வது சிரமமானது. வாகனங்களோடு வாகனமாக கலந்து செல்ல சந்தர்ப்பம் இல்லாததால் சோதனைக்காக மறிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

இவ்வாறான சிரமங்கள் இருந்தும் ஞாயிறு அதிகாலையில்தான் புலிகள் தாக்குதலுக்கான நேரமாகத் தெரிவு செய்தனர்.

ஒரு முடிவை எடுத்தால் அதனை சிரமங்கள் இடையேயும் முன்னெடுக்கும் வழக்கம் புலிகளது பாணியாக இருந்து வருகிறது.

சாதாரண சிங்கள மக்களுக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடாது என்று புலிகள் முடிவு செய்த பின்னர், அதனை சிரத்தையாகக் கடைப் பிடித்தனர் என்பதற்கு கடந்த கால நிகழ்வுகள் ஆதாரம்.

கொழும்பில் பெரும் பொருளாதார இலக்குகளை புலிகள் தாக்க முடியாமல் இருப்பதற்கு கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக இருக்கின்றன. ஆனால் பொதுமக்கள் பற்றி கவலையின்றி கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைக்க புலிகள் நினைத்தால் பாதுகாப்பு நடவடிக்கைகளால் தடுப்பது கடினமே.

இதனை அரசாங்கத்திற்கும் உணர்த்தும் விதமாகத்தான் கடந்த மார்ச் மாதமும் கொழும்பில் புலிகள் குண்டுவெடிப்புக்கள் சிலவற்றை நடத்தியிருந்தனர்.

ரணகோஷ நடவடிக்கை ஆரம்பமாகி வன்னியில் ஷெல் தாக்குதல்களும் நடைபெற்றபோதே, கொழும்பில் மார்ச் 9ம் திகதி மினிபஸ் ஒன்றில் குண்டு வெடித்தது. 12 பேர் காயமடைந்தனர்.

அதே காலகட்டத்தில் பயணிகள் இல்லாத ரயில் பெட்டிகளிலும் குண்டுகள் வெடித்தன.

தாம் நினைத்தால் எவ்வாறு வேண்டுமானாலும் தலைநகரில் தாக்குதல் நடத்த முடியும் என்று புலிகள் அரசாங்கத்திற்கு விடுத்த செய்திகளே இத் தாக்குதல்கள்.

"வடக்கு-கிழக்கில் பொதுமக்கள் தாக்கப்பட்டால் நாமும் பொதுமக்களை குறிவைத்து தாக்குவோம்!" என்பதற்கான புலிகளின் முன்னெச்சரிக்கையாகவும் அதனைக் கொள்ளலாம்.

இவற்றின் உச்சக்கட்டம்தான் கோணகல தாக்குதல்.

இத் தாக்குதல் புலிகளது புதிய உத்தியாகவும் உள்ளது. இதுவரை புலிகள் தாமாக வலியச் சென்று சிங்கள மக்களைத் தாக்கியதாகவே கண்டனங்கள் வந்தன. அதனால் புலிகளுக்கும் சர்வதேச மட்டத்தில் சில பாதகங்கள் ஏற்பட்டன.

ஆனால் தற்போது புதுக்குடியிருப்பில் அரச படைகளே பொதுமக்கள்மீது குண்டு போட்டுவிட்டதாக கண்டனங்கள் எழுந்தமையால், புலிகளது தாக்குதல் தனியாகக் கண்டிக்கப்படவில்லை. அதுவும் பிழை, இதுவும் பிழை என்றே கண்டனங்கள் எழுந்தன.

புதுக்குடியிருப்பு தாக்குதலும் கோணகல தாக்குதலும் பெரிதாக வெளியானதால் இலங்கைத்தீவின் நிலையும், கொசோவா, கிழக்குத் திமோர் போன்ற நிலைதான் என்பது வெளிப்பட்டுள்ளது.

இதன் பின்னரே ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இலங்கையில் ஐ.நா. தலையிட வேண்டும் என்று நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அரசியல் ரீதியில் புலிகளுக்கு இது சாதகமான நிலைதான். மறுபுறத்தில் இராணுவ ரீதியிலும் புலிகளுக்கு பல சாதகங்கள் உள்ளன.

1. குடியேற்றப் பகுதிகளில் ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதால் புலிகள் அவற்றை கைப்பற்றும் வாய்ப்பு ஏற்படலாம்.

2. குடியேற்ற கிராமங்களை பாதுகாக்க முகாம்களை நிறுவ வேண்டிய கட்டாயம் ஏற்படுவதால், வன்னியில் படைக் குவிப்பு மேலும் தடைப்படும்.

இத்தனை சாதகங்களையும் புலிகள் தாமாகப் பெறவில்லை என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்க விடயம்.

படைத்தரப்பு புதுக்குடியிருப்பில் பொல்லை கொடுக்க, அதனை வாங்கியே புலிகள் திருப்பி அடித்ததில் ஏற்பட்டதுதான் இத்தனை சாதகங்களும்.

புதுக்குடியிருப்பு சம்பவம் நடக்காதபோது புலிகள் குடியேற்ற கிராமம்மீது தாக்கியிருந்தால் அரசாங்கத்துக்கு அது அபாரமான பிரசார இலாபமாக மாறியிருக்கும்.

இன்னொரு நோக்கமும் புலிகளுக்கு இருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் மக்கள்மீது குண்டுகள் விழுந்தாலும் தென்னிலங்கையில் கண்டனங்கள் எழுவதில்லை. எனவே தமிழ் மக்கள் தாக்கப்பட்டால், தாமும் தாக்கப்படலாம் என்ற எதிர்ப்பார்பை சிங்கள மக்களிடையே ஏற்படுத்துவதும் புலிகளது நோக்கமாக இருப்பதாக நம்பப்படுகிறது.

ஆனால், இரு தரப்பும் பொதுமக்களை பதிலடிக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை நிறுத்துவதே வரவேற்கத்தக்கது.

# சாலை வளைவில் கூரை முகப்பில் இரை தேடிய கிளைமோர்



நாரதர்



**கிழக்கின் தனித்துவக்** கட்சித் தலைவரின் கவிதை நூல் வெளியீடு நடந்தது. அரச தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி இரண்டிலும் கிலோக் கணக்கில் ஐஸ் வைத்தார்கள். தனித்துவத் தலைவரின் எழுத்தாற்றல், பேச்சாற்றல் என்பவை நயமானவை என்பது உண்மைதான். ஆனாலும் இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்குக் காரணம், அவர் பதவியுள்ள கவிஞராக இருந்ததால் தானோ?! வெறும் கவிஞராக மட்டும் இருந்தால் புறம் தள்ளப்பட்டிருக்கலாம்!

**ரெண்டு எழுத்தாரைச்** சந்திக்க சமீபத்தில் சென்று வந்த மதகுருமார் அனைவரும் தமிழ்பேசும் இனத்தோர். இதனைப் பார்த்துப்போட்டு நண்பர் ஒருத்தர் கூறினார், "பார்த்தீரோ, தீர்வு கேட்டும் நாங்கள்தான் சண்டை பிடிக்க வேண்டிக் கிடக்கு. சமாதானம் கேட்டும் நாங்கள்தான் ஓடுபட்டுத் திரிய வேண்டிக்கிடக்கு!"

**சர்வதேச பயங்கரவாதத்தை** தடுக்க உலகம் ஒன்றுபட வேண்டும் என்று கோரியிருக்கிறார் வெளிநாட்டு விவகாரத்துக்குப் பொறுப்பானவர். புதுக் குடியிருப்பில் நடந்ததுக்கு என்ன பெயர்? அது என்ன மென்வாதமோ? ஒரு விரல் எதிராளியைச் சுட்டிக்காண்பிக்கும்போது, ஏனைய நான்கு விரல்கள் தன்னை நோக்கியே நீளுமாம். அது பொருத்தமாக இருக்குதல்லோ!?

**முன்னாள் முதல்வரை** எப்படியாவது ஒரு வழி பண்ணி விடவேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார் அந்தக் கட்சியின் செயலாளர். அதிகாரத்தரப்பு மேடையில் முன்னாள் முதல்வர் ஏறப்போகிறார் என்றும், அவர்தான் ஆயுதம் கேட்டது என்றும் கதை கட்டி விட்டதும் அவர்தானாம். அவைக்கு ஆதரவாக இருந்தால்கூட

## அதிரடி அய்யாத்துரை

அவையின் மேடையில் ஏறப்போவதில்லையாம் முன்னாள் முதல்வர்.

**அம்பாறையிலும்,** வவுனியாவிலும் ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் ஊர்க்காவல் படைக்குக் கொடுக்கப்பட உள்ளதாம். ரெண்டு எழுத்தாருக்கு அவர்கள் ஊடாகத்தான் விநியோகம் நடக்கப்போகுதோ தெரியவில்லை, கப்பலில் ஆயுதம் கொண்டுவரும் செலவு மிச்சம்.

**கூட்டான கட்சியின்** கிழக்குப் பிரதிநிதிகள் தொடர்ந்து அதே பெயரில் இயங்குவதோ, அடுத்த தேர்தலில் போட்டியிடுவதோ ரெண்டு எழுத்தாருக்குப் பிடிக்காது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டு விட்டதாம். அதனால் தனியாக நிற்பது பற்றி ரெண்டு எழுத்தாரின் முடிவை அறியத் தூதுவிட்டுள்ளாராம் ஒரு பிரதிநிதி. 'தலைவர்தான் முடிவு கூறவேண்டும். தலைவரிடம் தெரிவிக்கிறோம்' என்று பதில் கூறப்பட்டதாம்.

**வரப்போகும் தேர்தல்களுக்கு** முன்பாக தமிழ்க் கட்சிகள்மீது சுருக்கை இறுக்குவதுதான் ரெண்டு எழுத்தாரின் திட்டமாம். ரெண்டு எழுத்தார் கூறிய மூன்றுமாத காலக்கெடுவுக்குள் பல முக்கிய தலைகள் உருண்டுவிட்டன.

**தமிழ்க் கட்சிகளுக்குள்** இப்போது ஒருவர்மீது ஒருவர் சந்தேகப்படும் நிலை தோன்றிவிட்டது. யாரையும் யாரும் நம்பமுடியாத சூழ்நிலை. வவுனியாவில் கழகப் போட்டி சூடு பிடித்து, சித்தர் அணியின் கை மேலோங்கியிருக்குது. ஆனால் தமது அணிக்குள்ளும் யார் யார் தமக்கு குறிவைத்துக் கொண்டிருக்கினமோ என்று பொறுப்பாளர்களுக்கு யோசனைதானாம்.

**சார்க் போட்டிகளில்** மலையகத் தமிழ் இளைஞரான மெய்யப்பன் மனோகரன் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறார். முதலிடம் பிடித்தவரும் இலங்கையைச் சேர்ந்த கமகே என்பவர்தான். இதில் என்ன விசேஷம் என்றால், இலங்கையில் மரதன் போட்டி நடந்தபோது, கமகே இரண்டாம் இடம். மனோகரன் முதலாமிடம். சார்க்கில் ஏன் மனோகரன் இரண்டாம் இடத்திற்கு வந்தவர் தெரியுமோ? இங்கு வெறும் காலுடன் ஓடினவராம். அங்குபோய் சப்பாத்துடன் ஓடியிருக்கிறார். அதுதான் பிழைத்துப் போச்சுது!

**இயக்கங்களுக்கு** சவால்விடுவது மாதிரி பாதாள உலகக் கோஷ்டி கொழும்பில் டப்பு டப்பு என்று தீபாவளி கொண்டாடிக் கொண்டிருக்குது. ஒரே காரில் ஆறுபேருக்கு கபால மோட்சம்! காக்கி உடையினரும் விட்டுப் பிடிக்கினம் போலக் கிடக்கு. தொல்லை தீர்ந்தால் சரிதான் என்று நினைக்கினமாக்கும்! சென்ற அதிகாரத் தரப்பார் காலத்தில் மங்கியிருந்த கோஷ்டிகள் தற்போது புகுந்து விளையாடுவதாகவும் தகவல். இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே!

**வன்னியில் இருந்து** மன்னாருக்குப் படகுச் சேவை நடக்குதல்லோ? ரெண்டு எழுத்தாரின் அனுமதி பெறாமல் வருவோரிடம் சுளையாக வாங்கிக்கொண்டு மன்னாரில் கொண்டுவந்து விடுகிறார்களாம் சிலர். படகு மூலம் வருவோரை சீருடையினரும் சோதனையிட்டு விட்டு உள்ளே அனுமதிக்கிறார்கள்.

**இவ்வாரப் பொன்மொழி:**

"செல்வம்–
தன்னை வைத்திருப்பவனுக்கு
சொந்தமல்ல;
அனுபவிப்பவனுக்கே
சொந்தம்!"

www.padippakam.com






# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

ராஜீவ் கொலையை அடுத்து தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது தொடர்பாக இந்திய அரசு ஆராய்ந்து வந்தது.

புலிகளை இந்தியாவில் தடை செய்யும் யோசனையை இந்திய உளவுப் பிரிவுகளில் ஒன்றான 'றோ' ஆதரிக்கவில்லை.

ராஜீவ் கொலை வழக்கில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பெயரைச் சேர்ப்பதையும் 'றோ' விரும்பவில்லை.

இலங்கை தொடர்பான இந்திய அரசின் கொள்கைகளுக்கு புலிகளது நட்பும் தேவை. அதனை முற்றாக இழந்துவிடக்கூடாது என்பதே 'றோ'வின் அபிப்பிராயம்.

இலங்கை அரசு மறுபடி அமெரிக்கா போன்ற இந்திய விரோத சக்திகளுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்போது தமிழர் தரப்பின் உதவி இந்தியாவுக்குத் தேவை. தமிழர் தரப்பு என்னும் போது புலிகளே பலமான சக்திகள்.

இலங்கை விவகாரத்தை முற்றாக கைகழுவி விடுவது இந்தியாவின் நலனுக்கு பாதகமான விடயம்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பிடி தொடர்ந்து இருக்கவேண்டுமானால் புலிகளை நிராகரித்துவிட்டு அதனைச் செய்ய முடியாது.

இத்தகைய பல காரணங்களைக் கருத்தில் கொண்டே புலிகளுடன் உறவு முற்றாகத் துண்டிக்கப்படுவதை 'றோ' விரும்பாதிருந்தது.

இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.பி.ஐ) தான் ராஜீவ் வழக்கில் பிரபாகரனையும் சேர்க்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தது. புலிகளைத் தடை செய்வதற்கான காரணங்களையும் தேடியது.

இந்தியாவின் உள்துறை அமைச்சராக அப்போது இருந்தவர் சவான். "விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்வீர்களா?" என்று கேட்டபோது, "விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய ராஜீவ்கொலை தொடர்பான ஆதாரம் மட்டும் போதுமானதல்ல" என்று கூறியிருந்தார்.

அவ்வாறு அவர் கூறிய சில தினங்களுக்குள், அவரே புலிகள்மீது தடைவிதிக்கும் அறிவித்தலை இந்திய நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

## நிர்ப்பந்தம்

தமிழகத்தின் அன்றைய முதல்வராக இருந்த ஜெ. ஜெயலலிதாவின் பிடிவாதம்தான் இந்திய அரசு புலிகளைத் தடைசெய்ய முக்கிய தூண்டுகோலாக இருந்தது.

புலிகளைத் தடை செய்யாதுவிட்டால் போராட்டம் நடத்தப்போவதாகக் கூறியிருந்தார் ஜெயலலிதா.

கருணாநிதி புலிகளுக்கு உதவி செய்தவர். ராஜீவ் கொலைக்கு காரணமானவர். தான் புலிகளுக்கு எதிரானவர் என்று வெளிப்படுத்த, மக்களிடம் அனுதாபம் சம்பாதிக்க ஜெயலலிதா அவ்வாறு பிடிவாதம் காட்டினார்.

ஜெயலலிதா கட்சியின் 11 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தனர். சிறுபான்மை அரசாக இருந்த காங்கிரஸ் ஆட்சிக்கு ஜெயலலிதாவின் தயவு தேவையாக இருந்தது.

அதனால் ஜெயலலிதாவின் கோரிக்கைக்கு உடன் பணிந்தது. தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

14.05.1992இல் புலிகள்மீதான தடைச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

இச் சட்டத்தின்படி இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிப்பதோ, அடைக்கலம் கொடுப்பதோ குற்றமாகக் கருதப்படும்.

தடைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்பித்த சவான், 'விடுதலைப் புலிகளுக்கும் அசாமில் உள்ள ஐக்கிய அசாம் விடுதலை முன்னணிக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும், தமிழ்நாட்டில் உள்ள தமிழ்நாடு விடுதலைப் படைக்கு புலிகள் பயிற்சி அளித்துவருவதாகவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் இந்தியாவின் உள் விவகாரங்களில் தலையிடுவதால்தான் தடை செய்யப்படுவதாக கூறுவதற்கே அசாம் மற்றும் தமிழ்நாடு மாநிலங்களது விடுதலை இயக்கங்களுடன் தொடர்பு இருப்பதாக சவான் குறிப்பிட்டார்.

எனினும் தமிழ்நாடு விடுதலைப் படையினருக்கு புலிகள் பயிற்சியளித்தது உண்மையே.

தமிழ்நாடு விடுதலைப் படை உறுப்பினர்கள் பலர் ஆனையிறவுப் போர் போன்ற களங்களிலும் பங்கு கொண்டுள்ளனர்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெறச் சென்ற ஈழப் போராளிகளில் சிலர் இஸ்ரேலுக்கு எதிரான சண்டைகளிலும் பங்கு கொண்டதுண்டு.

அதேபோலவே புலிகளிடம் பயிற்சி பெற வந்த தமிழ்நாடு விடுதலைப்படை உறுப்பினர்கள் இங்கும் சில சண்டைகளில் பங்கு கொண்டனர்.

ஆனால், புலிகள்மீது இந்தியா தடை விதித்தபோது அதற்கான போதிய ஆதாரங்கள் இந்தியாவிடம் இருந்ததாகத் தெரியவில்லை.

"இந்தியப் படைகள் எமது மக்களைக் கொன்று குவித்தன. பாலியல் வல்லுறவு புரிந்தன. பெரும் தொகையான சொத்துக்களை அழித்தன.

இக் குற்றங்கள் தொடர்பாக இந்திய அரசுமீது சர்வதேச நீதிமன்றத்தில் நாமும் வழக்குத் தொடுக்கலாம். நியாயம் கேட்கலாம்" என்று புலிகளது மக்கள் முன்னணிச் செயலாளராக இருந்த யோகி கூறினார்.

புலிகள்மீதான தடை குறித்து தமிழக அரசியல் கட்சிகளும் கருத்துக் கூறியிருந்தன.

தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி தன் வழக்கமான பாணியில் எதிலும் பிடி கொடாதவாறு பின்வருமாறு கூறியிருந்தார்:

"விடுதலைப் புலிகளுக்கு 1983இல் புகலிடம் தந்ததும், ஆயுத உதவி செய்ததும், கோடிக் கணக்கில் நிதியுதவி செய்ததும் அப்போதிருந்த மத்திய அரசும், மாநில அரசும் என்பது யாவரும் அறிந்த ஒன்று.

தமிழ்நாட்டிலே பத்மநாபா படுகொலை செய்யப்பட்ட பின்னர்கூட புலிகளை ஆதரித்தும், அவர்கள் நடத்தும் போராட்டத்தை ஆதரித்தும், புலிகள் இல்லையேல் தமிழினம் அழியும் என்றும் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தவர் ஜெயலலிதா.

இப்போது அதே ஜெயலலிதாதான் புலிகள் இயக்கத்தை தடைசெய்யுமாறு மத்திய அரசைக் கோரியுள்ளார். மத்திய அரசும் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறது.

தமிழக சட்டசபையில் ஆளுநர் ஆற்றிய உரையில்கூட, தமிழ்நாட்டில் புலிகளை முற்றாக களைந்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

அவர் கூற்றுப்படி, இங்கு இல்லாத ஒரு இயக்கத்தை எப்படித் தடை செய்ய முடியும் என்பது புரியவில்லை.

இந்த தடை ஆணையைப் பயன்படுத்திக் கொண்டு தனது சொந்த அரசியல் காழ்ப்புணர்ச்சிகளைத் தீர்க்கவும் ஜெயலலிதா முன்வரலாம்.

புலிகள் மட்டுமல்லாமல், இலங்கையில் தனித் தமிழீழம் அமைந்துவிட்டது என்று பிரகடனம் செய்த வரதராஜப்பெருமாள் இப்போது இந்தியாவில்தான் இருக்கிறார்.

விடுதலைப்புலிகள் அல்லாத பல தமிழ் ஈழ இயக்கங்கள் இந்தியாவில் உள்ளன. இந்தத் தடை அந்த இயக்கங்களையும் பாதிக்குமா? இவற்றுக்கான விளக்கங்களும் எதிர்பார்க்கப்படுவது இயல்புதானே!" என்று கூறியிருந்தார் கலைஞர்.

## வீரமணி

திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி.வீரமணி பின்வருமாறு தெரிவித்திருந்தார்:

"விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும்.

அரசியல் நிர்ப்பந்தமும், அளவுக்கு மீறிய அச்ச உணர்வும் பெற்றெடுத்த அவசரக் குழந்தை இது.

விடுதலைப் புலிகள் தமிழீழத்தை தமிழ்நாட்டிலும் நீட்ட முயற்சிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது சட்டரீதியாக நிருபணமாகாத குற்றச்சாட்டாகும். வெறும் தகவல்களை வைத்தே கூறப்பட்டுள்ளது.

இலங்கையுடன் பரஸ்பர நல்லுணர்வை இந்தியா காக்க விரும்புகிறது என்று சவான் கூறியுள்ளார்.

தமிழீழம் என்ற பிரகடனத்தை செய்து தனிக்கொடி ஏற்றிய வரதராஜப் பெருமாள் போன்றோரையும், அவர்களது போராளிக் குழுக்களையும் இங்கே விருந்தினர்களாக இந்திய அரசு உபசரித்து வருகிறது. புலிகளுக்கு மட்டும் தடை ஏன்?

ராஜீவ் கொலை தொடர்பாக தடை அறிவிப்பில் எவ்வித குறிப்பும் காட்டப்படாதது ஏனோ?" என்று கூறியிருந்தார் வீரமணி.

## ராமதாஸ்

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை இது:

"விடுதலைப் புலிகளைத் தடை செய்திருப்பது கண்டிக்கத் தக்கது. உலகத் தமிழர்களது உணர்வுகளுக்கு எதிரானது.

ஜெயலலிதாவின் அரசியல் நிர்ப்பந்தத்தால் அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முடிவே இதுவாகும். அரை வேக்காட்டு முடிவு.

புலிகளைத் தடைசெய்தது மூலம் உலகில் உள்ள விடுதலை இயக்கங்கள் பற்றிப் பேசும் அருகதை இந்தியாவுக்கு இல்லாமல் போய் விட்டது!" என்று குறிப்பிட்டிருந்தார்.

திண்டிவனத்தில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் நிறைவேற்று குழுக்கூட்டத்தில், புலிகள் மீதான தடையைக் கண்டித்து தீர்மானமும் இயற்றப்பட்டது.

## எக்ஸ்பிரஸ்

இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ரீட்டா செபஸ்தியன் பின்வருமாறு எழுதியிருந்தார்:

"விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டும் என்ற பிரச்சனையில் இந்திய அரசுக்கு இதுவரை முரண்பட்ட தகவல்களே வந்த கொண்டிருந்தன.

# இந்தியாவின் தடை!

## தமிழ்நாட்டில் கண்டனம்

இந்தியா புலிகளை தடைசெய்ததை அடுத்து பல்வேறு அபிப்பிராயங்கள் எழுந்தன.

இனிமேல் புலிகளின் கதை அவ்வளவு தான். இந்தியாவே தடை செய்து விட்டதால் புலிகளது பலம் வீழ்ச்சியடையும் என்று கூறப்பட்டது.

புலிகளை இந்தியா தடை செய்துள்ளதால் இலங்கை அரசுக்கு புலிகளை வெல்வது சுலபம். பெரியளவான படையெடுப்பை நடத்தி புலிகளை அழிக்கப் போகிறார் பிரேமதாசா என்பது இன்னொரு அபிப்பிராயம்.

ராஜீவ் கொலை வழக்கில் பிரபாகரனை கைது செய்ய இந்தியா படை அனுப்பப்போகிறது. அதற்கு முன்னோடியான நடவடிக்கையே இந்தத் தடை என்றது மற்றொரு அபிப்பிராயம்.

பிரபாகரனுடன் பிரேமதாசா பேச்சு நடத்த விரும்புகிறார் அதனை இந்தியா விரும்பவில்லை அதனால்தான் பிரேமதாசா புலிகளுடன் பேச்சு நடத்த முடியாதவாறு இந்தியா புலிகளைத் தடை செய்துள்ளது. இந்தியாவால் தடை செய்யப்பட்ட இயக்கத்தோடு இலங்கை அரசு உடன் பேச்சு நடத்துவத இரு நாடுகளது உறவையும் பாதிக்கும். எனவே பிரேமதாசா தற்போதைக்கு பேச்சு நடத்த மாட்டார் என்பதும் ஒரு அபிப்பிராயம்.



அன்ரன் பாலசிங்கம், யோகி, மாத்தையா, சூசை.

அவை யாவும் பின்னர் பொய்யாகின. உள்நாட்டு அரசியல் நிர்ப்பந்தமும், நேரு குடும்பத்திற்கு தான் எதிரானவன் அல்ல என்று அன்றைய பிரதமர் நரசிம்மராவ் நிருபிக்க ஒரு வாய்ப்பாகவுமே புலிகள்மீதான தடை விதிக்கப்பட்டது.

## புலிகள் குமுறல்

தம்மீதான தடை குறித்து விடுதலைப் புலிகளும் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தனர்.

'இந்தியாவின் உள்நாட்டு விவகாரத்தில் நாம் என்றுமே தலையிட்டதில்லை. இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாக புலிகள் செயற்பட்டதும் கிடையாது' என்று புலிகள் தமது அறிக்கையில் கூறியிருந்தனர்.

இந்நிலையில் திடீரென்று புலிகளை இந்திய அரசு தடை செய்துள்ளது. இந்தத் தடை சிறீலங்கா அரசுக்கும் ஆச்சரியத்தைத் தந்துள்ளது.

இதனால் புதுடில்லி விடுதலைப் புலிகள் பற்றி தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டதோடு, இனி ஈழத் தமிழர் பிரச்சனையில் இந்தியாவின் பங்கு வெகுவாக குறைந்துவிடும் என்று ஸ்ரீலங்கா அரசு கருதுகிறது.

சிறீலங்கா அரசின் போக்கில் இந்தியாவின் தடையால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படமாட்டாது.

புலிகளுடன் பேச்சு நடத்த சிறீலங்கா அரசின் பிரதிநிதிகள் தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்று வருகின்றனர்.

புலிகளோடு அதிகாரபூர்வமற்ற முறையில் பேச்சு நடத்தும் சிறீலங்கா அரசு இந்திய அரசின் தடையால் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளப் போவதில்லை!" என்று எழுதியிருந்தார்.

ஆனால் பிரபல விமர்சகரான ரீட்டா செபஸ்தியனும் பிரேமதாசா அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஏதோ பேச்சுக்கள் நடப்பதாகவே தவறாகக் கருதியிருந்தார்.

அவ்வாறான பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. சமாதானத்தை வலியுறுத்தும் தூதுக்குழுக்கள் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே போயின- வந்தன.

## தாக்குதல்

அநுராதபுரத்தில் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள தந்திரிய மலைப்பகுதியில் இருந்த இராணுவ முகாம் ஒன்றுக்கு புலிகள் இலக்கு வைத்தனர்.

தகவல்கள் திரட்டப்பட்டு தாக்குதலுக்கும் நாள் குறிக்கப்பட்டது. (தொடர்ந்து வரும்)

---

# மறுபிறவி

**ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன்முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.**

வழக்கறிஞர்களிடம் சீனிவாசய்யா விவகாரம் பற்றி தெரிவித்தேன். அவர்கள் சொல்லித்தான் இந்த பெயரின் இரகசியம் எனக்குத் தெரிய வந்தது. உண்மையில் சீனிவாசய்யா என்ற பெயரில் யாரும் இந்த வழக்கில் சம்பந்தப்படவில்லை. விடுதலைப்புலிகளுக்கும் திராவிட இயக்கத்தின் மூத்த அரசியல் கட்சிக்கும் தொடர்பு உண்டு என்பதை நிறுவுவதற்காகவே இந்தப் பெயர் இணைக்கப்பட்டிருந்தது. குல்லா தைத்துவிட்டு அதற்குத் தகுந்த மாதிரி தலையைத் தேடிக்கொண்டிருந்தனர் விசாரணை அதிகாரிகள்.

ராஜீவ் கொலை வழக்கில் நான் உட்பட 19 பேர் விடுதலை செய்யப்படுவதாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தபின் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார் சி.பி.ஐ. கார்த்திகேயன். "மூன்றாந்தர சித்ரவதைகள் மூலம் நாங்கள் யாரிடமும் வாக்குமூலம் வாங்கவில்லை. அரசியல் ரீதியாக யாரும் பாதிப்படையும் விதத்தில், உண்மைக்கு மாறாக எந்த ஒரு விஷயத்தையும் இந்த வழக்கில் நாங்கள் கொண்டுவரவில்லை" என்று அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்த வழக்கில் நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் பல விஷயங்கள் சேர்க்கப்பட்டன என்பதற்கு ஒரு உதாரணம் சீனிவாசய்யா. ஆயிரக்கணக்கான சாட்சிகள் விசாரிக்கப்பட்டபோதும், 'சீனிவாசய்யா' கோர்ட்டுக்கே கொண்டுவரப்படவில்லை. தி.மு.க.வில் சீனிவாசய்யா என்று ஒருவர் இல்லாதபோது அவரது பெயர் எப்படி சாந்தனின் வாக்குமூலத்தில் இடம்பெற்றது? இதன் பின்னணி என்ன? என்பது பற்றி வழக்கறிஞர்கள் தங்களுக்குள் அடிக்கடி விவாதித்துக் கொள்வார்கள்.

இந்த வழக்கில் சி.பி.ஐயின் அணுகுமுறை, தனது ஆதரவாளர்களுக்கு ஒருவிதமாகவும், மற்றவர்களுக்கு ஒருவிதமாகவும்தான் இருந்தது.

மல்லிகையில் நடைபெற்ற விசாரணையின்போது, "நெ19, கொடியா மட்ரோடு, இந்த முகவரியில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார் விசாரணை அதிகாரி. எனது அலுவலகம் இலக்கம் 13, கொடியா மட்ரோடு என்ற முகவரியில் இருக்கிறது.

அவர் கேட்ட இல. 19-ல் இருந்தவர் ஒரு டீச்சர் என்பதும், அவர் இலங்கையைச் சேர்ந்த பெண்மணி என்பதும் எனக்குத் தெரியும். அந்த விபரத்தை அவரிடம் தெரிவித்தேன்.

அந்த முகவரியில் இருந்த பெண்மணியின் பெயர் விமலா. இவர், ஆதிரைக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார் என்பதுதான் குற்றச்சாட்டு.

இதுபற்றி ஆதிரையிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம்...

"ஏப்ரல் மாதத்தில் சிவராசன் என்னை டிரெயினில் கூட்டிக்கொண்டு போய் ராயப்பேட்டையிலிருந்த விமலா ஆன்ட்டியின் வீட்டில் விட்டார்.

தம்பி அண்ணா என்கிற சண்முகவடிவேல் மூலமாக சிவராசன் இந்த வீட்டை ஏற்பாடு செய்திருந்தார். விமலா ஆன்ட்டி, சண்முகவடிவேல் இவர்கள் இருவரும் புலிகள் அமைப்பின் தீவிரமான ஆதரவாளர்கள் ஆவார்கள்.

ராஜீவ் கொலைக்குப் பிறகு ஜூலை 1-ந் தேதி டெல்லி செல்வதென்று நாங்கள் தீர்மானித்தோம். அதற்கு மூன்று நாள் முன்பு சாந்தன் வந்து தம்பி அண்ணாவை போலீஸ் தேடிக் கொண்டிருப்பதாகவும், நானும் விமலா ஆன்ட்டியுடன் அதற்கு மேலும் தங்கியிருப்பது கூடாது என்றும் சொன்னார்.

அங்கிருந்து கூட்டிக்கொண்டு போய் பாதுகாப்பான ஓரிடத்தில் விடவேண்டும் என்று சிவராசன் சொன்னதாகவும் சொன்னார்.

01.07.91 சாயங்காலம் நான் விமலா ஆன்ட்டியிடம் சொல்லிக்கொண்டுபோனேன். திருச்சிக்குப் போகப்போவதாக நானும் கனக சபாபதியும் பேசி வைத்துக்கொண்டு விமலா ஆன்ட்டியிடம் சொன்னோம். போலீஸில் மாட்டிக் கொள்ள நாங்கள் விரும்பவில்லை."

இந்த வாக்குமூலத்தில் விமலா என்பவர் ஆதிரைக்கு அடைக்கலம் கொடுத்திருந்தது பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.




குற்றம் சாட்டப்பட்டவருக்கு அடைக்கலம் கொடுத்திருந்த விமலா இந்த வழக்கில் ஒரு சாட்சியாக மட்டுமே சேர்க்கப்பட்டிருந்தார்.

இதுபற்றி வழக்கறிஞர்கள் என்னிடம் பேசும்போது, "கைது செய்யப்பட்டு விசாரிக்க

## சுபா சுந்தரம்

வேண்டியவர்களை சாட்சியாகவும், சாட்சியாக இருக்க வேண்டிய உங்களைப் போன்றவர்களை கைது செய்தும் இருக்கிறது சி.பி.ஐ." என்று தெரிவித்தனர்.

சி.பி.ஐ. பெற்ற வாக்குமூலங்களிலிருந்தே இந்த வழக்கில் கற்பனைகள் எப்படி கலக்கப்பட்டன என்பது தெரியும். சிவராசன் பெங்களூருக்கு தப்பிச் செல்லுவதற்கு டேங்கர் லாரி கொடுத்ததாக அதன் சொந்தக்காரர் தனசேகரன் கைதுசெய்யப்பட்டார்.

அவரது வாக்குமூலத்தில்-

91-ம் வருடம் ஜூன் 28-ந் தேதி இரவு 9.30 மணி சுமாருக்கு ரங்கனோடு வந்த அம்மன் என்னையும் விக்கியையும்கூட வரச் சொன்னார்.

அதன்படி நான், விக்கி, அம்மன், ரங்கன் எல்லோரும் டேங்கரை எடுத்துக் கொண்டு போய் போரூர் தாண்டி வடபழனி போகும் வழியில் ஓர் இடத்தில் நிறுத்திக் கொண்டோம்.

விக்கி, அம்மன், ரங்கன் ஆகியோர் சுரேஷ் மாஸ்டரை கூட்டி வந்து எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

சிவராசன், சுபா, நேரு ஆகிய மூன்று பேரும் அந்த சமயத்தில் வந்தார்கள். ஸ்ரீவிக்கி டேங்கர் மூடியைத் திறக்க, சிவராசன், சுபா, நேரு ஆகியோர் உள்ளே புகுந்து கொண்டார்கள்.

29.06.91 காலை சுமார் ஏழு மணிக்கு நாங்கள் பெங்களூர் போய்ச் சேர்ந்தோம்" என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சாந்தனிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் "30.06.91 அன்று காசி தியேட்டரில் மதியம் 1 மணியளவில் தன்னை சந்திக்கச் சொல்லிவிட்டு சிவராசன் போயிருந்தார்.

எனது செலவுக்காக சாந்தன் ரூ.15,000 தந்து விட்டு 01.07.91 அன்று பகல் 2 மணிக்கு உதயம் தியேட்டரில் தன்னை சந்திக்கச் சொல்லியும் சிவராசனை 01.07.91 பகல் 1 மணிக்கு சந்திக்கச் சொல்லியும் சொன்னார்.

01.07.91 அன்று சிவராசனை காசி தியேட்டர் அருகே சந்தித்தேன். ஆட்டோவில் அவர் வந்தார்" என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது.

29.06.91 அன்றே பெங்களூருக்கு சென்றுவிட்ட சிவராசனை 01.07.91 அன்று சென்னை காசி தியேட்டரில் சாந்தன் எப்படி சந்தித்தார்?

இப்படிப்பட்ட முரண்பாடுகள் வாக்குமூலங்களில் நிறைந்திருப்பது தெரியும்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# முகமூடியுடன் வரும் மொழித் திணிப்பு

அலசுவது -இராஜதந்திரி

அன்றைய பேரினவாதம் நேரடியாக நிறைவேற்ற முயன்ற இலட்சியங்களையே, இன்றைய பேரினவாதம் மறைமுகமாகவும், மிக நாசூக்காகவும் நிறைவேற்ற முயன்று வருகிறது.

புதிய பேரினவாதத்தின் நாசூக்கான தந்திரங்கள் தொடர்பாக ஏற்கனவே இதே பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

தற்போது மிக அபாயகரமான திட்டம் ஒன்று அரங்கேற்றப்பட இருக்கிறது. தமிழ் பேசும் இனத்தின் தனித்துவத்தை அழித்தொழிப்பதற்கான மற்றொரு உத்தி வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களமும், சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் போதிக்கப்பட வேண்டும் என்று சந்திரிக்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

15.09.99 அன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிங்கள மாணவருக்கு தமிழும், தமிழ் மாணவருக்கு சிங்களமும் போதிப்பது என்ற அறிவித்தல் மேலோட்டமாக நோக்கும்போது சாதாரணமானதாகவே தோன்றும்.

ஆனால் இதன் உள்நோக்கமும், எதிர்கால விளைவுகளும் மிகப் பாரதூரமானவையாகும்.

1948ம் ஆண்டின் பின்னர் சிங்கள ஆளும் வர்க்கத்தினர் இலங்கைத் தீவு முழுவதையும் பௌத்த நாடாக மாற்றுவதற்கு பிரதான தடைக்கல்லாக கருதுவது இரண்டு விடயங்களேயாகும்.

1. தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய பிரதேசம். 2. தமிழ் மொழி.

இந்த இரண்டையும் இல்லாது செய்துவிட்டால், நாடு முழுவதையும் சிங்களமயமாக்க எத்தடையும் இருக்கமாட்டாது.

தமிழ் பேசும் மக்களை சிங்கள இனத்துடன் ஒன்று கலக்கவைத்து, இலங்கைத் தீவை சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதே இறுதி இலக்கு.

இதன் காரணமாகவே நிலத்தையும், மொழியையும் குறிவைத்து சிங்கள அரசாங்கங்கள் திட்டங்களை தீட்டி வந்தன.

24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டுவருவதாகக் கூறி பதவிக்கு வந்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா.

தமிழ் மொழி மீதான சட்டரீதியான தாக்குதலை ஆரம்பித்து வைத்த பெருமை அவரையே சேரும். 1958ல் தனிச் சிங்களச் சட்டத்தை அவர் கொண்டு வந்து சிங்கள பேரினவாதத்தை திருப்தி செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கங்களும் சிங்கள மொழியை தமிழ் பேசும் மக்களிடையே திணித்து மொழிக்கலப்பை உருவாக்கவும், அதன் மூலம் இனக்கலப்புக்கு வழிவகை செய்யவும் பலத்த முயற்சிகள் செய்து வந்தன.

எனினும் சிங்களப் பேரினவாதத்தின் நோக்கங்கள் அவர்களது வாய்கள் மூலமே அவ்வப்போது அப்பட்டமாக கூறப்பட்டுமுள்ளன.

சிங்கள மகாஜன கட்சியின் தலைவரான ஆர்.ஜி.சேனநாயக்கா என்பவர் 1970ல் பின்வருமாறு கூறியிருந்தார்.

"இலங்கையிலுள்ள எல்லாவற்றையும் சிங்கள என்றே அழையுங்கள். சிங்கள இந்து, சிங்கள முஸ்லிம், சிங்கள கத்தோலிக்கர் என்று 'சிங்கள' என்பது அனைத்தோடும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்." என்று கூறியிருந்தார்.

இது அவரது கனவு மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதத்தினதும், அதனை திருப்தி செய்து வருகின்ற அரசாங்கங்களினதும் கனவாகவும் இருந்து வருகிறது.

சிங்களத்தை தமிழ் பேசும் மாணவர்களிடம் திணிக்கும் முயற்சிகள் காலத்துக்காலம் நடந்து வந்துள்ளன. வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் முயற்சிகளை அன்றைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்து வந்தனர்.

இந்த எதிர்ப்பின் காரணமாகவே தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்களை அனுப்பிவைக்கும் முயற்சிகள் கைகூடவில்லை.

1973ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் தமிழ் மாணவர்களிடம் சிங்களத்தைத் திணிக்கும் மற்றொரு அதிரடியான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

யாழ் குடாநாட்டில் 1973 ஜனவரிவரை தமிழ்ப் பாடசாலையாக இயங்கி வந்தது புத்தூர் பஞ்சுசீக பாடசாலை. அப் பாடசாலையில் 1973 ஜனவரிக்கு பின்னர் முதலாம் வகுப்பு முதல் சிங்களத்தை கட்டாய போதனா மொழியாகக் கற்பிக்கும்படி சிறிமாவே அரசாங்கத்தின் கல்வியமைச்சர் கட்டளையிட்டிருந்தார்.

சிங்களத்தில் படிக்க இஷ்டமில்லாத தமிழ்ப் பிள்ளைகளை புத்தூரிலுள்ள வேறு பாடசாலைகளில் சேர்க்கக்கூடாது என்றும் கல்வியமைச்சு கூறியிருந்தது.

இதனை எதிர்த்து தந்தை செல்வா தலைமையில் கூட்டணியினர் சட்டமறுப்பு இயக்கம் நடத்தியிருந்தனர்.

தமிழ் மாணவர்கள் தமிழில் படிக்கும் உரிமையை நிலைநாட்ட போட்டிப் பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்திருந்தனர்.

சிங்கள மொழித் திணிப்புக்கு மற்றுமொரு தந்திரமான முடிவையும் சிறிமாவோ அரசாங்கம் அப்போது முன்வைத்திருந்தது.

'மாணவர்கள் எந்த மொழியில் படிக்க வேண்டும் என்பதை அவர்களது பெற்றோர்கள் முடிவு செய்து கொள்ளலாம்' என்று அறிவிக்கப்பட்டது.

இது ஒரு கபடத்தனமான தந்திரமேயாகும். சிங்களப் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தமிழில் படிக்க வேண்டும் என்று ஒருபோதும் கூறப்போவதில்லை.

தமிழ்ப் பெற்றோர்கள் சிலர் வேலை வாய்ப்புக்கள் சலுகைகள் போன்றவற்றை கருத்தில் கொண்டு தமது பிள்ளைகள் சிங்கள மொழியில் படிப்பதற்கு அனுமதி வழங்குவர்.

சிங்கள மொழிமூலம் படிக்கும் தமிழ் மாணவர்களுக்கு மேலும் சலுகைகளை வழங்குவதன்மூலம் ஏனைய தமிழ் மாணவர்களையும் படிப்படியாக சிங்களத்தை போதனா மொழியாக ஏற்கவைக்கலாம் என்பதே சிறிமாவோ அரசாங்கத்தின் நோக்கமாக விளங்கியிருந்தது.

இத் திட்டத்தையும் கூட்டணியினர் அன்று கடுமையாக எதிர்த்தனர். இது தொடர்பாக அன்றைய உடுவில் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் தெரிவித்த கருத்துக்கள் ஆணித்தரமாக அமைந்திருந்தன.

"சிங்களம் போதிக்கும் பிரச்சனையில் மட்டும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் விருப்பத்தை கல்விப் பகுதியினர் கோரியிருப்பதன் உள்ளார்ந்த நோக்கம் தமிழினத்தின் மத்தியில் குழப்பத்தை உண்டாக்குவதேயாகும்.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகக் கற்பிப்பதா இல்லையா என்ற கேள்வியை ஆராயும் முன்னர், தமிழ் பேசும் மக்களது அடிப்படையான கல்விப் பிரச்சனைகள் பலவற்றுக்கு சட்டரீதியான தீர்வுகாணப்பட வேண்டும்.

தமிழ் பேசும் மாணவர்களுக்கு தமிழே போதனா மொழியாக இருக்கும் என்று திட்டவட்டமான ஒரு சட்டம் இருக்க வேண்டும். இது இல்லாத காரணத்தினால் தென்னிலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் மாணவர்கள் சிங்களத்தில் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

எனவே முதலில் தமிழே தமிழ் பேசும் மாணவர்களுக்கு கட்டாய போதனா மொழி என்று உறுதிப்படுத்தும் விதமாக இறுக்கமான சட்டம் ஒன்றை அரசாங்கம் கொண்டு வரட்டும்" என்று அமரர் வி.தர்மலிங்கம் 1972ம் ஆண்டிலேயே கூறியிருந்தார்.

தென்னிலங்கையில் தற்போதும் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் பலர் சிங்களத்திலேயே படித்துவருகின்றனர். மொழிக் கலப்புக்கு அவர்களில் கணிசமானோர் உள்ளாகியிருப்பதும் தெளிவான உண்மையாகும்.

எனவே, கடந்த காலத்தில் தமிழ் பேசும் மாணவர்களிடையே சிங்களத்தை திணிக்கும் முயற்சிகள் பின்வரும் வழிகளில் மேற்கொள்ளப்பட்டன.

1. தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தை கட்டாய பாடமாக்குவது.

2. எந்த மொழியில் படிப்பது என்பதை பெற்றோர்கள் தீர்மானிக்கட்டும் என்று கூறி, சலுகைகள் மூலம் தமிழ் பேசும் பெற்றோர்களை சிங்களத்தை ஏற்க வைப்பது.

ஆனால் இந்த வழி முறைகளுக்கு கடும் எதிர்ப்புக்கள் அன்று தோன்றியிருந்தன. அதற்கும் இரண்டு காரணங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

1. சிங்களத்தை திணிக்கும் முயற்சி என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

2. அன்றிருந்த தமிழ் பேசும் தலைமைகள் கடுமையாக எதிர்த்ததோடு, மக்களிடையே அம்பலப்படுத்தியமை.

இந்தக் காரணங்களால்தான் சிங்கள அரசாங்கங்கள் எதிர்பார்த்தளவுக்கு தமிழ் பேசும் மாணவர்களிடையே சிங்களத்தை திணிக்க முடியாமல் போனது.

அன்று எதிர்ப்பு காண்பிக்கப்படாது, இன்றுள்ள தமிழ்க் கட்சிகள் போல மௌனம் சாதிக்கப்பட்டிருந்தால், வடக்கு-கிழக்கு உட்பட நாடெங்கும் இன்று சிங்களமே போதனா மொழியாக மாற்றம் பெற்றுத் திகழ்ந்திருக்கும்.

ஆயினும் அன்று நிறைவேற்றத் தவறிய தமிழ் மொழி அழிப்பை புதிய ரூபத்தில், புதிய இனிப்பான கோஷங்களுடன் இன்று முன்னெடுக்க முனைந்துள்ளனர்.

அன்று தமிழ் மாணவர்கள் மட்டுமே சிங்களம் கற்றல் வேண்டும் என்று கூறப்பட்டது. இன்று சிங்கள மாணவர்கள் தமிழும், தமிழ் மாணவர்கள் சிங்களமும் கற்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இது வித்தியாசமல்ல, உத்தி மாற்றம் என்பதே பொருத்தமானதாகும்.

'தமிழ் மாணவர்களை மட்டுமா சிங்களம் கற்கச் சொல்கிறோம், சிங்கள மாணவர்களையும்தான் தமிழ் கற்குமாறு கூறுகிறோம். எனவே இது சிங்கள மொழித் திணிப்பல்ல,' என்று காண்பிக்கும் உத்தியாகும்.

நடைமுறையில் சிங்கள மாணவர்கள் தமிழை கற்கப் போவதில்லை. அவர்கள் கற்காது விட்டால்கூட தமிழ் பாடத்தில் சித்தியடைந்துள்ளதாக புள்ளிகள் வழங்கப்படலாம். பேரினவாதம் எங்கும் பரவியுள்ள நிலையில், சிங்கள ஆசிரியர்கள் தமிழைக் கட்டாயமாகப் படித்து தேர்ச்சி பெறுமாறு சிங்கள மாணவர்களை தூண்டமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல, சிங்கள மாணவர்கள் உண்மையாகவே தமிழ் கற்றால்கூட அதில் பயன் ஏதும் கிடையாது. ஏனெனில் சிங்களம் கற்ற தமிழர்களோடு அவர்கள் சிங்களத்தில்தான் உரையாடுவார்கள்.

இதனால் தமிழர்கள்தான் தமது மொழியை மறக்க வேண்டியிருக்குமே தவிர, சிங்கள மொழிக்கு எவ்வித பாதகமும் நேராது. தமிழ் மக்களாலும் பேசப்படும் மொழியாக மாறுவதுடன், படிப்படியாக தமிழ் பேசும் மக்களை தமிழை மறக்கவைக்கும் பணியையும் செய்யும்.

தற்போதுகூட தமிழ் பேசும் அதிகாரிகள் தமது உயரதிகாரிகளுடன் சிங்களத்திலேயே உரையாடுகின்றனர். அதுமட்டுமல்ல சிங்களம் தெரிந்த தமிழ் அதிகாரிகள் பலர் தமிழர்களோடு கூட சிங்களத்திலேயே உரையாட முற்படுகின்றனர்.

எனவே தமிழ்பேசும் மக்களது நாளைய தலைமுறையான இன்றைய மாணவர்கள் சிங்களம் கற்றுவிட்டார்கள் என்றால், தமிழ்மொழி அமுலாக்கல் என்ற பிரச்சனைக்கும் இடமிருக்காது. சிங்களத்தில் உள்ளவற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

பின்னர் அவர்களது பிள்ளைகளுக்கு சிங்களத்தை மட்டுமே போதனா மொழியாக அரசாங்கம் அறிவித்தாலும் எதிர்ப்பு இருக்காது. மெல்லத் தமிழின் கழுத்தை நெரிக்கும் இந்த அபாரமான திட்டத்துக்கே சந்திரிக்கா அரசாங்கம் அடிக்கல் நாட்டப் போகிறது.

இலங்கைத்தீவில் ஆளும் இனமாக சிங்கள மக்களும், ஆளப்படும் இனமாக தமிழ் பேசும் மக்களும் உள்ளனர். இந்நிலையில் பரஸ்பரம் மொழிகளைக் கற்றால்கூட, ஆளும் இனத்தின் மொழிதான் இறுதியில் மேலோங்கும். ஆளப்படும் இனத்தின் மொழி விழுங்கப்படும்.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தாமாக விரும்பி மொழிகளைக் கற்பது என்பது வேறு விடயம்.

அரசே திட்டமிட்டு, பாடசாலைகளில் மொழித் திணிப்பை மேற்கொள்ள முன்வருவதையே எதிர்த்தாக வேண்டும். அதன் உள்நோக்கம் புரிந்து கொள்ளப்படவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் திடீரென்று இவ்வாறான முடிவை சந்திரிக்கா அரசாங்கம் மேற்கொண்டமையும் ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

தமிழ் மொழி அமுலாக்கல் என்பது கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு வந்துள்ளது. மூன்று மாதங்களுக்குள் தமிழ் மொழி அமுலாக்கல் சகல மட்டங்களிலும் நடைமுறைக்கு வரவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் பணிப்புரை விடுத்தே மூன்று வருடங்களாகப் போகின்றன.

இந்த அறிவிப்புக்கு சில தமிழ்க் கட்சிகள் விழுந்தடித்து வரவேற்பு தெரிவித்திருந்தன. ஆனால் முன்பிருந்ததைவிட தமிழ் மொழி அமுலாக்கல் இன்று மோசமான நிலையில் உள்ளது.

தமிழ் தெரிந்த ஊழியர்கள் அமைச்சுக்களில் போதியளவு இல்லை என்று புளித்துப்போன காரணத்தையே கூறிவருகிறார்கள்.

அவ்வாறு ஊழியர்கள் பற்றாக்குறை என்றால், புதிதாக வேலைக்கு ஆட்களை சேர்க்குமாறு கூறினாலும், நிதிப்பற்றாக்குறை என்று கைவிரித்து வந்தனர்.

ஆனால் தற்போது சிங்களம் கற்பிக்கவும், தமிழ் கற்பிக்கவும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை வேலைக்கு சேர்ப்பதற்கு ஆட்சியாளர்கள் முன்வந்துள்ளனர்.

சிங்கள மக்களுக்கு தமிழ் தெரியாமல் இருப்பதும், தமிழ் மக்களுக்கு சிங்களம் தெரியாமல் இருப்பதுதான் இனப்பிரச்சனைக்கான காரணம் என்பதுபோல பிரச்சனையை சிறுமைப்படுத்தி காண்பிக்கவே ஆட்சியாளர் முனைகின்றனர்.

தமிழ் பேசும் மக்களது தனித்துவத்தை ஏற்றுக்கொண்டு, தங்கள் பிரதேசத்தில் தங்கள் தலைவிதியை தீர்மானிக்கும் அதிகாரத்தை வழங்க முன்வருவதே இன்றைய தேவையாகும். இதற்கு ஆட்சியாளர்கள் முன்வராது இருப்பதே இனப்பிரச்சனை தீவிரமாகிச் செல்வதற்கு காரணமாகும்.

எனவே, தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களத்தை போதிப்பது மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பது என்பது, தமிழ்த் தேசிய இனத்தையே இல்லாதொழிக்கும் தீர்வுக்கான அடியெடுப்பாகவே அமைந்துள்ளது.

## உஷார்-உஷார்-உஷார்

சுதந்திரன 8—34—7

### தாய்மொழியில் கல்வி போதனை
### இரண்டாவதுமொழியாக ஆங்கிலம்!
### இவைகள் முதலில் சட்டமாக வேண்டும்!
### அதன்பின்னே சிங்களத்தைப்பற்றி முடிவு!

ஸ்கந்தவரோதயாவில் தர்மலிங்கம் தெளிவுரை

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதா இல்லையா என்பதை தமி...ங்கள் ஆலோசிப்பதற்கு முன் கல்வி மொழியைப் பொறுத்தவரையில் அரசாங்க...ல முக்கிய தீர்மானங்களை எடுத்து அவற்றை சட்ட மூலம் உறுதிப்படுத்...வேண்டும் தமிழ்ப் பிள்ளைகளுக்...

தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் சிங்கள மயப்படுத்துவதன்மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதுதான் இன்றைய ஆட்சியாளரதும் இறுதி இலக்கு என்பது உறுதியாகியுள்ளது.

ஏற்கனவே இருந்த அரசாங்கங்கள் முன்னெடுத்த சிங்கள மொழித் திணிப்பு இன்றைய ஆட்சியாளரால் புதிய முகமூடியுடன் கொண்டுவரப்படுகிறது.

சமீபத்தில் கல்வியமைச்சு வெளியிட்ட பாடப்புத்தகங்களில் வரலாறுகள் திரித்துக் கூறப்பட்டமையும் தற்செயலான ஒன்றல்ல. தமிழ் பாடப் புத்தகங்களில் சிங்கள சொற்களும் கலக்கப்பட்டிருந்தன.

இப்போதும் அதே கல்வியமைச்சும், ஜனாதிபதியும் இணைந்தே சிங்கள மொழித் திணிப்புக்கு நாசூக்கான திட்டத்தை முன்வைத்துள்ளனர்.

ஆனால் வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளது விருப்பத்தை மீறி இந்த மொழித் திணிப்பை ஆட்சியாளர் முன்னெடுக்க முடியுமா? என்பது கேள்விக்குறியேயாகும்.

புலிகள் இதனை எதிர்க்கும் பட்சத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் போதிக்க எத்தனைபேர் முன்வருவார்கள்? என்பதும் சந்தேகத்துக்கு இடமானதே.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்தியாவில் பெரும்பான்மையான இனத்தினர் பேசும் மொழி இந்தியாகும்.

இந்தி திணிப்பை எதிர்த்து தமிழ்நாட்டு மக்களும், ஏனைய மாநில மக்களும் கிளர்ந்தெழுந்தனர். இந்த எதிர்ப்புக்களைக் கண்டு பின்வாங்கிய இந்தியப் பிரதமர் அமரர் நேரு அவர்கள், 'இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பாதவரை இந்தி படிக்கத் தேவையில்லை' என்று உத்தரவாதம் வழங்கியிருந்தார்.

ஆனால் இங்கு, தம்மோடு ஒட்டியிருக்கும் தமிழ்க் கட்சிகளைக்கூட கலந்தாலோசிக்காது தமிழ் மாணவர்களுக்கு சிங்களம் போதிக்கும் முடிவை சந்திரிக்கா அரசாங்கம் எடுத்திருக்கிறது.

ஒரு தேசிய இனத்தின் இரு விழிகளாக உள்ளமை நிலமும், மொழியுமாகும். நிலம் பறிபோய்க் கொண்டிருக்கிறது. மொழியை அழிக்க நகர்வுகள் நாசூக்காக நடக்கின்றன.

தமிழ்பேசும் தரப்பு இவற்றையிட்டு விழித்துக்கொள்ளத் தவறுமானால், அடுத்த நூற்றாண்டின் மத்திய பகுதியில், தமிழ் பேசும் மக்கள் இனம் மாறி, மொழி மாறி நிற்பர் என்பது உறுதியாகும்.

---

# சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

பொதி வருகிறது என்று பூச்சாண்டி காட்டி விட்டு, இப்போது சமவாய்ப்புச் சட்டம் என்று புதிய பூச்சாண்டி காட்ட ஆரம்பித்துள்ளனர்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. தமிழ் மொழி அரச கரும மொழிகளில் ஒன்றாக சட்டத்தில் இருக்கிறது.

அவ்வாறு சட்டத்தில் இருப்பதைக் கூறிக் கூறியே, தமிழ் பேசும் மக்களுக்கு சம உரிமை இருப்பதாக உலகை ஏமாற்றி வருகிறார்கள்.

நடைமுறையில் தமிழ் மொழி அமுலாக்கல் எப்படி இருக்கிறது என்பது தெரிந்த சமாச்சாரம்.

அப்படித்தான் சமவாய்ப்புச் சட்டம் என்று ஒன்றைக் கொண்டுவந்து, தமிழ் பேசும் மக்களுக்கு சமவாய்ப்புக் கொடுத்துவிட்டதாக சர்வதேச சமூகத்தின் காதுகளில் பூவைக்கப்போகிறார்கள்.

***

பல நூறு கோடி செலவில் ஜனாதிபதிக்கான பாதுகாப்பான மாளிகை உருவாகப்போகிறது. இதனை கட்டி முடிக்க பல ஆண்டுகளாகும்.

இதன் மூலம் பின்வரும் உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி.

1) ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்துக் கட்டும் யோசனை கிடையவே கிடையாது.

2) இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு காணும் எண்ணமும் கிடையவே கிடையாது.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுமானால் ஜனாதிபதி மாளிகையைப் பாதுகாப்பான இடத்தில் புதிதாக கட்டத் தேவையில்லை. தற்போதுள்ளதே போதும் அல்லவா.

எனவே, இந்த ஆண்டுக்குள் இனப்பிரச்சனை தீர்வு, அடுத்த ஆண்டு மத்தியில் தீர்வு என்பதெல்லாம் கலப்படமே இல்லாத பொய்கள் என்பதற்கு வேறு உதாரணம் தேவையா?!

***

இலங்கை வெளிநாட்டமைச்சினால் 'நம்பிக்கை' என்ற பெயரில் பிரசுரம் ஒன்று தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டு வருகிறது.

இறுதியாக வெளியான 'நம்பிக்கை'யில் நீலனின் மரணச் செய்திதான் முக்கிய இடம் பெற்றுள்ளது.

நீலனது பழைய பேட்டி ஒன்றையும் கடைசிப் பக்கத்தில் பிரசுரித்துள்ளனர்.

தமிழில் அந்தப் பேட்டிக்கு சூட்டப்பட்டுள்ள தலைப்பு, 'நீலனின் வாசகம்' வாசகம் என்பதை 'வாசகம்' என்று போட்டு தமிழைக் கொன்று விட்டார்கள். நீலனின் கொலையை கண்டித்து, தமிழைக் கொன்றுவிட்டனர்.

அதே பிரசுரத்தில் புலிகளால் கொல்லப்பட்டோரின் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டு திருமலை மாவட்ட எம்.பி.கே. கனகரட்னம் கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. யார் அந்த கனகரட்னம்? வெளிநாட்டமைச்சுக்கே வெளிச்சம்!

இவ்வாறான பிழையான தகவல்களுடன், ஏராளமான தமிழ் கொலைகளுடன் வெளிநாட்டமைச்சு பிரசுரம் வெளியிடுவதால் என்ன பயன்?

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களை வென்றெடுக்கப்போகிறார்களாம். இது நல்ல தமாஷ்.

***

சிங்கள மொழித் திணிப்புக்கு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்ற திட்டம் ஒன்று தயாராகிவருகிறது.

இதனை உணராது 'சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழிப் போதனைக்கு ஆசிரியர் திரட்டல்' என்று தமிழிலேயே தலைப்புச் செய்தியாக போடுவது முறைதானா? செய்தியைப் பார்ப்பவர்கள், ஏதோ சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கத்தான் கரிசனை காண்பிக்கப்படுவதாகவே நினைப்பர் அல்லவோ.

***

## குழிக்குள் இல்லாத தடயங்கள்

நாம் எதிர்பார்த்தபடியே செம்மணி புதைகுழி விவகாரம் போய்க் கொண்டிருக்கிறது.

"சில குழிகளில் தடயங்கள் இருக்கும். பல குழிகளில் இருக்காது.

மொத்தமாக மறைத்தால் உலகம் நம்பாது. அதனால் சிலவற்றை விட்டுவைப்பார்கள். அதனைக் காண்பவர்கள் நீதியான விசாரணை நடப்பதாக நினைப்பார்கள்."

இது இன்று நேற்றல்ல, புதைகுழி தோண்ட ஆரம்பிக்கு முன்பாகவே 'முரசு' கூறிய கணிப்பு. இன்று அதுதான் நிதர்சனம்.

மண்ணியல் நிபுணர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பார்வையாளர்களே தவிர, மண் தோண்டப்பட்டதா இல்லையா என்பதை கண்டறியும் நிபுணர்களல்ல.

ராஜபக்ஷ உண்மையைக் கூறியதால் அவரைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் சிங்களப் பத்திரிகைகள் சில தாறுமாறாக எழுதிவருகின்றன.

இந்நிலையில் மண்ணியல் நிபுணரின் மனநிலை தாமசங்கடமானது. இதனால்தான் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு வருமாறு முதலிலேயே கோரப்பட்டது. அப்போது அரசாங்கம் மறுத்துவிட்டது.

சூரியகந்தைப் புதைகுழிகள் தோண்டப்பட்டதும், கொலை யுகம் ஒழிந்தது! என்று சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் பாராட்டின.

செம்மணி தோண்டப்பட்டதும், அதனை இனம் காட்டிய ராஜபக்ஷவை 'இனத்துரோகி ஒழிக' என்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 81

**கடந்தவாரம்**

**சாராவின் காதலன் ஒருநாள் காணாமல் போகிறான். அமீனின் படையினர்தான் அவனைக் கடத்திப் போனார்கள். சாராவை தனது மாளிகையிலேயே தங்கவைக்கிறான் அமீன். தனது காதலன் மூலம் கர்ப்பமடைந்திருந்த சாராவுக்கு பிரசவம் நடக்கிறது.**

**இனி....**

# இடி அமீன்

அதிபர் மாளிகையிலேயே சாராவுக்கு சுகப்பிரசவம் நடந்த பின்னர், முலாகோ மருத்துவமனைக்கு அவர்களை ஏன் இடமாற்ற வேண்டும்? என்பது சுகாதார அமைச்சர் சியம்பாவுக்குப் புரியவில்லை.

சாரா யார் மூலம் கருவுற்றிருந்தாலும் தற்போது அமீனின் மனைவி. அதனால் பிரசவமான அவளைப் பார்க்கச் செல்லும் போது தனது மனைவியையும் அழைத்துச் சென்றார் சியம்பா.

தன் மனைவியையும் அமீன் கெட்ட நோக்கத்தோடு பார்த்துவிடுவானோ என்ற பயமும் சியம்பாவுக்கு இருந்தது.

இந்தப் பயம் சியம்பாவுக்கு மட்டுமன்றி, ஏனைய அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கும் இருந்தது.

குடும்பத்தோடு கலந்து கொள்ள வேண்டிய அரச நிகழ்ச்சிகளுக்கும் அவர்கள் தனியாகவே வந்து கலந்து கொள்வார்கள்.

ஒரு சில அதிகாரிகள் மட்டும் தங்கள் மனைவிகளை அமீனுக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள்.

தங்கள் ஊதிய உயர்வு, பதவி உயர்வு என்பவற்றையிட்டு அமீனிடம் பேசுவதற்கு தங்கள் மனைவிமாரை அனுப்பிவைப்பதும் அந்த அதிகாரிகள்தான்.

அமீனின் மாளிகைக்கு சியம்பாவும் மனைவியும் சென்றதுமே, சாராவும், குழந்தையும் இருந்த பகுதிக்கு உடன் அழைத்துச் செல்லப்பட்டனர். தாயும், சேயும் நலமாக இருந்தனர்.

சியம்பாவை அமீன் காணவிரும்புவதாகத் தகவல் வந்தது. மனைவியை சாராவுடன் விட்டுவிட்டு சியம்பா சென்று அமீனைச் சந்தித்தார்.

"முலாகோ மருத்துவமனையில் தாயையும், சேயையும் சேர்த்ததும் ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும்!" என்றான் அமீன்.

சியம்பா குழம்பியவாறு "என்ன அறிக்கை!" என்று கேட்டார்.

**"கிறிஸ்மஸ் தினத்தன்று ஜனாதிபதி அமீனுக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது. தாயும், சேயும் முலாகோ மருத்துவமனையில் நலமாக உள்ளனர், என்று பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி அனைத்துக்கும் அறிக்கை கொடுத்துவிடுங்கள்"** என்று கூறினார்.

சியம்பா மிகவும் தயங்கி, அந்தக் கேள்வியைக் கேட்டார்: "தங்கள் மனைவியின் பெயரை...?"

குறுக்கிட்டு அமீன், **"தேவையில்லை. தாயின் பெயர் தேவையில்லை. குழந்தை பிறந்துள்ளது என்று தெரிவித்தால் மட்டும் போதும்!"**

முலாகோ மருத்துவமனையில் சாராவும் குழந்தையும் அனுமதிக்கப்பட்ட மறுநாள், அமீனின் மற்றொரு மனைவியான மெடீனா சென்று பார்வையிட்டாள்.

அமீன்தான் அவளை வற்புறுத்தி அங்கு அனுப்பிவைத்தான். மெடீனா மருத்துவமனைக்குச் சென்று பார்வையிடுவதை படம் பிடித்து தொலைக்காட்சியில் காண்பிக்குமாறு தகவல் தொடர்புத் துறை அமைச்சருக்குக் கட்டளை பறந்தது.

தொலைக்காட்சி நிலையத்தில் இருந்த சகல கமராக்களையும் தூக்கிக்கொண்டு மருத்துவமனைக்குச் செல்லுமாறு தகவல் துறை அமைச்சர் தொலைக்காட்சிப் பிரிவுக்கு உத்தரவிட்டார்.

மெடீனாவுக்கே தர்ம சங்கடமாகி விட்டது. பல கமராக்கள் அவளை ஒளி வெள்ளத்தில் நனைத்தன. மருத்துவமனையில் இருந்தவர்கள் வாய் பிளந்தபடி இந்தக் கூத்துக்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மெடீனா சாராவை நலம் விசாரித்தாள். இதற்கு முன்னர் இருவரும் நேரில் சந்தித்ததில்லை.

குழந்தையைத் தூக்கி முத்தமிட்டுவிட்டு மெடீனா விடைபெற்றுக் கொண்டாள். அவள் காரில் சென்று ஏறும்வரை கமராக்கள் பின் தொடர்ந்தன.

மெடீனாவுக்கு சினிமாவில் நடித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அன்று மாலையே மெடீனா மருத்துவமனைக்குச் சென்ற காட்சியும், குழந்தையைக் கொஞ்சுவதும் காண்பிக்கப்பட்டது.

ஆனால் சாராவைக் காணவில்லை. சாராவைக் காண்பிக்க வேண்டாம் என்று அமீன் கட்டளையிட்டிருந்தான்.

சில நாட்களின் பின்னர் முலாகோ மருத்துவமனையில் இருந்து சாராவையும், குழந்தையையும் மாளிகைக்கு அழைத்துக் கொண்டான்.

ஆகஸ்ட் 2ம் திகதி ஆபிரிக்க நாடுகளது உச்சி மாநாடு உகண்டாவில் நடைபெற்றது.

அதற்கு முதல் நாள் தன் செயலாளரை அழைத்தான் அமீன்.

**"இன்று முதல் என்னை 'ஃபீல்ட் மார்ஷல்' என்றுதான் அழைக்க வேண்டும். இந்த அறிவிப்பை உடன் வெளியிட ஏற்பாடு செய்யுங்கள்!"** என்றான்.

தனக்குத் தானே பட்டம் சூட்டிக் கொண்ட அமீனது செயல் அவனது செயலாளருக்கே உள்ளூரச் சிரிப்பாக இருந்தது.

சிரிப்பை அடக்க மிகச் சிரமப்பட வேண்டியிருந்தது. சிரித்தால் பதவி மட்டுமா, உயிரும் காலியாகிவிடும்.

தொலைக்காட்சி, வானொலி பத்திரிகைகள் யாவற்றிலும் அமீனுக்கு 'ஃபீல்ட் மார்ஷல்' பட்டம் கிடைத்துள்ளதாகச் செய்திகள் வெளியாகின.

யார் கொடுத்த பட்டம் என்று கூறப்படவில்லை. தனக்குத்தானே அமீன் சூட்டிக் கொண்ட பட்டம் என்றா தெரிவிக்கவா முடியும்?

ஆகஸ்ட் 2ம் திகதி மற்றுமொரு எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தேறியது. மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் உடனடியாகத்தான் அமீனால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

**"இனிய கனவான்களே! உங்கள் முன்பாக ஒரு நல்ல காரியம் நடக்கப்போகிறது. இந்த நாள் மறக்க முடியாத நாளாக எனக்கு இருக்கப் போகிறது,"** என்று அமீன் கூறியபோது, மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒன்றுமே புரிய



வில்லை.

அவர்களது குழப்பமான முகங்கள் எதிரே அமீன் சிரித்தான். **"உங்களை அதிகம் குழப்பாது கூறிவிடுகிறேன். நான் இங்கேயே, இப்போதே, உங்கள் முன்பாகவே திருமணம் செய்து கொள்ளப்போகிறேன்."**

மாநாட்டு மண்டபமே சில நொடிகள் ஸ்தம்பித்தது. 'அமீனுக்கு இது எத்தனையாவது திருமணம்?' என்று பிரதிநிதிகள் பலருக்குள் கேள்வி எழுந்து விழுந்தது.

சட்டென்று தம்மைச் சுதாகரித்துக் கொண்ட பிரதிநிதிகள் சிலர் கரகோசம் செய்ய, ஏனையோரும் தொடர்ந்து கரகோசம் செய்தனர்.

சாரா மணப்பெண்ணாக அலங்கரிக்கப்பட்டு மாநாடு நடைபெற்ற மண்டப அறையொன்றில் தயாராக வைக்கப்பட்டிருந்தாள்.

அமீன் சைகை செய்ததும் சாரா அழைத்து வரப்பட்டாள். மாநாட்டு பிரதிநிதிகள் முன்பாக சாராவை மணந்து கொண்டான் அமீன்.

மாநாட்டுப் பிரதிநிதிகள் ஒவ்வொருத்தராக அமீனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். ஒரே ஒரு பிரதிநிதி மட்டும் சற்றுத் துணிச்சல் கலந்த குறும்புடன், அமீனின் காதருகே கேட்டார், "இது எத்தனையாவது திருமணம்?"



**தருவது ரசிகன்**

அமீன் அப்போது குஷியான மனதோடு இருந்தான். அதனால் சிரித்தபடியே கூறினான்; **"நான் கணக்கு வைத்துக் கொள்வதில்லை!"**

திருமணம் முடிந்ததும் அமீன் செய்த காரியங்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று மாநாட்டு பிரதிநிதிகளை எண்ண வைத்தன.

மாநாட்டு பிரதிநிதிகள் அனைவரும் விக்டோரியா ஏரிக்கு அருகில் உள்ள மாளிகை ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கிருந்து அவர்கள் பார்த்தபோது கண்ட காட்சி மலைக்க வைத்தது.

விக்டோரியா ஏரியின் மத்தியில் ஒரு தீவு போன்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. அந்தத் தீவைப் பாதுகாத்து நிற்கும் போர் வீரர்கள் போல டம்மிகள் செய்து வைக்கப்பட்டிருந்தன. அங்கு தென்னாபிரிக்க வெள்ளையர் ஆட்சியின் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

பிரதிநிதிகளுக்கு உண்மை புரிந்து விட்டது. தென்னாபிரிக்காவில் உள்ள 'கேப்ரவுன்' என்ற நகர் போன்ற மாதிரி வடிவம்தான் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதனை ஏன் இங்கு அமீன் உருவாக்கி வைத்திருக்கிறான் என்பதுதான் ஒருத்தருக்கும் புரியவில்லை.

தென்னாபிரிக்காவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரம் கேப்ரவுன். தென்னாபிரிக்காவும், அந்த நகரும் வெள்ளையர் ஆதிக்கத்தில் இருந்தன.

அந்த கேப்ரவுனை இந்த ஏரிக்கு நடுவே ஏன் நிறுவவேண்டும்? என்ற கேள்விக்கு, அடுத்த சில நிமிடங்களில் பதில் கிடைத்தது.

இராணுவ சீருடையில் ஃபீல்ட் மார்ஷலுக்குரிய உடைகள் பதக்கங்கள் அணிந்து கொண்டு பிரதிநிதிகள் முன் தோன்றினான் அமீன். அவனுடன் சாராவும் வந்திருந்தாள்.

"இங்கு உங்களை அழைத்து வந்ததும், எதிரே காணும் காட்சியும் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஏன் அதிர்ச்சியாகக் கூட இருக்கும். தென்னாபிரிக்காவில் இருக்கும் கேப்ரவுன் இங்கு எதற்காக முளைத்தது? என்று யோசிக்கிறீர்கள் அல்லவா?" என்று அனைவரையும் பார்வையால் தடவினான்.

'ஆம்' என்பதாய் தலைகள் அசைந்தன. அமீனுக்குப் பெரிய திருப்தி. தனது செயல் இத்தனை பிரதிநிதிகளையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது என்பதில்தான் அவனுக்குத் திருப்தி. அதிலும் தனது நோக்கத்தை அவர்கள் யாரும் அறியவில்லை. என்பது மகா திருப்தி.

தன் நோக்கத்தை அமீன் விளக்கியபோது தான் கூடியிருந்த பிரதிநிதிகள் அமீனுக்கு பைத்தியம் பிடித்திருக்கலாமோ என்று நினைத்தனர்.

"வெள்ளையர் ஆதிக்கத்தில் உள்ளது தென்னாபிரிக்கா. அங்குள்ள கேப்ரவுன் கறுப்பின மக்களுக்கு வரலாற்றுப் பெருமைமிக்க பெரும் சொத்து என்பதை நான் கூறித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. அந்த கேப்ரவுனை இப்போது கைப்பற்றப் போகிறது உகண்டா படை. ஆம் கேப்ரவுன் நம் வசமாகப் போகிறது. வெள்ளையர்களுக்கு உகண்டா விடப்போகும் சவால் இது. எமது விமானப்படை இன்னும் சில நொடிகளில் கேப் ரவுனில் உள்ள வெள்ளைப் படைகளைத் தாக்கி நிர்மூலமாக்கும் காட்சியைக் காணப்போகிறீர்கள்!" என்று முழங்கினான் அமீன்.

அமீனின் குரல் மறுபடி எழுந்தது: **"இன்று மாதிரி நகர்மீதுதான் தாக்குதல் நடத்துகிறோம். இது ஒரு ஒத்திகை மட்டுமல்ல, வெள்ளையர் ஆதிக்கத்துக்கு நாம் காட்டும் அடையாள எதிர்ப்பு. விரைவில் தென்னாபிரிக்காவுக்குச் சென்று கேப்ரவுனை மீட்கவும் நமது படை தயாராகும்."**

அமீன் கூறி முடிப்பதற்கும் விமானங்களது இரைச்சல் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

அதனால் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைக் கூறுவதற்கும் வாய்ப்பிருக்கவில்லை. இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் விக்டோரியா ஏரியாமீது வட்டமிட்டன.

அதன் பின்னர் குண்டுகளைப் பொழிந்தன. குண்டுகள் யாவும் ஏரிக்குள் விழுந்தனவே தவிர, ஒரு குண்டுகூட ஏரியின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த 'கேப்ரவுன்' போன்ற அமைப்புமீது விழவேயில்லை.

பிரதிநிதிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அமீனுக்கு வெட்கமாகிவிட்டது.

அந்த மண்டபத்தில் இருந்தபடியே மளமளவென்று அமீனிடமிருந்து உத்தரவுகள் பறந்தன.

குண்டு வீச்சு நடத்திவிட்டு தரை இறங்கிய இரண்டு விமானப்படை அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர்.

தாக்குதலுக்குப் பொறுப்பான அதிகாரியான ஸ்மட்ஸ் குவெட்டக்கோமீதும் அமீனுக்குக் கடும் கோபம்.

அந்த அதிகாரியின் பின்னணிபற்றி உடன் ஆராய்ந்து கூறுமாறு புலனாய்வுப் பிரிவுக்கும் பணிக்கப்பட்டது.

விசாரணையில் அந்த அதிகாரி மனைவி முன்னாள் ஜனாதிபதி ஒபடேக்கு தூரத்து உறவினர் என்று தெரிந்தது.

**"அதுதானே பார்த்தேன்! திட்டமிட்டுத்தான் எனக்கு தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறான்."** என்று கொதித்த அமீன் கூறினான்: **"அவனைக் கொன்று விடுங்கள்!"**

(இடி தொடரும்)

## யுவராணி திருமணம்



'செந்தூரபாண்டி', 'பாட்ஷா' உட்பட பல படங்களில் நடித்தவர் யுவராணி. யுவராணிக்கும் மலேசியா தொழில் அதிபர் ரவீந்திராவுக்கும் இடையே காதல் ஏற்பட்டு கல்யாணத்தில் முடிந்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் யுவராணி மலேசியா சென்றார். அங்குதான் ரவீந்திராவைச் சந்தித்தார்.

மலேசியாவில் ஏலக்காய் இறக்குமதி செய்யும் தொழில் அதிபராக இருக்கிறார் ரவீந்திரா.

யுவராணியும், ரவீந்திராவும் நெருக்கமாகப் பழகினார்கள். பின்னர் திருமணம் செய்து கொண்டனர். ஒருவருடத்திற்கு முன்னரே இவர்களது திருமணம் சிறப்பாக நடந்துவிட்டது.

சமீபத்தில்தான் கணவருடன் சென்னை திரும்பினார் யுவராணி. அதன் பின்னரே திருமண விஷயம் வெளியானது.

இனிமேல் சென்னையில்தான் தங்கியிருக்கப் போகிறாராம். தொலைக்காட்சித் தொடர்களிலும் நடிக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

தொழில் அதிபர்களை மணந்த நடிகைகளின் பட்டியலில் இணைந்து கொண்டுள்ளார் யுவராணி.

## பயணிக்கக்கூடாத நாள்



மலரப்போகும் மிலேனியம் பலத்த எதிர்பார்ப்புக்களையும், சர்ச்சைகளையும், ஊகங்களையும் உருவாக்கியுள்ளது.

டிசம்பர் 31ம் திகதியும், ஜனவரி 1ம் திகதியும் விமானங்களில் பயணம் செய்யக்கூடாது என்று அமெரிக்கர்கள் பலர் முடிவு செய்துள்ளனர்.

இதனால் டிசம்பர் 31, ஜனவரி 1 ஆகிய தினங்களில் ஏராளமான விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

கம்பியூட்டர் பிரச்சனையால் இந்த ஆண்டு முடிவிலும், ஆரம்பத்திலும் விமானப் போக்குவரத்துப் பாதிக்கப்படும் என்று அமெரிக்காகள் பயப்படுகின்றனர்.

## அணிவகுப்பு



அமெரிக்காவின் அச்சுறுத்தல், குண்டு வீச்சுக்கள் என்பவற்றின் மத்தியிலும் ஈராக் மக்கள் உறுதி குலையாது எதிர்த்து நிற்கின்றனர். ஈராக் பெண்களும் ஆயுதமேந்தி களம் புகப் பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

தற்போது ஈரானிலும் பெண்கள் இராணுவம் பெரிதாகியுள்ளது. மத சம்பிரதாயங்களை கடுமையாகக் கடைப்பிடிக்கும் ஈரானிலும் பெண்கள் ஆயுதமேந்தத் தடையில்லை.

22.09.99 அன்று ஈரானில் இராணுவ தினம் கொண்டாடப்பட்டது. பெண் இராணுவத்தினர் ஆயுதமேந்தி அணிவகுத்துச் செல்லும் காட்சியே இங்குள்ளது.

## கருத்தடை தகுமா?

குழந்தை பிறப்பைத் தடுக்க பெண்கள் கருத்தடை மாத்திரை சாப்பிடுவது இப்போது சாதாரணமாகிவிட்டது. ஆனால் கருத்தடை மாத்திரை சாப்பிடுவதால் உடல் நிலையில் ஓர் ஆபத்து ஏற்படும் அபாயம் இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டென்மார்க் நாட்டு மருத்துவ ஆராய்ச்சி துறையைச் சேர்ந்த டாக்டர் லினிமிலம் ஜாயெர் மற்றும் குழுவினர் புதிதாக இதுபற்றி ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர். அவர்கள் கருத்தடை மாத்திரைகள் சாப்பிடுவதால் நுரையீரல் மற்றும் கால்களின் ரத்த குழாய்களில் அடைப்பு ஏற்படும் அபாயம் அதிகரிப்பதாகச் சொல்கிறார்கள்.

இதற்கு அந்த குழுவினர் 15வயது முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்களிடம் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர். ஆனால் அதற்காக கருத்தடை மாத்திரைகளைக் கண்டு யாரும் பீதியடையத் தேவையில்லை என்றும் மருத்துவ அறிஞர்கள் சொல்கிறார்கள்.

## புதுமையான தம்பதி



ஹங்கேரி நாட்டில் உள்ளது ஜெகஸ்பெறெர்வா என்னும் நகரம். இங்கு ஒரு தம்பதி புதுமை செய்திருக்கிறது.

என்ன புதுமை என்று கேட்கிறீர்களா? கணவனும் மனைவியும் தங்களது பாலினத்தை மாற்றிக் கொள்ளத் தீர்மானித்தனர்.

இதனையடுத்து இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அறுவைச் சிகிச்சைகள் நடந்தன.

இந்த சிகிச்சைகள் முடிந்த பின்பு கணவராக இருந்தவர் மனைவியாகவும், மனைவியாக இருந்தவர் கணவராகவும் செயற்படுகின்றனர்.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் இருவரும் தங்களது பெயர்களை வெளியிட விரும்பவில்லை. என்னவெல்லாமோ நடக்குது இந்த உலகத்திலே!

## ஒன்றுக்கு இரண்டாக

இந்திய இராணுவத்தில் உள்ள கூர்க்கா இனத்தைச் சேர்ந்த இராணுவ வீரர்களுக்கு இரண்டு மற்றும் இரண்டுக்கு மேற்பட்ட மனைவிகள் இருப்பது கார்கில் போர் மூலம் தெரியவந்துள்ளது.

நேபாளத்தைத் தாயகமாகக் கொண்ட பெரும்பாலான கூர்க்கா இனத்தவரில் இரண்டு மற்றும் மூன்று பெண்களைத் திருமணம் செய்து கொள்வது சகஜம். இந்த பலதார முறை இன்றும் தொடர்கிறது.

கார்கில் போரில் வீரமரணம் அடைந்த கூர்க்கா இராணுவ வீரர் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகை, இரண்டு மனைவிகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அது போல கூர்க்கா இராணுவ வீரர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் பல உதவிகளும் இரண்டு அல்லது மூன்று மனைவிகளுக்கிடையே பிரித்துக் கொடுக்கப்படுவதும் உண்டு.

www.padippakam.com

## புது ரகம்

↓ நாற்காலிகள் பல ரகங்களில் பார்த்திருப்பீர்கள். நாற்காலிகளை கெட்டியாக பிடித்தபடி இருப்போரையும் பார்த்திருப்பீர்கள். இது நீங்கள் பார்த்திராத ரகமான நாற்காலி. பந்து வடிவில் செய்யப்பட்டது. டேவிட் ஃப்ரொஸ்ட் என்ற பிரிட்டிஷ் எழுத்தாளருக்கு இந்த பந்து நாற்காலிக்குள் இருந்து எழுதினால் தான் சிந்தனைகள் மூளையில் வந்து குந்துமாம். தாளில் வர முந்துமாம்.



## தமாஷ் 'கிளிக்'



→ இந்தப் படத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். இதில் உள்ள தமாஷ் புரிகிறதல்லவா! ஆடைகள் விற்பனை நிலையங்களுக்கு செல்லும் போது உங்களுக்கும் இப்படியான அனுபவம் ஏற்படக்கூடும்.

நகைச்சுவை உணர்ச்சியை கமராவாலும் காண்பிக்கலாம் நம்மை சிரிக்கவைக்கலாம் என்பதற்கு இந்தப் படப்பிடிப்பு உதாரணம்.

### தகவல் பெட்டி


## ஏழு குள்ளர்கள்

↓ இது என்ன குள்ளர்கள் அணிவகுப்பா? இல்லை ஐயா இல்லை. குள்ளர்கள் நடிக்கும் நாடகம். இந்தியாவில், பெங்களூரில் தற்போது கலக்கிவரும் நாடகம் இது.

'ஸ்னோ ஒயிட்டும் ஏழு குள்ளர்களும்' என்ற நாடகத்தில் நடிக்கும் ஏழு குள்ளர்களுக்கும் இருபது முதல் நாற்பது வயது. இந்த நாடகம் இதுவரை 701 மேடைகளில் ஏறிவிட்டது. ரசிகர்களிடம் பலத்த வரவேற்பு.

தோற்றத்தை பற்றி கவலைப்படாது தன்னம்பிக்கையுடன் முயன்றால் அசத்தலாம் என்பதற்கு இவர்களும் உதாரணம்.





## அபூர்வ தேங்காய்

↑ இது நம்நாட்டு அபூர்வ சமாச்சாரங்களில் ஒன்று. வவுனியா குருமன்காட்டில் உள்ள தென்னை ஒன்றுதான் இந்த அதிசயத் தேங்காயைப் பிரசவித்தது.

பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு, தென்னையை வைத்தால் இளநீரு. அதுமட்டுமல்ல இப்படியான தென்னைகள் மூலம் அதன் உரிமையாளருக்கு கிடைக்கும் பெரும்பேரு. (பட உதவி: தீபன்)

## பல் உறுதி




← பல்லிலே பலம் பல காட்டும் பல்வீரர் இவர். இவரது வாயில் இருப்பது பெரிய கியாஸ் அடுப்பு.

இவரது பெயர் பிரங்க் சைமன். வீதிகளில் சாகசம் புரிபவர். இவரது பல் சாகசங்களுக்கு பயங்கர வரவேற்பு. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்று அவ்வையார் நமக்கு கூறினார். இவருக்கு யார் கூறியிருப்பார்கள்? பற்களை இவ்வளவு உறுதியாக வைத்திருக்கிறாரே!

(பட உதவி: தாரா. குலசேகரன்)

## வீதியில் சங்கிலி



→ நீண்ட சங்கிலி ஒன்று தெருவில் சுழன்று கிடப்பதுபோலத் தெரிகிறதல்லவா! இது வெறும் சங்கிலியல்ல. சைக்கிள்களில் வரும் மனிதச் சங்கிலி.

மத்திய ஃபிரான்ஸிலுள்ள ஒரு நெடுஞ்சாலையில் சைக்கிள் வண்டிச் சவாரி ஒன்று போவதைத்தான் மேலிருந்த வண்ணம் இவ்வாறு அற்புதமாக கமராவுக்குள் நுழைத்துள்ளார் கமராக்காரர்.

செயின் ஃபிளாவர் என்ற இடத்திலிருந்து அல்பி என்ற நகரம் வரையிலான 236 கிலோமீட்டர் தூரம்வரை போட்டியாளர்கள் ஓடிக்கடக்க வேண்டும்.

இப்போட்டியின் 13வது கட்டத்தில் அமெரிக்க சைக்கிளோட்ட வீரர் ஆம்ஸ்ட்ரோங் முன்னணியில் செல்கிறார். இப்போட்டியின் இறுதியில் இத்தாலி சயகோவைச் சேர்ந்த சல்வட்ரோர் கொம்மெஸ்ஸோ என்பவரே முதலாவதாக வந்து வெற்றியீட்டினார்.

இருப்பினும் இந்த சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றிய பல வீரர்கள் போதை வஸ்துக்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற புகார் பரவலாக எழுந்துள்ளது. (பட உதவி: ஏ.எம்.ரபீடின், கட்டார்)

## கௌரவ மரணம்

↓ யானைக்கொரு காலம் வந்தால், பூனைக்கொரு காலம் வரும் என்பது பழமொழி. பாம்புக்கு ஒருகாலம் வந்தால் தவளைக்கும் ஒருகாலம் வரும் என்பது இதோ புதுமொழி.

தவளையை பாம்பு விழுங்க எத்தனிக்கையில், வேறு வழியின்றி போராட முடிவு செய்த தவளை எதிர்த்தாக்குதல் தொடுத்தது. மன உறுதியோடு போராடிய தவளையிடம் பாம்பு தோல்வி கண்டது. பாம்பை தோற்கடித்து தவளை விழுங்கும் காட்சிதான் இது. ஏழரை மணிநேர போராட்டத்தில் பாம்பை முழுவதும் விழுங்கிவிட்டு செத்துப்போனது தவளை. ஆனால் கௌரவமான சாவு! (பட உதவி: ஏ.எச்.எம்.ஹமீஸ்)





படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 122

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# புதுநடிகருக்கு கிடைத்த ஏமாற்றம்

'மா' என்ற எழுத்தில் பெயர் ஆரம்பிக்கும் நான்கெழுத்து நடிகை அவர். தமிழில் சமீபத்தில் அறிமுகமானார்.

இவர் நடித்துள்ளதோ சில படங்கள்தான். ஆனால் சினிமா உலகின் முக்கிய புள்ளிகள் பலர் 'மா' நடிகைக்கு அறிமுகமாகிவிட்டனர்.

இவரிடம் நடிப்புத் திறமை இல்லாதுவிட்டாலும், இளமைக்கு பஞ்சமில்லை. அதனால் சில படங்களில் இவருக்காகவே கதாபாத்திரம் ஒன்றை உருவாக்கி நடிக்க வைத்தனர்.

அப்படங்களில் இவர் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடித்திருந்தாலும், முக்கியத்துவம் இருக்கவில்லை. கவர்ச்சியாக உடம்பைக் காண்பிக்கும் பாடல் காட்சிகளில் மட்டும் அதிகமாக பயன்படுத்தப்பட்டார்.

தற்போது வெளியாகியுள்ள ஒரு படத்தில் இவர்தான் நாயகி. பாடல் காட்சியொன்றில் இவரது தொப்புளைத்தான் அடிக்கடி காண்பிக்கிறார்கள்.

இப்படத்தின் நாயகன் புதியவர். மூன்றெழுத்தில் பெயர் கொண்டவர். புதுமுகமான அந்த நடிகருக்கு 'மா' நடிகையின் நெருக்கம் மயக்கம் தந்துவிட்டது.

நடிகைக்கும் தன்னைக் கண்டு மயங்கிய புதுநாயகன் மீது ஒரு ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. இதனால் படப்பிடிப்பு தவிர்ந்த நேரங்களிலும் சந்திக்க ஆரம்பித்தனர்.

'மா' நடிகை தங்கியிருந்த நட்சத்திர விடுதியிலேயே நடிகரும் அறை எடுத்துத் தங்கினார்.

இருவரும் தனித்தனியாக அறை எடுத்திருந்தாலும், தங்கியது ஒரே அறையில்தான்.

திடீரென்று ஒருநாள் தனது நெருங்கிய உறவினர் ஒருவர் வரப்போவதாக 'மா' நடிகை கூறியதால், நடிகர் தன் அறையிலேயே தங்கியிருந்தார்.

நடிகையை ஒருநாள் முழுவதும் சந்திக்கவில்லை. அந்த உறவினருடனேயே நடிகை நாள்முழுவதும் இருந்துள்ளார்.

புது நடிகருக்கு சந்தேகம் வந்துவிட்டது. மறுநாள் அதிகாலை சென்று அறைக்கதவை தட்டியிருக்கிறார்.

ரூமை கிளீன் பண்ணும் பையன்தான் வந்திருக்கிறானாக்கும் என்று நடிகை நினைத்தாரோ என்னவோ, இரவு உடையுடன் வந்து கதவைத் திறந்திருக்கிறார்.

நடிகையின் தலைக்கு மேலாக உள்ளே பார்வையை அனுப்பிய நடிகருக்கு செம்மையான அதிர்ச்சி.

நடிகையின் படுக்கையில் அந்த 'உறவினர்' கிடந்த கோலம், நடிகருக்கு உணர்த்த வேண்டியதை உணர்த்தியது. நடிகைக்கோ தூக்கக்கலக்கம் முறிந்துவிட்டது. நடிகரை அந்த நேரத்தில், அந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கவில்லை.

எதுவும் பேசாமல், தன் அறைக்கு திரும்பிவிட்டார் நடிகர். அதன் பின்னர் படப்பிடிப்பில்கூட நடிகையிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.

நடிகைக்கோ புது நடிகருடனான உறவைக் கத்தரிக்க விருப்பமில்லை. இறுதியான பாடல்காட்சி ஒன்று எடுக்கப்பட்டபோது, தன் ஆசையை காண்பிக்க நடிகரை உடும்புப்பிடியாக பிடித்திருக்கிறார் நடிகை. 'கட்டிப்பிடிச்சுக்க என்று சொன்னால் இப்படிக் கெட்டியாகப் பிடிச்சுக்கிட்டியே' என்று இயக்குநரும் கிண்டலடித்திருக்கிறார்.

நடிகையின் அந்தப் பிடியோடு நடிகரின் கோபம் பறந்துபோய்விட்டது. மறுபடி இருவரும் நட்பைத் தொடர்கின்றனர்.

'மா' நடிகையின் நடவடிக்கைகள் பற்றி நன்கு தெரிந்துவிட்டதால், அவருக்கு தான் மட்டும் நண்பரல்ல என்பது புது நடிகருக்கும் இப்போது தெரியும்.

## வாரிசு நடிகர்

மார்க்கண்டேய நடிகர் என்று பயரெடுத்தவரின் மகன் அவர் பெயரைக் காப்பாற்றவில்லை. சில படங்களிலேயே நடித்திருக்கும் அந்த வாரிசு பல நடிகைகளுடன் சுற்றுகிறது.

பெயரில் லட்சுமி உள்ள நடிகையுடன் சில தனிமையான இடங்களில் காணப்பட்டுள்ளார் வாரிசு. சென்னை அமிஞ்சகரையில் உள்ள ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் இவர்கள் அடிக்கடி சந்திக்கின்றனர்.

அதே நேரம் மூன்றெழுத்து நடிகையின் தங்கையான நடிகையுடனும் வாரிசு நடிகர் படு நெருக்கம்.

பூவையெல்லாம் கேட்டுப்பார்த்து
கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் நடிகைகளுடன்
நடிக்கவே கூச்சப்பட்டவர் வாரிசு.

இப்போது நடிகைகளே கூச்ச
காதல் மன்னராக மாறிக்கொண்டி

## படையப்ப

பிரசாந்த் ஜோ
நடிக்கப் போகிறா
'படையப்பா'
தமிழில் பெரிய
சவுந்தர்யாவுக்கு
இப்போதுதான் கி
இன்னமும் பெ
இப்படத்தை கே.சுப
இசை: தேவா.
கலியுகம், பங்
நினைவிருக்கும்
படங்களை இ
இவற்றில் 'ப
இரு


அஜித்-ஷாலினி
படம்: அமர்க்களம்

கார்த்திக் ரம்பா முகப்பில்


பிரசாந்த்-ப்ரீத்தி
படம்: ஹலோ

## காதோடு சொல்லுகிறோம்

கவர்ச்சிகரமான விசித்திர நடிகை மதுவுக்கு எக்கச்சக்கமாக அடிமையாகியுள்ளாராம். சொந்த வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றங்கள், சோகங்கள்தான் மதுவிடம் சரண் புகுந்ததுக்குக் காரணம் என்கிறாராம்.

உலக அதிசயமான காதல் சின்னம் உருவாகக் காரணமாக இருந்த பெண்மணியின் பெயரைக் கொண்ட நடிகை அவர். வாய்ப்புக்களை பிடிப்பதில் அம்மணி கில்லாடி. சமீபத்தில் ஒரு படப்பிடிப்புக்காக சென்னை வந்தார். வந்த இடத்தில் படப்பிடிப்பு இரத்தானது. உடனே உள்ளத்தை அள்ளித்தரும் நாயகருடன் தொடர்பு கொண்டார். சென்னை மவுரியா ஹோட்டலில் ரூம் எடுத்தார். உடல் நலக் குறைவு என்று கூறிவிட்டு நடிகருடன் உள்ளேயே இருந்து விட்டார்.

இந்திய அரசியல் பிர
கொண்ட மூன்றெழுத்து நடிகை
வில் வாய்ப்பு இல்லாது போன
திரையில் தலைகாட்டி வருகிறார். இவருக்கு 'அ
னான 'குமார' நடிகர்மீது ஆசையாம். அதனால்
கொத்திக்கொண்டு போய்விட்ட நடிகையைக் கு
கிறாராம். "அவரது அழகுக்கு நல்ல பெண்ண
பிடித்திருக்கலாம். அவசரப்பட்டுவிட்டார்" என்கி
ராம்.

தேவமான நடிகையிடம் ஒரு தனிப்பட்ட
செல்ஃபோன் ஒன்று உள்ளது. அந்த ஃபோனின்
இலக்கத்தை குறிப்பிட்ட சில கதாநாயகர்களுக்கு
மட்டும் தான் கொடுத்துள்ளாராம். இந்த இரகசிய
இலக்கம் தாய்க்குலத்துக்குக்கூட தெரியாதாம்.

## சுந்தருக்கு சொந்தமில்லை

நடிகை ரம்பாவும் இயக்குநர் சுந்தரும் பாலும்
நீரும் போல கலந்துவிட்டனர் என்பது பரகசிய
மான சமாச்சாரம். இது கல்யாணம் வரை
போகாது என்று குஷ்புவுக்கு உறுதியளித்துள்
ளாராம் சுந்தர்.

ரம்பா-சுந்தர் நெருக்கம் தெரிந்தவர்கள்
ரம்பாவிடம் அது பற்றிக் கேட்கிறார்கள். ரம்பா
ஏ.கே.47 மாதிரி படபடக்கிறார்.

"சுந்தர் எனக்குப் பிடித்த இயக்குநர். அவ
இயக்கமும், சுறுசுறுப்பும் எனக்குப் பிடிக்கும்.
மீதுள்ள அபிமானத்தில் உள்நோக்கம் ஏது
மல் நெருக்கமாக பழகுவது உண்மை
அதனைவைத்து சுந்தருடன்
முடிச்சுப் போடுவது முட்டாள்த
சுந்தருக்கு சொந்தமானவள
யாருக்கு சொந்தமாக
என்பதை என் பெ
தீர்மானிக்க வே
வெடித்திரு

## நான் தெராசா அல்ல

## நடிகை தபு பேட்டி

தபு தமிழ்ப்பட ரசிகர்களையும் கவர்ந்தவர். 'சிறைச்சாலை', 'காதல் தேசம்', தாயின் மணிக்கொடி ஆகிய படங்களில் நடித்தவர். தற்போது பிரமாண்டமான தயாரிப்பான 'கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் நடித்துவருகிறார்.

'தாயின் மணிக்கொடியில்' நடித்தபோது ஆக்‌ஷன்கிங் அர்ஜுனுடன் மோதல். இந்தி நடிகைகள் என்றால் உடனே இசைந்துவிடுவார்கள் என்று அர்ஜுன் கையை நீட்ட, வெகுண்டெழுந்தார் தபு. விமானம் ஏறி போயேவிட்டார்.

அதனால் படப்பிடிப்பு தடைப்பட்டது. பின்னர் அர்ஜுன் தவறுக்கு வருந்தியதால் திரும்பிவந்து நடித்துக் கொடுத்தார்.

இந்தியில் தான் விரும்பும் கதாநாயகர்களுடன் மட்டுமே தபு நெருங்கிப் பழகுவார். அவருக்கு பிடிக்காத கதாநாயகர்கள் என்றால், அவர்கள் எவ்வளவு பெரிய நிலையில் இருந்தாலும் தபுவை நெருங்க முடியாது.

மும்பாய் இதழ் ஒன்றுக்கு தபு அளித்த பேட்டியில் இருந்து சில பகுதிகள்:

**கே: சில இயக்குநர்களது படங்களில் கவுரவ வேடங்களில் நடித்துள்ளீர்கள். அதே இயக்குநர்கள் தங்களது அடுத்த படங்களில் கதாநாயகியாக நடிக்க உங்களை அழைக்கவில்லை என்றால், உங்கள் மனம் நோகுமா?**

தபு: நானாக வலியப்போய் யாருக்கும் உதவுவதில்லை. பிரதியுபகாரமும் எதிர்பார்ப்பதில்லை. நான் அன்னை தெராசா அல்ல. நான் இங்கே நடிக்க வந்துள்ளேன். பணம் சம்பாதித்து மகிழ்ச்சியாக இருக்க நினைக்கிறேன்.

மற்ற நடிகர், நடிகைகளின் விருப்பங்கள் வெவ்வேறாக இருக்கலாம். அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை.

**கே: மொட்டை போட்டு நடிக்கச் சொன்னால் தயாரா?**

தபு: குதிரையில் ஏறி நடிக்க வேண்டுமானால் குதிரை ஏற்றம் பழகி நடிப்பேன். அதேபோல விதவையாக நடிக்க மொட்டை போட வேண்டுமானால் போடுவேன்.

**கே: கவர்ச்சி பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

தபு: கதாநாயகிகள் ஆண்களின் கவர்ச்சி ரசனைக்கு அடிமையாக வேண்டியுள்ளது. பெண்களுக்கு அவர்களது இளமை, முகம், உடல் அமைப்புத்தான் முக்கியம்.

கதாநாயகி மேக்கப் இல்லாமல் அழகாக காட்சி அளிக்க முடியாது. மேக்கப் இல்லாமல் தோன்றும் நடிகை கலைப்பட நடிகை போன்றே காட்சியளிப்பாள்.

## கவர்ச்சி மான்

ஐஸ்வர்யாராயும், சல்மான்கானும் நெருங்கிப் பழகியதால், இருவருக்கும் காதல் என்று புரளி கிளம்பியது. தற்போது புஸ்வாணமாகி விட்டது.

தற்போது மற்றொரு சர்ச்சையில் மாட்டிக் கொண்டிருக்கிறார் சல்மான்கான்.

இலண்டனில் நட்சத்திர கலைவிழா ஒன்றில் இளம் பெண்களைக் கவர தன் ஆடைகளை அவிழ்த்தெறிந்தார் சல்மான்கான். ஏராளமான ரசிகைகள் அவரது செய்கையைக் கண்டு ஆர்ப்பரித்தனர்.

ஆனால் இந்திப்பட உலக ஏனைய கதாநாயகர்கள் பலவிதமாக விமர்சிக்கிறார்கள்.

இந்திப்பட நாயகனான கோவிந்தா ஒரு பேட்டியில், "அந்த மனிதர் விளம்பரத்துக்காக முழுத் துணியையும் அவிழ்த்துப்போட்டு ஓடக்கூடியவர்" என்று கூறிவிட்டார்.

இதனையறிந்து சல்மான் கோவிந்தாவை ஒரு வாங்கு வாங்கிவிட்டார். அதன்பின்னர் கோவிந்தா வாயை மூடிவிட்டார்.


தபு

www.padippakam.com

# மினி சினி

* மகேந்திரன் இயக்கத்தில் 'சாசனம்' என்ற கலைப்படத்தில் நடித்திருக்கும் அரவிந்தசாமி, இப்போது இந்தியில் தயாராகும் கலைப்படமொன்றில் நடிக்கப் போகிறார்.

* மலையாள இயக்குநர் ஜோஷி இயக்கும் 'வழுன்னோர்' என்ற மலையாளப்படத்தில் சுரேஷ் கோபி நாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக சங்கீதா நடிக்கிறார்.

* 'காதல் மன்னன்', 'அமர்க்களம்' போன்ற படங்களை இயக்கிய சரண், அடுத்து பிரசாந்த் நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தை அவரது குருநாதர் கே.பாலசந்தர் தயாரிக்கிறார்.

* முரளி-ரம்பா ஜோடி 'தேசிய கீதம்' படத்திற்குப் பின் இணைந்து நடிக்கும் படம் 'தாமிர பரணி'. தற்போது இப்படத்தின் பெயர் 'தென்றலைத் தூது விடு' என்று மாற்றப்பட்டுள்ளது.

* 'எதிரும் புதிரும்' படத்தைத் தயாரித்த ஜி.எஸ்.மது அடுத்து சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ளார். இதை எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கவுள்ளார்.

* சுவாதியின் கைவசம் 'கண்டக்டர் மாப்ளே', 'சிவன்', 'அத்தை மகன்' ஆகிய மூன்று படங்கள் மட்டுமே உள்ளன. இவை மூன்றும் நீண்டகாலத் தயாரிப்பில் உள்ளன.

* தமிழில் சுமாராக ஓடிய 'பூந்தோட்டம்' தெலுங்கில் தயாராகிறது. தமிழில் முரளி நடித்த வேடத்தில் தெலுங்கில் சுமன் நடிக்கிறார். அத்துடன் இப்படத்தை அவரே சொந்தமாகத் தயாரிக்கிறார்.

* பாக்யநாதன்-ராதிகா இணைந்து நடித்து நீண்டகாலமாக இடப்பில் கிடந்த 'சித்திரச் சோலை' என்ற படம் விரைவில் வெளியாகவுள்ளது.

* 'கெஸ்ட் ஹவுஸ்' படத்தைத் தயாரித்த நிறுவனம் தற்போது 'நோ என்ட்ரி' என்ற படத்தை தயாரித்து வருகிறது. இதையடுத்து 'பாபிலோனா' என்ற படத்தைத் தயாரிக்கவுள்ளது.

* 'மாணிக்கம்' படத்தை இயக்கிய கே.வி.பாண்டியன் தற்போது தனது பெயரை மாயா என்று மாற்றிக் கொண்டு புதிய படமொன்றை இயக்கி வருகிறார்.

'தல் பண்ணிக்

'ட்டியணைத்து

ிம் அளவுக்கு

கிறார்.

## நாயகி

ாக சவுந்தர்யா

ந்தின் பின்னர்

ய்ப்பு எதுவும்

டைக்கவில்லை.

த்திருக்கிறது.

சூட்டப்படாத

இயக்குகிறார்.

ளி, சத்தியன்.

ரை போன்ற

கியவர் சுபாஸ்.

ாளி' சத்யராஜ்

ங்களில் நடித்

படு தோல்வி

கண்டது.



## கதை ஒன்று

சூர்யா- ஜோதிகா நடித்து வெற்றி பெற்றுள்ள படம் 'பூவெல்லாம் கேட்டுப்பார்.'

இப்படத்தில் சூர்யா வீட்டில் நல்ல பெயர் எடுக்க ஜோதிகா அங்கு தாதியாக வேலைக்குச் சேர்கிறார். ஜோதிகா வீட்டில் நல்ல பெயர் எடுக்க சூர்யா அங்கு கார்ச் சாரதியாக வேலைக்கு சேருவார்.

'கனவே கலையாதே' படத்தில் சிம்ரானின் பெற்றோரிடம் நல்ல பெயர் எடுத்து மாப்பிள்ளையாகும் திட்டத்துடன், அவர்கள் வீட்டில் வாடகைக்கு குடியிருப்பார் முரளி.

'ஜோடி' படக்கதையும் இதே ரகம்தான். சிம்ரானின் பெற்றோரிடம் 'தங்கமான பையன்' என்று பெயர் சம்பாதிக்க பிரசாந்த் படாதபாடு படுகிறார்.

## திருட்டு வீடியோ

'அமர்க்களம்' படத்தின் வீடியோ பிரதிகள் நம்நாட்டுக்கு வந்துவிட்டன. ஆனாலும் சில வீடியோ பிரதிகளில் ஷாலினி சொந்தக்குரலில் பாடிய பாடலைக் காணவில்லை. திருட்டுத்தனமாக பிரதிகள் இந்தியாவில் தயாராவதால் இவ்வாறான குறைபாடுகள் வருகின்றன.

திருட்டு வீடியோ, சி.டிக்களை தடுப்பதில் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் கடும் கண்காணிப்பில் இருக்கிறார்.



சல்மான் கான்

## 'ஜாடிக்கேற்ற மூடி நான்'

### நடிகைகளுக்கு என்மீது பிடிப்பு

கார்த்திக் என்றாலே தீராத விளையாட்டுப் பிள்ளை என்பது சினிமா உலகம் அறிந்த சங்கதி. ஒன்றுக்கு இரண்டு துணைகள் இருந்தும், இன்னமும் நடிகைகளுடன் கும்மாளம் போடுகிறார். வயதாகிக் கொண்டே போகிறதே, இந்த வாலிப விளையாட்டு தேவைதானா? இதற்கு கார்த்திக் என்ன கூறுகிறார்?

**கே:** உங்களுடன் ஜோடியாக நடிக்கும் நடிகைகளுடன் உங்களை சம்பந்தப்படுத்தி அடிக்கடி செய்திகள் வருகிறதே?

**கா:** செய்திகள் என்று சொல்லாதீர்கள். கிசுகிசு வருகிறது. இதையெல்லாம் நான் பெரிதுபடுத்துவதில்லை.

**கே:** சில நடிகைகள்கூட உங்களைப் பற்றி பலவிதமாகக் கூறுகிறார்களே?

**கா:** அவர்கள் என்னிடம் எதையோ எதிர்பார்த்து ஏமாந்திருக்கலாம். அதனால் என்னைப் பற்றியே ஏதாவது கூறிக்கொண்டிருக்கலாம்.

**கே:** ஏனைய கதாநாயகர்களைவிட, நடிகைகளுடன் உங்கள் பெயர்தான் அதிகம் பேசப்படுகிறதே?

**கா:** நடிகைகள் பலர் என்னை விரும்புகிறார்கள். இதனை தவறான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் அவர்களுடன் பழகும் விதம் பிடித்திருக்கலாம். என் நடிப்பு, தொழில் பக்தி பிடித்திருக்கலாம். இப்படி என்னிடமுள்ள ஏதாவது ஒன்று அவர்களைக் கவர்ந்திருக்கலாம். நட்பாக இருப்பவர்களோடு வேறு விபரீத அர்த்தங்களைக் கற்பிக்காதீர்கள்.

**கே:** உங்களுக்கு ஏற்ற ஜோடி?

**கா:** இந்த மூடி எந்த ஜாடிக்கும் பொருந்தும். (கலகலவென்று சிரிக்கிறார்)

## செருப்படி ரேணுகா

'ஜன்னல்' நாடகம் மூலம் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பிரபலமானவர் ரேணுகா. ஜன்னலில் அடிக்கடி உபதேசம் செய்பவராக வருபவர் அவர்தான். பாலச்சந்தரின் ஆஸ்தான நடிகைகளில் ஒருவர்.

'கங்கா யமுனா சரஸ்வதி' என்னும் தொடரில் இவர் நடித்துவருகிறார். பிரபலம் பெற்றுவிட்டதால் பிகு பண்ணுகிறாராம்.

இதனால் அந்தத் தொடரின் இயக்குநரோடு வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாம். மேலும் சில காட்சிகள் படமாக்க வேண்டும் என்று கூறியும் ரேணுகா செவிமடுக்காது புறப்பட்டாராம்.

கோபமான இயக்குநர், 'நடித்துக்கொடுத்து விட்டுப் போடி' என்று கூறினாராம். அதனால் ஆத்திரமடைந்த ரேணுகா, செருப்பைக் கழற்றி இயக்குநரைத் தாக்கினார். இயக்குநரும் ரேணுகாவை திருப்பித் தாக்க, படப்பிடிப்புக் குழுவினர் விலக்குப் பிடித்தனர்.

'பாலச்சந்தரிடம் சொல்லி உன்னை என்ன செய்கிறேன் பார்' என்று கூறிவிட்டுப் போனாராம் ரேணுகா. தற்போது சமரச முயற்சிகள் நடக்கின்றன.



லத்தின் பெயர்

அவர். சினிமா

ால் சின்னத்

சை' நாயக

வரைக்

றகூறு

கப்

து

வர்

ல்லா

ான்.

'ன்னை

ம். நான்

ல்ல. நான்

வேண்டும்

ற்றோர்தான்

ண்டும்" என்று

கிறார் ரம்பா.



விஜய்-ரம்பா
படம்: மின்சாரக் கண்ணா

"கண்கள் அறியா காற்றைப்போல
கனவில் என்னைத் தழுவியதென்ன?
பாதி இரவில் தூக்கத்தைக் கலைக்கும்
பூவே உந்தன் முகவரி என்ன?"

## விஜய்-ஷாலினி

'பூவே உனக்காக' படத்தின் பின்பு விஜய்க்கு திருப்பம் தந்த படம் 'காதலுக்கு மரியாதை'. குழந்தை நட்சத்திரமாக கலக்கிய ஷாலினியை முதன் முதலில் தமிழில் கதாநாயகியாக்கிய படமும் அதேதான். இயக்கியவர் பாசில்.

தற்போது அதே ஜோடி மறுபடி பாசில் இயக்கத்தில் இணைகிறது. படத்திற்கு பெயர் சூட்டப்படவில்லை. ரகுவரன், சார்லி, தாமு, ஸ்ரீவித்யா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

விஜய், ஷாலினி நடித்த பாடல் காட்சியும் படமாகியுள்ளது. 'நிலவு பாட்டு, நிலவு பாட்டு ஓர் நாள் கேட்டேன், மூங்கில் காட்டில், மூங்கில் காட்டில் நானும் படித்தேன்...' என்று தொடர்கிறது பாடல்.



தப

## ஏனி விசிட்

## ஊட்டியில் ஊட்டி

அரவிந்தசாமி-இஷாகோபிகர் நடித்த 'என் சுவாசக் காற்றே' படத்தைத் தயாரித்தவர்கள் தற்போது தயாரித்து முடித்துக் கொண்டிருக்கும் படம் 'ஊட்டி'.

இப் படத்தை பிரமாண்டமான பணச் செலவில் தயாரித்து வருகிறார்கள். பெரும்பாலான காட்சிகள் ஊட்டியில்தான் எடுக்கப்பட்டன.

தற்போது ஊட்டியில் கடும் குளிர், மழைக்காலம். அதனால் விடுதிகளில் வாடகை குறைவு. அதனால் செலவு சற்றுக் குறைந்ததாம்.

மொத்தமாக 300 அறைகள் வாடகைக்கு எடுத்தார்கள். அதற்கான வாடகைச் செலவு மட்டும் இந்திய மதிப்பில் 13 இலட்சம். வேறு நேரமாக இருந்தால் இரு மடங்காக இருந்திருக்குமாம்.

## மின்சார ரம்பா

'மின்சாரக் கண்ணா' நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. 'நெஞ்சினிலே' படத்தின் தோல்விக்குப் பின்னர் விஜய்யை மறுபடி கைதூக்கி விட்டுள்ள படம் இது. இயக்கம்: கே.எஸ். ரவிக்குமார்.

விஜய்யின் சிபாரிசில் இப்படத்திலும் ரம்பா நடித்திருப்பதால் காதல் காட்சிகளில் விஜய்க்கு பூரண ஒத்துழைப்பும், தாராளமும் காட்டியுள்ளார். மின்சாரம் ரம்பாவில்தான்!

www.padippakam.com

## எனக்குப் பிடித்தவை

புல் நுனி தாங்கிடும் பனித்துளி பிடிக்கும்
புன்னகை சிந்திடும் பூக்களும் பிடிக்கும்
மல்லிகை மலர்களின் வாசம் பிடிக்கும்
மலைதனை மோதிடும் மேகங்கள்
பிடிக்கும்.
0–0
கள்ளமறியாத இளசுகள் பிடிக்கும்
கவலையறியாத இளமையும் பிடிக்கும்.
0–0
மெல்லத் தரை தொடும் அலைகள்
பிடிக்கும்
மேனி தழுவிடும் தென்றலும் பிடிக்கும்.
0–0
சில்லறைச் சிரிப்பொலி எனக்குப்
பிடிக்கும்
சிதறிய வானத்து மீன்கள் பிடிக்கும்.
0–0
கல்லறைத் தூக்கமும் எனக்குப் பிடிக்கும்
கவலையைத் தோள்களில் சுமக்கப்
பிடிக்கும்.
0–0
புல்தரை மீது நான் தூங்கிடப் பிடிக்கும்
புதுப்புதுக் கனவுகள் காணப் பிடிக்கும்.
0–0
சல்லடையாகிடும் வானத்தைப் பிடிக்கும்
சரஞ்சரமாய் விழும் நீர்த்துளி பிடிக்கும்.
0–0
நல்லிரா நேர நிசப்தமும் பிடிக்கும்
நகர்கின்ற நிலவினை நிறுத்திடப்பிடிக்கும்.
0–0
துள்ளித்துடிக்கின்ற ஆசைகள் பிடிக்கும்
துளிர்த்திடும் செடியினை ரசிக்கப்
பிடிக்கும்.
0–0
தள்ளியிருக்கின்ற காதலி பிடிக்கும்
தனிமையில் அவள் தந்த நினைவுகள்
பிடிக்கும்.
0–0
மெல்லிசை கேட்பது எனக்குப் பிடிக்கும்
மேனி சிலிர்த்திடக் குளிக்கப் பிடிக்கும்.
0–0
நல்ல மனிதரைக் காண்பது பிடிக்கும்
நஞ்சும் அவர் தரின் அருந்திடப் பிடிக்கும்.
0–0

மன்னார் எம். ஷிபான்.
சியம்பலாகஸ்கொட்டுவ.

### செம்மணி
பலதைப் புதைத்தால்
சிலதை மட்டும்
எடுக்கும் இடம்.
•
### சமாதானம்
தேடப்படுகிறது!
கண்டுபிடித்தால்
கொல்லப்படுகிறது!
•
### சூரியன்
யார் போட்ட
கட்டளையோ?
அவன் நிர்வாணமாய்
கடலில் இறங்குகிறான்!
•
### குண்டு
அவள் போகும்போது
கூடப்போகும்
அவள் அப்பா (மாமா!)
•
### காதல்
உன்னைக் காணாதவரை
எனக்குத் தெரியாமல்
இருந்தது
•

பி.சி. அன்ரன்–
மட்டுநகர்.

## காதலும் ஒரு அன்னியப்படுத்தலும்

ஒரு அதீதக் காதலும்
அதற்குப் பின்னதுமான இரவில்
உன் ஞாபகங்களை
மூடிக் கொள்ளும்
அளவிற்கு எனக்குத்
திராணியில்லைத்தான்!
*–*
காதல் அற்புதமானது:
காதல் மனதின் கிரீடம்.
பனி பூத்த ஒரு காலைப் பொழுதில்
என் கவிதையில் என் எழுத்தில்
வியாபித்த காதல்,
அதே அந்தியில்
அன்னியமாகிப்
போய்விடுமா என்ன?
*–*
ஆனால்
வயதின் அன்னியமும்
உடலின் கோணலும்
இதயத்துக் கிரீடத்தை
இறக்குமா என்ன?
நீ காதலிக்க வில்லையாக்கும்!
கோடு கிழித்து இதயச் சுவரை
எக்குத் தப்பாய்
இணைத்துப் பார்க்கிறாய்!
*–*
காதலின் அரிச்சுவடி கூட
அறியாத அன்னியப் பெண் நீ!
அந்த ஒலி முத்தங்களின் "இச்"சென
ஓசை அடங்க முதல்
உன் விலகுதலின் விபரீதம்
எனக்கு விளங்குகிறது.
*–*
நீ அச்சப்படுவது
அன்பிற்காய் அல்ல
என்பது தெரிகிறது.
*–*
பெண்ணே!
நீ காதலிக்க வில்லையாக்கும்!
இன்னுமொருமுறை எனக் கெழுதாதே
"நான் உன்னைக்
காதலிக்கிறேன்" என்று
ஏனெனில்
காதல் அற்புதமானது:
காதல் மனதின் கிரீடம்!

ஹீரா அனஸ் – இலண்டன்.

## கைதின் பின் வதை



இரண்டாம் உலகப் போரில் நாஜிப் படைகளிடம் சிக்கிய நேசநாட்டு போர்வீரர்கள் இவர்கள். யுத்தக் கைதிகளை கௌரவமாக நடத்தவேண்டும். யுத்தத்தில் பலியாகும் வீரர்களது உடல்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பது உயர்ந்த மரபு.

அந்த மரபை இனவாத ஜெர்மன் படைகள் மதிக்கவில்லை. கைதிகளை மிதித்தார்கள். பட்டினிபோட்டு நசித்தார்கள். இவர்களது தோற்றத்தைப் பார்த்தாலே கொடுமை புரிகிறதல்லவா! ஜெர்மன் படைகளை தோற்கடித்த நேசநாட்டு படைகள் இவர்களை மீட்டன. அவ்வாறு மீட்கப்பட்டதால்தான் சற்று நிம்மதியாக காணப்படுகிறார்கள். கொடுமையை சித்தரித்த உலகப் புகழ்பெற்ற படங்களில் இதுவும் ஒன்று.

## மறு பக்க மனிதம்

நீ என்னைச் சந்தேகி!
என் நீளக்கை மடிப்பிலும்
காற்சட்டைப்பையிலும்
உனது வாழ்வின் விதி
எழுதப் பட்டிருக்கும் என்று
என்னை நீ சந்தேகி!
***
நீ என் அண்மையை விரும்பாதே!
வீதி நெரிசலில் கூட
என்னுடன் நெருங்காதே!
சனத்தைப் பொதுக்கிய பஸ்ஸிற்குள்ளும்
என்னுடன் உரசாதே!
என் வியர்வை நாற்றமல்ல;
என் பிறப்பு பற்றிய,
என் மொழி, இனம் பற்றிய
உனது சந்தேகத்திற்காக!
என்னுடன் நெருங்காதே!
***
உனக்கும் அதிகாரம் இருக்கிறது!
என் ஆவணங்கள் ஒவ்வொன்றையும்
பரிசோதித்துப் பார்!
எட்ட நின்று என்னை
நிர்வாணப் படுத்தியும் பார்!
அப்போதும் உன் சந்தேகம்
என்னைவிட்டு விலகியிருக்காது!
***
அப்படியும் என் பெயரால்
நீ அகாலமாக நேரிட்டாலும்
உன் உயிரையும் விட
என்னுயிர் பெறுமதியானதாகி
விடுகிறது!
***
மரணத்தையே வெல்லும் துணிவை
இன்னும் நீ
எனக்குத் தந்து கொண்டிருப்பதால்!
இப்போது உனக்குப் புரிகிறதா!
நாம் இருவரும்
'மனிதர்' என்கின்ற உண்மை?

## தேன்கிண்ணம்

பட்டணத்தடிகள்

## நில்–கவனி–முன்னேறு

ஏவுகணையை நிர்மாணிக்கின்ற புத்தி சாலித்தனத்தை வளர்த்துக் கொண்டுள்ள மனிதனுக்கு, அதனிடம் இருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ளும் புத்திசாலித்தனமும் இருக்க வேண்டும்.

குறிவைக்கப்பட்ட இடத்தை நோக்கிச் செல்லுகின்ற இயந்திர நுட்பம் ஏவுகணையில் இருக்கிறது. அது தன்னுடைய பாதையில் இருந்து சற்றே விலகினாலும்- செல்லுகின்ற திசையில் தவறு நிகழ்ந்தாலும்- இப்படி



அடிக்கடி நிகழ்வது உண்டு- அதைச் செலுத்துகின்ற அமைப்பு தேவையான திருத்தங்களைச் செய்து, இலக்கை நோக்கிச் செல்லுகின்ற சரியான பாதையில் அதைத் திருப்பி விடுகிறோம்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏவுகணை நிலையாக இருக்கும்போது அதன் போக்கை அது திருத்திக்கொள்ள முடியாது. இலக்கை நோக்கி அது நகர்ந்து செல்லும்போதுதான் அதனுடைய தவறுகளை அது திருத்திக் கொள்ள முடியும்.

ஏவுகணையிடம் இருந்து நீங்கள் இப்போது என்ன தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? வாழ்க்கை பூராவும் உங்களுக்குப் பயன்தரக்கூடிய நல்ல படிப்பினைகள் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்.

1. வாழ்க்கையில் உங்களுக்கு இலக்கு இருக்கவேண்டும். மனயியல் நிபுணர்கள் 'லட்சியப்பூர்வமான வாழ்க்கை நோக்கு' என்று சொல்லுவார்கள்.
2. உங்கள் இலக்கைநோக்கி நீங்கள் செல்லுகின்ற போது, ஏவுகணையைப் போலவே பாதை மாறுதல், திசை மாறுதல் போன்ற தவறுகளை நீங்களும் செய்வீர்கள்.
3. இந்தத் தவறுகளை நீங்கள் தவறுகள் என்று ஏற்றுக்கொள்ளக் கற்க வேண்டும். இல்லாவிட்டால் திருத்தம் தேவையென்பதே உங்களுக்குத் தோன்றாமல் போய்விடும்.
4. தவறுகளை அடையாளம் கண்டு ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு அவற்றைத் திருத்திக்கொண்டு இலக்கை நோக்கிய சரியான பாதைக்கு நீங்கள் வந்து விட வேண்டும். தவறுகளுக்காக ஏவுகணை எவ்வாறு குழப்பமோ, வெட்கமோ அடைவதில்லையோ அதைப்போலவே நீங்களும் நேர்ந்துவிட்ட தவறுகளுக்காக குழப்பம் அடையக்கூடாது. வெட்கப்படக்கூடாது.

தவறு செய்வதும், அதைக் கண்டு பிடித்து ஏற்றுக் கொள்வதும், பின்னர் திருத்திக் கொள்ளுவதும் இலக்கை நோக்கி சரியாகச் செல்லுகின்ற வழி என்பதை ஏவுகணையைப் போலவே நீங்களும் அறிந்து இருக்கவேண்டும்.

ஏவுகணைகள் எவ்வாறு ஒரே நேர்க்கோட்டில் சென்று இலக்கை அடைவதில்லையோ, அதைப் போலத்தான் மனிதர்களும் நேராகவே சென்று இலக்கை அடைந்துவிடமுடியாது.

ஏவுகணைகளும் சரி, மனிதர்களும் சரி, அந்த அளவுக்கு முழுமை பெற்று இருக்க முடியாது. அப்படியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதனால்தான் திருத்திக்கொள்ளும் உபாயம் தேவைப்படுகின்றது.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கான்ர்'

03.10.99 முதல் 09.10.99வரை

**மேடம்:**
ஜென்மஸ்தானம் பலம் கொண்டு உள்ளதால் மனம் கொண்ட விடயம் கைகூடும். பணப்பிரச்சனைகள், குடும்பத்தில் குழப்ப நிலையும் காணப்படும், வார இறுதி மனச்சலிப்பு ஏற்பட்டு அரச பயம், திடீர் அலைச்சல் ஏற்படும். பரணி, கார்த்திகை நட்சத்திரர் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வியாழன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை: எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 4, 9.

**இடபம்:**
கேதுவும் புதனும் நற்பெறும் ஸ்தான அமைப்பில் உள்ளதால் திடீர் பண வருவாயும் உடலில் இடைவிட்ட நோய் துன்பங்களும் ஏற்படும். குடும்ப பெண்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படும். கல்வி உயர்வுண்டு, தொழில் சீராகவும் அமையும். கும்பராசிக்காரர்கள் உதவி செய்வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை: எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 6,9.

**மிதுனம்:**
குடும்பஸ்தான அமைப்பு சிறப்புக் காணப்படுவதால் தடைப்பட்ட விவாக அமைப்பு நல்ல பதிலைக் கொடுக்கும். பண உதவிகளுடன், தொழில் சிறப்படையும். பிள்ளைகளால் உதவி கிடைக்கும். நெடுநாள் முயற்சிகள் கைகூடும். திருவாதிரை, புனர்பூசக் காரருக்கு சிறப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம்: இளநீலம்:எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 4, 7.

**கடகம்:**
அர்த்தஸ்டம் கிரக அமைப்பு பல விடயங்களில் நிம்மதியாக அமையமாட்டாது. அலைச்சல் நிலையும் பண விரயமும் காணப் படும். எதிர் பார்த்த விடயங்கள் ஏமாற்றத்துடன் முடியக் கூடும். பெண்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்: எண்: 7.
அதிஷ்ட திகதிகள் : 2, 5.

**சிம்மம்:**
பாக்கிய பலம் கொள்வதாலும் வியாழன் வக்கரித்த நிலையினாலும் பல எதிர்பார்த்த விடயங்கள் தாமதப்படும். பிரயாண வெற்றியும் தூர இடத்து நண்பர்களின் உதவியும் காரியசித்தியும் காணப்படும். துலா ராசியினர் உதவுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: ஊதா: எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 5,6.

**கன்னி:**
அட்டமத்துச் சிக்கல் நிலையில் பலம் இருப்பதால் திடீர் என்று நோய்துன்பங்கள் ஏற்படப்பார்க்கும். பண விரயம் அலைச்சலுடன் நோய்மன வேதனையும் தொடரப் பார்க்கும். வார நடுப்பகுதியின் பின் எடுத்த முயற்சிகள் தொடரும், இடபராசிக்காரர்கள் உதவிகள் செய்வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம்: வெள்ளை: எண்: 4.
அதிஷ்ட திகதிகள்: 4, 8.

**துலாம்:**
களத்திர சுபக்கிரக சந்தர்ப்பம் பல வெற்றிகளையும் புதிய முயற்சிகளையும் கொடுக்கும். பலவிடயங்கள் சீராக அமையும். காதலர் குடும்ப உறவு மகிழ்ச்சியை கொடுக்கும் சுவாதி விசாககாரர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்: எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 5,6.

**விருட்சிகம்:**
மறைவுஸ்தான அமைப்பு மாற்றம் கொள்வதால் பண வருவாய் உண்டு. கிரகபலம் கொள்வதால் எதிர்பார்த்த விடயங்கள் நடைபெறும். ஆலயதரிசனமும் போசன சௌக்கியமும் காணப்படும். நோய்துன்பங்கள் தீரப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு: எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 5,9.

**தனுசு:**
இலாபஸ்தான அமைப்பினால் ஊக்கமும் முயற்சியும் குறைவில்லாது காணப்படும். எதிலும் நன்மையான விடயங்கள் நடைபெறும். ஆலய தரிசனம், பயண ஏற்பாடு சீராக வெற்றியைத் தரும். உத்திராட, பூராட நட்சத்திரர் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்: எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 3, 4.

**மகரம்:**
4ல் சஞ்சாரம் கொள்வதால் மன உலைச்சலுடன் அலைச்சலும் ஏற்படும், வார நடுப்பகுதியில் சுப செய்திகள்கிட்டும். பல நாட்கள் தீராத பிரச்சனைகள் வெளியாட்கள் தலையிட்டுத் தீர்த்துவைப்பார்கள். அவிட்டம், திருவோணக்காரருக்கு சிக்கல்கள் குறையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம்: மருண்: எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 9, 4.

**கும்பம்:**
3ல் சஞ்சார பலன் பயணச் செலவுகளைக் கொடுக்கும். கோப குணங்களும் சண்டை சச்சரவுகளும் வந்து போகும். உறவினர் வழியில் பணக் கொடுக்கல் வாங்கல்கள் சீராக இராது. அவிட்ட, சதயக்காரர்கள் கவனமாக இருப்பது அவசியமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: வெள்ளை: எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 5,7.

**மீனம்:**
குடும்ப மகிழ்ச்சி, பணவருவாய், கல்வி உயர்வு எதிர்பார்த்த வெற்றி கிட்டும். திடீர் பயணமுண்டு. உத்தரட்டாதிப் பெண்களுக்கு சிறப்பான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை: எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 3,6.



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## முத்தே முத்தம்மா



எந்தச் சூழ்நிலையிலும், எவருக்கும் பொருத்தமானவை முத்துக்கள். தோற்றத்திற்கு எளிமையும், கூடவே கம்பீரத்தையும் ஒரு சேரத் தருபவை. நவரத்தினங்களில் ஒன்றாக மதிப்பிடப்படும் நல்ல முத்துக்களை எப்படித் தேர்ந்தெடுப்பது; எப்படிப் பராமரிப்பது என்பதை அறிய விரும்பும் பெண்களுக்கு சில டிப்ஸ்.

* நீலம் மற்றும் கிறீம் நிற முத்துக்களைக் காட்டிலும், இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை மற்றும் மஞ்சள் நிற முத்துக்கள் உயர்ந்தவை.

✦ முத்துக்களை சரியானபடி சுத்தம் செய்யாவிடில் இயற்கையான நிறத்தை அவை இழந்து விடக்கூடும்.

✦ அப்படி அவை விரைவில் ஒளியையும் பிரகாசத்தையும் இழந்து விடுவதால், அம்மாதிரியான முத்துக்கள் வாங்குவதைத் தவிர்த்து விடக்கூடும்.

✦ இயற்கை வெளிச்சத்தில்தான் ஒரு முத்தின் நிறத்தையும் ஒளியையும் பரிசோதிக்க வேண்டும்.

✦ ஒரு முத்து உண்மையானதா அல்லது போலியானதா என்பதைக் கண்டுபிடிக்க அம்முத்தை முன்பற்களில் வைத்துத் தேய்த்துக் கண்டறியலாம். உண்மையான முத்து கரகரப்பாக இருக்கும். வழுவழுப்பாக இருந்தால் அது போலி.

✦ சூரிய வெளிச்சமும், அதிக சூடும் முத்தின்மீது படும்படியாக வைக்கக்கூடாது.

✦ மேக்கப் கிறீம் மற்றும் ஸ்பிரே பெர்ஃபியூம் போன்றவை முத்தில் படக்கூடாது.

✦ வியர்வை பட்டால் முத்துக்களின் ஒளி குறைந்து போகும் என்பதால் ஒவ்வொரு முறை உபயோகித்த பின்பும், ஒரு மிருதுவான, காய்ந்த துணியைக் கொண்டு துடைக்க வேண்டும்.

✦ பட்டு அல்லது நைலோன் நூலில் தான் முத்தைக் கோர்க்க வேண்டும். தங்கச் சங்கிலியில் கோர்ப்பதைத் தவிர்க்கலாம்.

✦ வருடத்திற்கு ஒரு முறை கோர்த்த முத்துக்களைப் பிரித்து மறுபடியும் கோர்க்க வேண்டும்.

## சமைப்போம் சுவைப்போம்

### கோழி மிளகு

**தேவையான பொருட்கள்**

கோழி- 1
எண்ணெய் - 250 மில்லி கிராம்
ஏலக்காய்- 5 கிராம்
லவங்கம் - 5 கிராம்
கறிவேப்பிலை- தேவையான அளவு
வெங்காயம் - 2
மஞ்சள்தூள்- 3 கிராம்
தக்காளி - 1
உப்பு - தேவையான அளவு
மிளகாய் - 10 கிராம்
சீரகம் - 10 கிராம்
மிளகு - 20 கிராம்
இஞ்சி - 10 கிராம்
பூண்டு- 10 கிராம்
சோம்பு - 10 கிராம்.

**செய்முறை:**

மிளகாய், சீரகம், சோம்பு, மிளகு ஆகியவைகளை வறுத்து இஞ்சி, பூண்டு சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

எண்ணெய் சூடாக்கி ஏலக்காய், லவங்கம் தாளித்து வெங்காயம் சேர்த்து வதக்கவும். சிறிது வதங்கியதும் மஞ்சள் தூள், கறிவேப்பிலை, மசாலா பேஸ்ட் சேர்த்து வதக்கவும். தக்காளி, உப்பு சேர்த்து வதக்கவும்.

மசாலா வெந்ததும், கோழி இறைச்சியைச் சேர்த்து சுண்டும் வரை வதக்கவும், கறிவேப்பிலையைத் தூவி அலங்கரிக்கவும்.

கொடுத்திருக்கும் அளவு நான்கு பேருக்குத் தேவையானது.

## சின்னச் சின்ன குறிப்புக்கள்



நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சமையலறைச் சமாச்சாரங்கள் சில:

* கோழி இறைச்சியை நறுக்கி தயிரில் சிறிது நேரம் அமிழ்த்தி வைத்துவிட்டு பின்பு சமைத்தால் இறைச்சி அதிக கொழுப்புத் தன்மையுடன் சுவையாக இருக்கும்.

* மீனை வறுப்பதற்கு முன்னால் மீன் துண்டுகளை முட்டையின் வெள்ளைக்கருவில் தோய்த்து விடுங்கள். இவ்வாறு செய்வதால் மீனில் இருந்து மசாலா நீங்காது மீன் வாடையும் வீசாது.

* பச்சரிசிச்சோறு மிச்சம் வந்தால், அதனை மிக்ஸியில் போட்டு கூழாக்கி உப்பும், அப்பச்சோடாவும் கலந்து ஒரு மணிநேரம் வைத்திருந்து அப்பம் சுடலாம்.

* ஊறுகாய்த் துண்டுகள் முடிந்த பின், மசாலா மட்டும் மீதம் இருந்தால் அதனை தேய்காய் சேர்க்கும் குழம்பு வகைகளில் சிறிதளவு சேருங்கள். குழப்புக்குத் தனிச்சுவை கிடைக்கும்.

* பச்சைப் பட்டாணியை வேக வைக்கும் போது ஒரு தேக்கரண்டி சீனியும் சேருங்கள். ஒன்று போல பட்டாணி வேகும். அதன் நிறமும் மங்காது.

* ஊறுகாய், கூட்டு வகைகள் செய்யும் போது தூள் உப்புக்குப் பதிலாக கல் உப்பு சேர்ப்பது நல்லது.

* மிளகாயைக் கீறி சிறிது எண்ணெயில் வறுத்துவிட்டு 'பஜ்ஜி' தயாரித்தால் மிளகாயின் காரத்தன்மை குறைந்து போய்விடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GN

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
கையொப்பம்:..............................

**உண்மை — நேர்மை — வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-10-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா 10

# மோனிக்கா என் மோனிக்கா

## பிரிவும் சந்திப்பும்

பிளேய்லருடன் உறவைக் கத்தரிக்குமாறு பெற்றோரும், உளவியல் நிபுணரும் கூறிய யோசனையை மோனிக்கா கவலையோடுதான் ஏற்றாள்.

பிளேய்லருக்கு தன் முடிவைக் கூறிவிட்டு, நட்போடு பிரிந்துகொள்ளவே மோனிக்கா நினைத்தாள்.

மோனிக்காவுக்காக பிளேய்லர் காத்திருந்தான்.

மோனிக்கா மிகுந்த சங்கடத்தோடும், மிகுந்த தயக்கத்தோடும் தனது முடிவைக் கூறினாள். பிளேய்லரை நேராகப் பார்க்காது, வேறெங்கோ பார்த்தபடிதான் அவள் கூற வேண்டியிருந்தது.

பிளேய்லரை நேருக்கு நேராகப் பார்த்துவிட்டால், தன் முடிவைக் கூறமுடியாது போய்விடுமோ என்று அவள் நினைத்தாள்.

மோனிக்கா கூறிமுடித்ததும் பிளேய்லர் அவள் நினைத்ததுபோல துள்ளிக் குதிக்கவில்லை. துயரம் கொள்ளவுமில்லை. உறவைத் தொடருவோம் என்று மன்றாடவும் இல்லை.



மோனிக்கா எதிர்பாராத கோணததில பிளேய்லர், பேசினான், "நானும் இதனைத்தான் நினைத்திருந்தேன். இது தகாத உறவுதான். இவ்வாறான உறவு தொடருவது என்னைப் பாதிக்காது. உன்னைத்தான் பாதிக்கும். ஆகவே வெட்டிக் கொள்வதுதான் விவேகம்."

பிளேய்லர் இவ்வாறு கூறுவான் என்று எதிர்பார்க்காத காரணத்தால் மோனிக்காவுக்கு ஏமாற்றமாகிவிட்டது.

தன்னோடு உறவு முறிவதையிட்டு அவன் வருத்தம் தெரிவிக்காதது அவளுக்கு கவலையாக இருந்தது.

அவன் துயர் அடைந்திருந்தால் சோகம் கலந்த திருப்தி அவளுக்கு ஏற்பட்டிருக்கும்.

### எதிர்பார்ப்பு

பிளேய்லருக்கு பெண்களின் உணர்ச்சிகள் பற்றி நன்கு தெரியும். பல பெண்களுடன் உறவாடி அவர்கள் உள்ளத்து உணர்ச்சிகளை அறிந்தவன் அவன்.

தான் வருத்தப்படாதது குறித்து மோனிக்கா நிச்சயமாக வருத்தமடைவாள். அதேசமயம் அவள் நலனுக்காக அக்கறைப்படுவது போன்று பேசியதற்காக தன்மீது அபிமானமும் கொள்வாள். எனவே, இந்தப் பிரிவு நீடிக்காது. மோனிக்கா மறுபடி தேடி வருவாள் என்று பிளேய்லருக்குத் தெரியும்.

மோனிக்காவை இழக்க பிளேய்லருக்கு விருப்பமில்லை. அவன் உறவு கொண்ட பெண்களில் மோனிக்கா வித்தியாசமானவள்.

அவனது விருப்பம் அறிந்து நடந்ததோடு, அவளும் ஈடுபாட்டோடு நடந்து கொள்ளுவாள். அவளுடன் ஒன்றாக இருப்பது அவனுக்கு நிகரில்லாத சந்தோசத்தைக் கொடுத்தது.

கிட்டத்தட்ட ஆறுமாதங்கள்வரை பிரிவு தொடர்ந்தது. பின்னர் பிளேய்லர் எதிர்பார்த்தது போலவே மோனிக்கா அவனைச் சந்தித்தாள்.

மோனிக்கா படித்த கல்லூரியில் 'ஒலிவர்' என்னும் நாடகத்துக்கான பயிற்சியளிக்கும் பொறுப்பை மோனிக்கா ஏற்றிருந்தாள். நாடகக் கல்லூரியில் படித்தவள் என்பதால் அந்தப் பொறுப்புக் கிடைத்திருந்தது.

அந்த நாடகம் தொடர்பான சில தேவைகளுக்காக நாடகக் கல்லூரிக்குச் சென்ற போது பிளேய்லரையும் சந்தித்தாள்.

"உண்மையைச் சொல்வதானால் பிளேய்லரைச் சந்திப்பதற்காகவே நானாகவே செய்து கொண்ட ஏற்பாடுதான் அது. அவனது பிரிவு என்னைப் பல இரவுகள் விரகதாபத் தில் தவிக்க வைத்தன. அவன் ஒரு காரியவாதி. என்னைப் போன்ற இளம் பெண்களை விசுவாசமான நாய்க் குட்டிகள்போல தனக்குப் பின்னால் திரிய வைப்பவன். சுவாரசியமான ராஸ்கல்!" என்று மோனிக்கா கூறியிருக்கிறாள்.

மறுபடி பிளேய்லரைச் சந்தித்த நாள் அன்றே, நாடகக் கல்லூரியின் தனிமையான இடமொன்றில் வைத்து, மோனிக்காவை பிளேய்லர் முத்தமிட்டான்.

"மிகுதி எப்போது?" என்று பிளேய்லர் ஆவலோடு கேட்டான்.

'அவனைக் காத்திருக்க வைக்க வேண்டும். தன் பிரிவை எண்ணி வருந்தாத அவனுக்கு தவிப்பைக் கொடுக்க வேண்டும்!' என்று நினைத்தாள் மோனிக்கா.

"நேரம் வரும்போது நெருக்கலாம்," என்று கண்ணடித்தாள். அவனது கழுத்தை வளைத்து அவன் உதடுகளுக்கு தன் உதடுகளால் ஒத்தடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டாள்..

அந்த முத்தம் அவனை ஏங்க



வைகக அவள் கொடுததது. அவனைத் தவிக்க வைக்க அவள் கொடுத்தது.

பிளேய்லரின் 27வது பிறந்தநாளை நாடகப் பள்ளியில் கொண்டாட பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர் முடிவு செய்திருந்தனர். அத்தகவல் மோனிக்காவுக்கும் தெரிவிக்கப்பட்டது.

பிறந்த நாளுக்கான 'கேக்' தயாரிக்கும் பொறுப்பை தானே ஏற்றுக் கொண்டாள்.

### உள்ளே இருந்தது

'கேக்' வெளியே தெரியாதளவு அலங்காரக் காகிதங்களால் கேக் மறைக்கப்பட்டிருந்தது. பெரிதாக இருந்த அந்த கேக் பொதியை மேசைமீது வைத்தாள்.

கேக்கை வெட்டுவதற்கு பிளேய்லர் வந்த போதுதான், அலங்காரக் காகிதங்கள் பிரிக்கப்பட்டன.

பிரிக்கப்பட்டதும் கேக்கைப் பார்த்தவர்கள் மட்டுமல்ல, பிளேய்லரும் துணுக்குற்றான்.

ஒரு பிராணி உயிருடன் இருப்பது போன்று கேக் வடிவமைக்கப்பட்டிருந்தது. பிளேய்லருக்கு பிடித்தமான உடலமைப்புடன் காணப்பட்டது.

கூடியிருந்த அனைவரும் ஆரவாரம் செய்ய, பிளேய்லர் கேக்கை வெட்டினான்.

"என்ன பரிசு தரப் போகிறாய்?" என்று மோனிக்காவிடம் இரகசியமாகக் கேட்டான் பிளேய்லர்.

தன் நெஞ்சில் சுட்டு விரலை வைத்துக் கூறினாள், "என்னையே எடுத்துக் கொள்ளுங்கள்!".

மோனிக்கா எடுத்து வைத்திருந்த விடுதி அறையில் அன்று இரவே இருவரும் உறவு கொண்டனர்.

நீண்டகாலப் பிரிவுக்குக் கணக்குத் தீர்க்கும் விதமாக மறுநாள் முழுவதும் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தனர், தம்மை மறந்திருந்தனர்.

பிளேய்லரை அவனது மனைவி தேடிக் கொண்டு பள்ளிக்குச் சென்றாள். நேற்று இரவே போய்விட்டார் என்று கூறிவிட்டனர்.

மறுநாள் இரவுதான் பிளேய்லர் வீடு திரும்பினான். அவன் மனைவி அவனது சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

"எவளோடு படுத்திருந்தாய்? பிறந்த நாளில்கூட உனக்கு வேறொருத்தியோடு புரள வேண்டுமா?" என்று நரம்பு புடைக்கக் கத்தினாள்.

பிளேய்லர் அமைதியாக அவளிடம் கூறினான், "உன் ஆண் நண்பர்களுடன் நீயும்தான் புரளுகிறாய். நான் கேட்டேனா? விலகு!" அவள் அடங்கிப் போனாள்.

1993 இளவேனிற் காலத்தில் மோனிக்காவின் படிப்பின் இரண்டாவது இறுதிப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது.

அதற்கான ஆயத்தங்களை மோனிக்கா செய்து கொண்டிருந்தபோதும், வாரத்தில் ஒரு தடவையாவது பிளேய்லரைச் சந்தித்தாள்.

தன் பெற்றோருக்குத் தெரியக்கூடாது என்பதால், முன்புபோல் அல்லாது மிக ஜாக்கிரதையாகவே சந்திப்புகளை வைத்துக் கொண்டாள்.

அப்படியிருந்தும் சகமாணவிகள் அறிந்துவிட்டனர். மோனிக்காவுக்கு புத்தி கூறினார்கள்.

உயர்நிலைப் பள்ளியில் மோனிக்காவின் உயிர்தோழியாக இருந்தவள் நெய்சாடெமான் ஏப்லண்ட்.

நெய்சாவுக்கு பல ஆண்களுடன் தொடர்புகள் இருந்தன. களியாட்டமே வாழ்க்கை என்று தினம் ஒரு ஆணுடன் சுற்றித்திரிந்தவள். பின்னர் அந்த உறவுகளைக் கத்தரித்துவிட்டு மனம் திருந்தியவள்.

மோனிக்காவுக்கு நெய்சா பல அறிவுரைகளைக் கூறினாள். பிளேய்லரை மறந்துவிடுமாறு கெஞ்சினாள்.

நெய்சாவுக்கு கண்ணீரால் மட்டுமே பதில் கூறினாள் மோனிக்கா.

### முடியவில்லை

தன்னுடைய உறவு தகாத உறவு என்பது தெரிந்தும், பிளேய்லர் தன்மீது உண்மையான அன்பு கொண்டவனல்ல என்பது தெரிந்தும் கூட மோனிக்காவால் அவனை உதறிவிட முடியாமல் இருந்தது.

பிளேய்லர் பற்றி நெய்சா பின்வருமாறு கூறினாள்:

"உண்மையை உணர்ந்தும் உணராதவன் போல நடிக்கிறான். முழு மனிதனாகிவிட்ட இவன், ஒரு அப்பாவிச் சிறுமியை ஏமாற்றி, அவளுடைய பலவீனத்தைப் பயன்படுத்தி இன்பம் காண்கிறான்."



தோழியுடன்

மோனிக்கா மறுபடி பிளேய்லரைச் சந்திப்பதை மோனிக்காவின் தாயாரும் அறிந்து வேதனையுற்றார்.

'போதை வஸ்துக்கு அடிமையான ஒருவரை மீட்டெடுப்பது எவ்வளவு கடினமோ, அந்தளவு கடினமானது காதல் வசப்பட்ட ஒருத்தியை பிரித்தெடுப்பது!' என்று மனம் வருந்தினார் தாயார்.

இறுதியில் தாயாருக்கு ஒரு யோசனையும் தோன்றியது.

மோனிக்காவும் அதற்கு உடன்படவேண்டியிருந்தது.

(வருவான்)

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — **எஸ்.ஏ. வினோதினி,** இல 5, அரச விடுதி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


படிப்பகம்





சக்தி தனக்கே உரிமையாக்கு-எதைத் தான் விரும்பினாலும் வந்து சாரும்-மனம் சக்தி தனக்கே உரிமை யாக்கு -உடல் தன்னிலுயர் சக்தி வந்து சேரும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# குட்டி ஆடும் ஓநாயும்

மந்தையில் இருந்து குட்டி ஆடொன்று எப்படியோ வெளியே வந்து விட்டது. சந்தோஷ மிகுதியால் அது துள்ளிக் குதித்தோடியது. அது ஓடி ஓடி வெகு தூரத்திற்குச் சென்று விட்டது.

அந்த நேரம், குட்டி ஆட்டிற்கு முன்னால் ஓநாய் ஒன்று பாய்ந்து வந்தது. அப்போது தான் குட்டி ஆட்டிற்குத் தான் எவ்வளவு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டோம் என்று புரிந்தது.

அதற்காகப் பயந்து விடாமல், ஓநாயிடமிருந்து தப்பிக்க உபாயம் தேடியது.

ஓநாய், ஆட்டுக்குட்டி அருகில் சிரித்தபடி வந்து,

"என்ன யோசிக்கிறாய்? என்னிடமிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது!" என்று இறுமாப்புடன் சொன்னது.

"ஓநாயாரே! உங்களிடமிருந்து என்னால் தப்பிக்க முடியாது. நான் வேகமாக ஓடினாலும் பாய்ந்து வந்து என்னைப் பிடித்து விடுவீர்கள். அதுதான் இப்படி நிற்கிறேன்!" என்றது குட்டி ஆடு.

"உனக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கிறது. நீ சாவதற்கு முன்னால் உன் கடைசி ஆசை என்னவென்று சொல்! நிறைவேற்றி வைக்கிறேன்!" என்றது ஓநாய்.

இதுதான் தக்க சமயம் என்று நினைத்த குட்டி ஆடு,

"நான் சாவதற்கு முன்னால் நடனம் ஆடவேண்டும். அதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா?" என்று கேட்டது.

"சரி சரி உன் கடைசி ஆசையை நிறைவேற்றுகிறேன். எங்கே ஆடு பார்க்கலாம், நானும் பார்க்கிறேன்!" என்று கூறியது ஓநாய்.

"தலைவரே! இன்னுமொரு வேண்டுகோள். நான் நடனமாடும்போது நீங்கள் சும்மா நின்று கொண்டிருந்தால் அது



நன்றாக இருக்காது. அத்துடன் உங்கள் பார்வை எனக்குப் பயமாக இருக்கிறது," என்று சொன்னது குட்டி ஆடு.

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நீ ஆடி முடிக்கும் வரை நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்!" என்றது ஓநாய்.

"இல்லை தலைவரே! நீங்கள் உங்கள் இனிமையான குரலில் பாடினால், அதற்கு நான் உற்சாகமாக நடனமாடுவேன்," என்றது குட்டி ஆடு.

"அவ்வளவுதானே! இதென்ன பெரிய விஷயம்? நான் பாடுகிறேன். நீ உற்சாகமாக ஆடு!" என்று சொல்லிய ஓநாய், பாட்டுப்பாடுகிறேன் என்று ஊளையிட ஆரம்பித்தது.

இதைக் கேட்டு மகிழ்ச்சியில் ஆட ஆரம்பித்தது குட்டி ஆடு. தன் பாட்டால் தான் குட்டி ஆடு மகிழ்ச்சியாக நடனமாடுகிறது என நினைத்த ஓநாய் இன்னும் பெரிதாக ஊளையிட்டது.

ஓநாயின் ஊளை சத்தத்தைக் கேட்டு சுற்று வட்டாரத்தில் இருந்த வேட்டை நாய்கள் அங்கு வந்து சேர்ந்தன. அவற்றைப் பார்த்த ஓநாய்க்கு குட்டி ஆட்டின் தந்திரம் புரிந்தது.

வேட்டை நாய்களிடமிருந்து தப்புவதற்காக குட்டி ஆட்டை விட்டு விட்டு ஒரே ஓட்டமாக ஓடியது ஓநாய். குட்டி ஆடு சந்தோஷத்துடன் மறுபடி மந்தையில் போய் சேர்ந்து கொண்டது.

# அதிசயம் - ஆனால் உண்மை!



இந்தியாவில் உள்ள கேரளா மாநிலத்தில் இருக்கும் கோழிக்கோட்டில் இருந்து திருவனந்தபுரத்திற்கு கண்களைக் கட்டியபடியே மோட்டார் சைக்கிளில் சென்று சாதனை படைத்துள்ளார். இவர் பயணம் செய்த தூரம் 450 கிலோமீட்டர் ஆகும்.

'வோர்க்கிக் கோர்' என்றொரு செடி உள்ளது. இந்தச் செடிக்கு அருகில் வந்தால் செடியின் இலைகளை அங்குமிங்கும் அசைத்து ஒரு கலக்கு கலக்கி விடும். இதனால் இந்த இலையைத் தின்ன வரும் ஆடு, மாடுகள் அதிர்ச்சி அடைந்து ஓடிவிட இவ்வாறு செய்கிறது.





5ம் கொன்ஸ்டன்டைன் என்ற ரோமானியச் சக்கரவர்த்தி 80 ஆயிரம் வீரர்கள் அடங்கிய படைக்குத் தலைமை தாங்கி, இதே அளவு வலிமையுடைய பல்கேரிய படையை வென்றார். இதில் அதிசயம் யாதெனில் இவரது படையில் ஒருவர் கூட காயமடையவோ, கொல்லப்படவோ இல்லை. பல்கேரிய படையில் 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

# மனோவசியம்



மனோவசியம் என்றால் தூக்கம் போன்றதொரு நிலையை உருவாக்குதல் என்று கூறலாம். இதை ஹிப்னாட்டிஸம் என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். ஹிப்னாஸிஸ் என்ற கிரேக்கச் சொல்லில் இருந்தே இது வந்தது. ஹிப்னாஸிஸ் என்றால் தூக்கம் என்று பொருள்.

இந்த மனோவசியத்தை முதலில் தெய்வீக சக்தி என்றே பலரும் நினைத்தனர். ஆனால் இது அப்படியானதல்ல, ஒளி, ஒலி, பேச்சுக்கள் மூலமாக ஒருவரைத் தூண்டி மெய்மறக்கச் செய்தலே மனோவசியப்படுத்தல் ஆகும்.

இதன் மூலம் மனோவசியத்திற்குட்பட்டவர், அதை ஏற்படுத்தியவரின் தூண்டுதலுக்கு ஏற்பச் செயற்படுவார்.

ஒஸ்ரியாவைச் சேர்ந்த அன்டன் மெஸ்மர் என்பவரே மனோவசிய முறையைக் கண்டறிந்து, இதன் மூலம் சில நோய்களைக் குணப்படுத்த முடியும் எனக் கண்டுபிடித்தவர். பின் இவரே இதை மக்களிடையே பரப்பினார்.

# முதல் பெண்



முதன் முதலில் பலூனில் பறந்து சாதனை படைத்தவர்கள் ஸ்கொட் ஜேம்ஸ் டைட்லர் மற்றும் வின்சென்சோ லுனார்டி ஆகிய இருவர். இவர்கள் 1784ம் ஆண்டு பலூனில் பறந்தார்கள்.

முதன் முதலில் பலூனில் பறந்த பெண்மணி சுவீடன் நாட்டைச் சேர்ந்த மேடம் ட்பிளே. இவரும் 1784ம் ஆண்டில்தான் பலூனில் பறந்தார். சுவீடன் மன்னர் கஸ்டோவ் முன்பாக இவர் பறந்து காட்டினார்.

அவருடன் பிளெரன்ட் என்ற ஆணும் பறந்தார். 45 நிமிடங்கள் வானில் பறந்த அந்த பலூன் 5 கிலோமீட்டர் தூரம் சென்றது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.10.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 316
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 314

பரிசுக்குரியவர்:
சிவானந்தன் நிரோஜன்,
புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயம், திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சர்வவிக்னோபன் சந்திரசேகரம்,<br>வெஸ்லி கல்லூரி, கொழும்பு. | கே.கார்த்தீபன்,<br>றோயல் கல்லூரி, கொழும்பு. |
| பாதிமா நிஷ்மா நஜீம்,<br>ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | கே.விக்னேஸ்வரன் விதுண் சமித்,<br>புனித ஜோன் பொஸ்கோ, த.ம.வி, அட்டன். |
| வி.தர்ஷினி,<br>க/பாரதி.த.ம.வி., வத்தேகமம். | எம்.முஸ்தாக் அகமட்,<br>மட்/அறபா வித்தியாலயம், ஏறாவூர். |
| பி.புனிதா சாந்தினி,<br>ஹோல்புறூக் தமிழ் மகாவித்தியாலயம், அக்கரப்பத்தன. | எம்.அஸ்லம்,<br>ராசிக்,பரீட் மகாவித்தியாலயம், பண்டாரவளை. |
| எல்.பரமேஸ்வரி,<br>ஹைலன்ஸ் மத்திய மகா வித்தியாலயம், ஹட்டன். | என்.சிந்துஜா,<br>ரிப்பப்ளிகன் சர்வதேச பாடசாலை, மார்கான்ஸ்தொட்ட, நுவரெலியா. |

# விடுகதைகளும் விடைகளும்

1. இருட்டில் கண் சிமிட்டும்: நட்சத்திரம் அல்ல.
அது என்ன?
2. பொங்கினால் சோறு, தட்டினால் தாளம்.
அது என்ன?
3. நெருப்பில் பட்டவன் புகையாய் மாறினான்.
அவன் யார்?
4. பகலில் துயிலுவான்: இரவில் அலறுவான்.
அவன் யார்?
5. நெட்டை அக்கா தாக்க, குட்டை அக்கா தாங்குகிறாள்.
அவர்கள் யார்?
6. நெற்றியிலே கோல்பட்டு கதறுகிறது காளை.
அது என்ன?
7. பறக்காத பச்சைக்கிளி, கொம்பிலே இருக்கும் குள்ளக்கிளி.
அது என்ன?
8. வரி வரி வண்ணக்கொம்பு, வாடாத முத்துக் கொம்பு.
அது என்ன?
9. கண்ணால் பார்க்க உருவம் உண்டு. கட்டிப் பிடிக்க உடல் இல்லை.
அது என்ன?
10. சாவி கொடுத்தால் ஓசை கொடுத்து எழுப்புவான்.
அவன் யார்?

## விடைகள்

1. மின்மினிப்பூச்சி 2. பானை
3. ஊதுபத்தி 4. ஆந்தை
5. உரல்-உலக்கை 6. மேளம்
7. மாங்காய் 8. சோளம்
9. புகை 10. கடிகாரம்

# கடல் குதிரை



மீன்களில் ஒருவகை கடல் குதிரை. ஆனால் இது பார்ப்பதற்கு மீன் போல இருக்காது. கடலுக்கடியில் உள்ள சில தாவரங்களில் தன் வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கும்.


இது செங்குத்தாக கடலில் நடப்பது போலத் தெரியும். ஆனால் பின்னாலுள்ள ஒரு செதிளின் உதவியால் அது நீந்துகிறது.

கடல் குதிரைக்கு கழுத்து உண்டு. குதிரையைப் போலத் தலையை இருபுறமும் அசைத்துக் கொள்ள முடியும். இதன் வாய் ஒரு நீண்ட குழாய் போலிருக்கும். இந்தக் குழாய் வாயின் மூலம் உணவுப் பொருட்களை உறிஞ்சி உண்கிறது.

மீன் இனத்தில் குழாய் மீன் குடும்பத்தைச் சேர்ந்த இதில் 50க்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. இது 5 முதல் 30 சென்டி மீட்டர் நீளம் வரை வளரும்.

இவற்றின் உணவு கடலில் உள்ள சிறு பூச்சிகள், புழுக்கள் மற்றும் அவற்றின் முட்டைகள் போன்றவை ஆகும். பெண் கடல் குதிரை முட்டைகளை மட்டும் இட்டு விட்டுச் செல்ல, ஆண் கடல் குதிரைகள் தான் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் தொழிலைச் செய்கின்றன.

# படத் தபால் அட்டை



முதன் முதலாக தபால் அட்டை 1860ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ம் திகதி ஒஸ்ரியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

முதன் முறையாக படத்துடன் கூடிய தபால் அட்டை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது தெரியுமா? 1865ம் ஆண்டில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த சீசரி பெர்டனா என்பவர்தான் இதை அறிமுகப்படுத்தினார்.

இத்தாலி நாட்டில் புகழ்பெற்ற கர்டா என்ற ஏரியின் படம் அச்சிடப்பட்டு படத்துடன் கூடிய தபால் அட்டையாக முதன் முதலில் வெளிவந்தது.

# துணுக்குச் செய்திகள்

* தாவரங்களில் அதிவேகமாக வளரக் கூடியது- மூங்கில்.
* எறும்புகளில் 3500 இனங்களுக்கு மேல் இருக்கின்றன.
* ஒருவர் தன்னுடைய வாழ்நாளில் 2 தொன் அளவு நீர் அருந்துகிறார்.
* 24 மணிநேரத்திற்குள் தலை முடி ஒரு அங்குலத்தில் ஐந்தில் ஒரு பங்கு வளர்கிறது.
* கோழிகளின் கண் இமைகள் கீழிருந்து மேல் நோக்கி மூடுகின்றன.
* கட்டடம் கட்ட முதலில் கொங்கிறீட்டை உபயோகித்தவர்கள்- ரோமானியர்கள்.

# பிக்காசோ பெயர்



நவீன ஓவியங்களின் தந்தை என்று வர்ணிக்கப்படும் பிக்காசோ 1881ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் பிறந்தவர். ஆனால் பாரிஸ் நகரில் வசித்தார்.

இவரது முழுப்பெயர் மிகவும் நீளமானது. வேடிக்கையானது. வியப்பூட்டக் கூடியது.

அவரது முழுப்பெயர் இதுதான்- பாப்லோ மீகோ ஜோசே ஃபிரான்ஸிஸ்கோடி பவுலாஜுன் நெபோமியூ செனோ கிறிஸ்பீனியானோ டிலாசாண்டிசிமா ட்ரினிடாட் ரைஜ்பிக்காசோ.

www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. வர்ணாவிடம் உள்ள அதிசய சக்திதான் அதற்கு காரணம் என்று டாக்டர்கள் நினைக்கின்றனர். சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலை தொடர்பான விசாரணையும் மறுபுறம் சூடுபிடிக்கிறது..

**இனி...**

"நீங்க உங்கள் ஆயுசு பூராவும் காத்திட்டிருந்தாலும் அவன் வரப்போறதில்லை. வேற வேலை ஏதாவது இருந்தா போய்ப் பாருங்க..."

டெலிஃபோனில் பேசிய அந்தப் பெண் இப்படிச் சொன்னதும் இன்ஸ்பெக்டர் பலராமன் அதிர்ந்து போய் படபடத்தார்.

"இதோ பார்... நீ யார்ன்னு சொல்லாட்டியும் பரவாயில்லை. பிரதாப்புக்கு என்னாச்சு... ஏன் அவன் வரமாட்டான்... அதை மட்டும் சொல்லு?"

பெண் குரல் சிரித்தது.

# கையில் 23 சிக்கிய மின்னல்



"யாமறியோம் பராபரமே..!" டொக் என்ற சத்தத்தோடு மறு முனையில் ரிஸீவர் வைக்கப்பட்டு விட்டது. பலராமன் கவலை முகத்தோடு ரிஸீவரை வைத்துவிட்டு டாக்டர் சந்திராதேவியை ஏறிட்டார்.

"நடக்கிற சம்பவங்கள் எல்லாமே ஒரே குழப்பமாயிருக்கு. பிரதாப் வரமாட்டான்னு ஒரு பெண் ஃபோன் பண்ணி சொல்றா. இந்த கேஸ்ல எது பொய், எது உண்மைன்னு கண்டுபிடிக்கவே நேரம் சரியா இருக்கும் போலிருக்கு..." சொல்லிக் கொண்டே போன பலராமன், சட்டென்று நிமிர்ந்தார்.

மூளைக்குள் சின்னதாய் ஒரு மின்னல் அடித்தது.

மனசு தலையைச் சாய்த்து அந்தக் கேள்வியைக் கேட்டது.

'அப்படியும் இருக்குமோ...?'

பலராமன் ஒரு நேர்கோடு மாதிரி விருட்டென்று எழுந்தார். "டாக்டர்..! நான் உங்ககிட்ட அப்புறம் வந்து பேசிக்கிறேன். இப்போ நீலமேகத்தை அவர் வீட்ல விட்டுட்டு நான் ஒரு இடத்துக்கு அவசரமா போக வேண்டியிருக்கு."

"ஒருவேளை பிரதாப் வந்துட்டா...?"

"வந்துட்டா... அவனை இங்கேயே இருக்க வையுங்க. நான் அரை மணி நேரத்துக்குள்ளே உங்களை கான்டாக்ட் பண்றேன்.. வாங்க மிஸ்டர் நீலமேகம். நாம கிளம்பலாம்."

டாக்டரிடம் விடைபெற்றுக்கொண்டு பலராமன் நீலமேகத்தோடு வெளியே வந்தார்.

ஜீப்பில் இருபது நிமிஷப் பயணம். நீலமேகத்தின் வீடுவந்தது. அவரை வாசலில் இறக்கிப் பிறகு சந்திப்பதாக சொல்லிவிட்டு ஜீப்பை புயல் வேகத்தில் விரட்டி கன்ஸல்டன்ஸி 'க்யூப்'புக்கு வந்து சேர்ந்தார்.

ரிசப்ஷன் கவுண்டரில் புன்னகைத்த அந்த பாப் தலை பெண்ணிடம் கேட்டார்.

"அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸர் இருக்காரா?"

"இருக்கார் ஸார்..."

"பார்க்கணும்..."

"வெயிட்... எ மினிட் ஸார்..." சொல்லி இன்டர்காமில் உள்ளே பேசிவிட்டு மறுபடியும் பளிச்சென்ற புன்னகையோடு பலராமனிடம் நிமிர்ந்தாள்.

"ஹி...ஈஸ்... வெயிட்டிங் ஃபார் யூ...! உள்ளே போங்க ஸார்..."

போனார்.

'அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர்' என்று நேம் போர்டு சொன்ன கதவைத் தள்ளிக் கொண்டு பலராமன் உள்ளே போக ஏ.ஓ. குருமூர்த்தி ஒரு பைலுக்குள் மூழ்கியிருந்தார்.

பலராமனைப் பார்த்ததும் மலர்ந்தார்.

"ஓ...இன்ஸ்பெக்டரா...வாங்க..."

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்."

குருமூர்த்தி சிரித்தார். "வர்றதே தொந்தரவு கொடுக்கத்தான். இதுல வீணா ஸாரி எதுக்காக சொல்லணும் இன்ஸ்பெக்டர். டேக் யுவர் சீட்."

பலராமன் உட்கார்ந்தார். ஏ.சி.யின் உபயத்தால் அறைக்குள் ஊட்டியின் சீதோஷ்ண நிலை உறைந்து போயிருந்தது. அறையைச் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டவர் சுவர் மூலையில் இருந்த பெடஸ்டல் ஃபேனைக் காட்டிக் கேட்டார்.

"மிஸ்டர் குருமூர்த்தி! இது ஏ.சி.ரூம் இந்த ரூமுக்குள்ளே ஃபேன் எதுக்கு...?"

"கரண்ட் ஃபெயிலியராயிட்டா ஏ.சி. ஒர்க் பண்ணாதே. அந்த சமயத்துல யூ.பி.எஸ். மூலமா ஃபேனை போட்டுக்க வேண்டியது தான். ஏ.சி.யோ, ஃபேனோ இல்லாமே இந்த ரூம்ல உட்கார்ந்திட்டிருக்க முடியாது ஸார்."

"இஃப் யூ டோண்ட் மைண்ட் மிஸ்டர் குருமூர்த்தி கரண்டை ஒரு ரெண்டு நிமிஷத்துக்கு ஆஃப் பண்ணிட்டு யூ.பி.எஸ். மூலமா அந்த பெடஸ்டல் ஃபேனைக் கொஞ்சம் ஓட வைக்க முடியுமா?

"எ...எதுக்கு...?"

"யூ.பி.எஸ். எப்படி ஒர்க் பண்ணுதுன்னு பார்க்கத்தான்."

"இது நிஜமான காரணம் மாதிரித் தெரியலையே?"

"காரணம் எதுவாயிருந்தா உங்களுக்கு என்ன குருமூர்த்தி. யூ.பி.எஸ்.ஸை ஆபரேட் பண்ணிக் காட்டுங்களேன்."

"இட்ஸ்... ஆல் ரைட்" என்று தோள்களைக் குலுக்கிக் கொண்ட குருமூர்த்தி எக்ஸிக்யூடிவ் நாற்காலியில் லேசாய் ஒரு அரைவட்டம் அடித்து பின் பக்கச் சுவரில் பொருத்தியிருந்த அந்த அறைக்கான மெயின் ஸ்விட்சை அணைக்க யூ.பி.எஸ். கரண்ட் உடனே ஜனித்து ஒரு ட்யூப் லைட்டை எரிய வைத்து பெடஸ்டல் ஃபேனைச் சுழல வைத்தது.

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஷ்குமார்**

'கர்ர்க்...கர்க்க...கீச்ச்..கீச்ச்..'

பலராமன் கேட்டார்.

"ஃபேன் ஏன் இப்படி சத்தம் போடுது?"

குருமூர்த்தி எரிச்சலாய்ப் பார்த்தார். "இதெல்லாம் என்ன கேள்வி ஸார்...?"

பலராமன் புன்னகைத்தார். "பொலிஸ்காரன் ஒரு கேள்வி கேட்டா அதுல ஏதாவது அர்த்தம் இருக்கும். இப்ப நான் கேக்கிற கேள்விக்கு பதில் சொல்லுங்க. அரை மணி நேரத்துக்கு முந்தி இங்கே பவர் கட்டாகி யூ.பி.எஸ். போட்டீங்களா...?"

"ஆ...ஆமா..."

மேஜை மேல் இருந்த டெலிஃபோனைக் காட்டிக் கேட்டார். "அது உங்க பிரைவேட் டெலிஃபோன் இல்லையா?"

"ஆமா..."

"உங்களுக்கு கீழே வேலை பார்க்கிற ஸ்டெனோ பேர் என்ன?"

"அருந்ததி..."

"ப்ளீஸ் கால் ஹர்.

"எதுக்கு...?"

"கூப்பிடுங்க சொல்றேன்."

குருமூர்த்தி லேசாய் வியர்த்துக் கொண்டே இண்டர்காமில் தொடர்பு கொண்டு ஸ்டெனோ அருந்ததியை வரவழைத்தார்.

தொப்புள் தெரிய சேலை கட்டி அலட்சிய நடையோடு உள்ளே வந்த அருந்ததி பலராமனைப் பார்த்ததும் லேசாய் நிறம் மாறினாள்.

பலராமன் அவளை ஏறிட்டார்.

"மிஸ் அருந்ததி! உனக்கும் ஏ.ஓ.வுக்கும் உள்ள தகாத உறவைப் பத்தி என்கொயர் பண்றதுக்காக நான் வரலை. நான் கேட்க வந்த கேள்வி இதுதான். பிரதாப் எங்கே...?"

"பிரதாப்...?"

"ம்...பிரதாப்பேதான்..! பூவிழியோட காதலன்."

"அவன் யார்ன்னே எனக்குத் தெரியாதே?"

"தெரியாமலா நீ சந்திராதேவி ஹாஸ்பிடல்ல இருந்த எனக்கு ஃபோன் பண்ணி நீங்க ஆயுசு பூராவும் காத்திட்டிருந்தாலும் பிரதாப் வரப்போறதில்லைன்னு சொன்னே?"

அருந்ததியின் முகத்தில் இருந்த பௌடர் பூச்சில் இப்போது வியர்வை.


"நான் ஃபோன் பண்ணினேனா?"

"இதோ பார்... ரொம்ப நேரத்துக்கு நீ பொய் பேசிட்டிருக்க முடியாது. அரைமணி நேரத்தக்கு முன்னாடி நீ எனக்கு இந்த ரூமிலிருந்து குருமூர்த்தி மேற்பார்வையில் ஃபோன் பண்ணி பேசியிருக்கே. அதுக்கு சாட்சி இந்த பெடஸ்டல் ஃபேன் போட்ட சத்தம்தான். நீ ஃபோன்ல பேசிட்டிருக்கும் போதே எனக்கு அந்த சத்தம் கேட்டது. இரண்டு நாளைக்கு முன்னாடி நான் விசாரணைக்காக வந்தபோது இந்த பெடஸ்டல் ஃபேன் இதே மாதிரிதான் சத்தம் போட்டுகிட்டு இருந்தது. இந்த பெக்குலியர் சத்தம் மனசுக்குள்ளே பதிவாகியிருந்ததால இன்னிக்கு நீ ஃபோன்ல பேசும்போது ஈஸியா என்னால ஐடெண்டிஃபை பண்ணிக்க முடிஞ்சது."

பலராமன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அருந்ததியும் குருமூர்த்தியும் பரஸ்பரம் பார்த்துக்கொண்டு வியர்வையில் நனைந்தார்கள்.

✤ ✚ ✮

பிங்கியோடு விளையாடிக் கொண்டிருந்த வர்ணாவை டெலிஃபோன் கனைத்து கூப்பிட்டது.



போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"யாரு வர்ணாவா...? அம்மா, நான் ராஜநாராயணன் பேசறேன்."

"வணக்கம் ஸார்."

"என்னது ஸாரா... மாமான்னு உரிமையோடு சொல்லம்மா. நீதான் என் பையனைக் கட்டிக்கறதுக்கு சம்மதம்னு சொல்லிட்டியே. சம்மதம்னு சொல்லிட்டாலே உறவு வந்துட்ட மாதிரிதான்."

வர்ணா தயக்கமாய்க் கேட்டாள்.

"அம்மாகிட்ட பேசணுமா?"

"இல்லேம்மா, உன்கிட்டதான் பேசணும். என் பையன் தீபக் இப்பத்தான் ஸ்டேட்ஸிலிருந்து வந்தான். அவனுக்கு உன் கூடப் பேசணுமாம். பேசறியா?"

"ம்..."

வர்ணா இதயம் படபடக்கக் காத்திருக்க தீபக் லைனில் வந்தான். குரல் கொடுத்தான்.

"ஹலோ வர்ணா..."

அந்தக் குரலில் சந்தோஷம் இல்லை.


(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

அனுபவத்தைவிட சிறந்த ஆசான் இந்த உலகத்தில் எவரும் கிடையாது. என் அனுபவ ஆசானாக எதிரே நின்று கொண்டிருந்த ஆட்டோ ஓட்டுநரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆட்டோ சமுதாயத்தைப் பற்றிய என் தவறான அனுமானங்களை நான் திருத்திக் கொள்ளவும் தயாராகிவிட்டேன். என்றாலும், என்னை இறக்கிவிடும்போது போஸ்டரை சுட்டிக் காட்டிச் சொன்னாரே, 'இவனுக முஞ்சியெல்லாம் பார்க்க எனக்குப் பிடிகல்ல'ன்னு.



# தர்ம யுத்தம் 08

பலி உணர்வு

அதன் காரணத்தை தெரிந்து கொள்வதில் மிகத் தீவிரமாக இருந்தேன்.

அவருக்குக் கோபம் யார் மீது? திரையுலகத்தின் மீதா? அல்லது அரசியல் பிடிக்கவில்லையா? தயங்கியபடியே மெதுவாக விசாரித்தேன்.

"அது சரி, உங்களுக்கு அரசியல், சினிமால்லாம் பிடிக்காதா?"

"நல்ல படம்னு கேள்விப்பட்டா எப்போவாவது சினிமா பார்ப்பேன். அரசியல்லகூட ஆர்வம் இருந்துச்சு ஒரு காலத்தில இப்பல்லாம் அந்த வார்த்தையைக் கேட்டாலே பிடிக்கல்ல."

நான் மௌனமாக டீயைக் குடித்தபடி அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

## அலைந்தேன்

அவரே தொடர்ந்தார். "சார், ஒரு காலத்துல என் கைக்காச செலவு பண்ணிட்டு போஸ்டர் ஒட்டி, தோரணம் கட்டி, அடுத்த கட்சிகாரனோடு சண்டை போட்டு, பொதுக் கூட்டம் நடத்தி, ஊர்வலம் போயிருக்கேன். வீடு, வாசலக்கூட கவனிக்க மாட்டேன் ஸார். திடீர்னு 'சைக்கிள் ஊர்வலம்' பாங்க. எங்க கிட்ட சைக்கிள் இல்லை. வாடகைக்கு சைக்கிள் எடுத்துக்கிட்டு, அன்னைக்கு வருமானத்தையும் விட்டுட்டு அவங்க பின்னால அலைவேன். என் கட்சிக்காக கள்ள ஓட்டுக்கூட போட்டு போலீஸ்காரன் கிட்ட அடிவாங்கியிருக்கேன்.

கள்ள ஓட்டு போட்றது தப்புதான் சார். ஆனா, ஒரு நல்ல ஆட்சி வரப்போகுதுன்னு அந்தத் தப்பையும் செஞ்சேன். ஆனா, இவ்வளவு கஷ்டப்பட்டு அவங்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்தா, அதிகாரத்துல உக்காந்ததும், அவங்க சொத்து, சுகம் சேர்க்குறதிலேயே கவனமா இருக்காங்க.

சொத்து மட்டுமா சேர்க்குறாங்க? எத்தனை பெண்டாட்டிங்க, எத்தனை வப்பாட்டிங்க! சார், எத்தனையோ வீடுகள்ல, ஹோட்டல்ல விபச்சாரக் கேசுகளைப் புடிக்கிறாங்களே, இந்த ஊருல எந்தெந்த கெஸ்ட் ஹவுசில, என்னென்ன நடக்குதுன்னு எனக்குத் தெரியும் சார். அங்கல்லாம் ரெய்டு பண்ணு வாங்களா? மாட்டாங்க. ஏன்னா, இவங்களுக்கு ரெய்டு பண்ண ஆர்டர் குடுக்கிறவங்களே அங்கேதானே ஆட்டம் போட்டுக்கிட்டு இருப்பாங்க!"

## திகைப்பு

திடீரென்று உணர்ச்சி வசப்பட்டவராக, "சார், நீங்க துணிச்சலா படம் எடுக்குறவர்னு கேள்விப்பட்டிருக்கேன். உங்க படங்கள் ஒண்ணு ரெண்டு பார்த்திருக்கேன். நான் ஒரு நிகழ்ச்சியை சொல்றேன். அது ரொம்ப நாள் முன்னால நடந்தது சார். அது உங்க படத்துல எங்கயாவது வச்சிருங்க சார். எந்த ரூபத்திலயாவது இது வெளியுலகத்துக்குத் தெரியணும் சார்."

சொன்னார். கேட்டேன். எனக்குத் திகைப்பாக இருந்தது. இப்படியும் மனிதர்களா? இவர்களுக்குப் பெயர் வெளியுலகத்தில் பெரிய மனிதர்களா? எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அந்த ஆட்டோ நண்பர் சொன்ன உண்மை நிகழ்ச்சியை திரை ரூபத்தில்தான் கொண்டு வரத் துடித்தேன். ஆனால் அதைவிட இன்று எனக்குக் கிடைத்திருக்கிற, 'தமிழன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் நான் எழுதுகிற, 'தர்ம யுத்த'த்தில் எழுத்து ரூபத்தில் வெளிப்படுத்துகிற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை பயன்படுத்திக் கொள்ள நான் தயாராகி விட்டேன்.

ஒருநாள் காலையில், எக்மோர்ல உள்ள லாட்ஜுக்கு எதிரில், ஆட்டோவை நிறுத்திட்டு பேப்பர் படிச்சுக்கிட்டு இருந்தார் அந்த ஆட்டோ நண்பர். இன்னும் வண்டி போணியாகல்ல.

"தம்பி!" என்றொரு பெண் குரல் கேட்டது. பேப்பர் படிப்பதை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தார். நடுத்தர வயதுள்ள ஒரு அம்மாவும், ஒரு சின்ன வயசுப் பொண்ணும் நின்னுக்கிட்டிருந்தாங்க அவர் எதிரில், அந்த அம்மாவுக்கு நாப்பது வயசு இருக்குமாம். அந்தப் பெண்ணு 16லிருந்து 18 வயசுக்குள்ள இருக்கலாமாம். அந்த அம்மாவின் கையில ஒரு பெட்டி.

ரெண்டு பேருமே ரொம்ப அழகா இருந்தாங்க.



அதிலும் அந்த அம்மா மஹாலட்சுமி என்கிற வார்த்தைக்கு மறுவடிவமா இருந்தாங்க. ஆனா, நெற்றியில பொட்டு இல்ல.

"தம்பி, அடையாறு வரைக்கும் போகணும். வர்றீங்களா?"ன்னு கேட்டாங்க.

ஆட்டோ நண்பருக்கு புதிய அனுபவம். 'ஆட்டோ வர்றியாப்பா?' 'ஆட்டோ போகலாமா?' இப்படிப்பட்ட வார்த்தைகளையே கேட்டுப் பழகிப் போயிருந்த அவருக்கு, 'தம்பி' என்று அவர்கள் வாஞ்சையுடன் அழைத்தது, இனம்புரியாத சந்தோஷத்தைத் தந்தது. வார்த்தைகளில் தான் எத்தனை வகை? அவைகளுக்குத் தான் எத்தனை வலிமை?

## தாயும் மகளும்

அவர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார். "தம்பி, போற வழியிலே ஏதாவது ஹோட்டல், கீட்டல் இருக்குல்ல?" என்றார் அந்த அம்மா. வழியில் ஒரு ஹோட்டலுக்கு அருகே நிறுத்தினார் ஆட்டோ நண்பர்.

"தம்பி, போற இடத்துல கொஞ்சம் முன்னப் பின்னே ஆகலாம். வாங்க. பலகாரம் சாப்பிட்டுப் போகலாம்" என்று ஆட்டோ ஓட்டுநரை அழைத்திருக்கிறார்கள். "நீங்க சாப்பிட்டு வாங்க, வண்டியில வெயிட் பண்றேன்"னு சொல்லியிருக்கிறார் அவர்கள் கேட்கவில்லை. வேறு வழியின்றிப் போனார். பக்கத்து மேஜையில் உட்கார்ந்தபோது, "இங்குதான் இடம் இருக்கே. இங்கு வந்து உக்காருங்க" என்று அவர்கள் அருகில் உட்காரச் சொன்னார்கள்.

சாப்பிடும்போதுதான் அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார் ஆட்டோ நண்பர். அவர்கள் இருவரும் தாயும், மகளும். சொந்த ஊர் தஞ்சாவூர் பக்கம். ஓரளவு வசதியான, நடுத்தரக் குடும்பம். மூன்று வருடங்களுக்கு முன்பு, அந்த அம்மாவின் கணவர் காலமாகிவிட்டார்.

உடையவன் இல்லை என்றால், ஒரு முழம் கம்மிதானே? அவர்கள் திருமணத்தின்போது சுற்றமும், நட்பும் சூழ வந்து ஆசிர்வதித்திருக்கின்றனர். ஆனால் வாழ்க்கையில் ஒரு கஷ்டம் என்றவுடன் சுற்றத்தையும் காணோம்; நட்பையும் காணோம். அவர்கள் வாழ்வில் ஏற்பட இருந்தது ஒரு விபரீதம்.

(அனுபவங்கள் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்– 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன்? தான் பிரீன்

05

**தொ**ண்டர்கள் வெளிப்படையாகப் பயிற்சி பெறவோ, அணிவகுத்துச் செல்லவோ கூடாது என்றும் தொண்டர் படை சட்டவிரோதமான ஸ்தாபனம் என்றும் நாடெங்கும் விளம்பரம் செய்யப்பட்டது.



சிறிது காலத்திற்குத் தொண்டர்களிடையே குழப்பமும் அயர்வுமே காணப்பட்டன. ஆனால் ஈஸ்டர் கலகத்தில் சம்பந்தப்பட்டுப் போராடிய தொண்டர் பலர் ஆங்கில இராணுவத்தார் வலையில் அகப்படாது தப்பி, தொண்டர் படையைச் சீர்திருத்தி அமைப்பதற்காக டப்ளின் நகரில் இரண்டு இரகசிய மகாநாடுகளை நடாத்தினர்.

சில மாதங்களில் மீண்டும் தீவிரமான வேலை ஆரம்பமாயிற்று. தான் பிரீனும் அவனுடைய தோழர் ஸீன்டிரீஸியும் தங்களுடைய தொண்டர் படையைச் சீர்திருத்தி அமைக்க முயன்றார்கள். எக்காரியத்தையும் இரகசியமாகவே செய்யவேண்டியிருந்தது.

வாரத்திற்கு இரு முறை அவர்கள் ஒரு சிறிய வனத்தில் கூடிப் பயிற்சி செய்வது வழக்கம்.

இவ்வாறு 1917ஆம் ஆண்டு மே மாதம் வரையில் நடந்து வந்தது. அப்பொழுது தான் பிரீனுடைய படையில் 13 பேர்கள் இருந்தார்கள்.

அவர்களில் யாருக்கும் போர் முறைகளைப் பற்றித் தெரியாது. வேறு இராணுவப் பயிற்சி உள்ளவர்கள் ஆங்கிலப் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டிருந்ததாலும் கண்டவர்களையெல்லாம் நம்புவது அபாயமானதாலும் அவர்களது இராணுவப் பயிற்சி முற்போக்கு அடையமுடியவில்லை.

எனினும் தேகப்பயிற்சி செய்தல், கொடி, குழல் ஊதுதல் முதலியவற்றால் அடையாளங்களைக் கற்றுக் கொள்ளுதல், றிவோல்வரால் குறிபார்த்துச் சுடுதல் முதலியவற்றால் அவர்கள் விசேஷப் பழக்கம் பெற்று வந்தனர். இவற்றையெல்லாம் கற்றுக்கொள்ள அவர்களுக்குப் புத்தகங்களைத் தவிர வேறு உதவியில்லை.

அந்தப் புத்தகங்களும் அரசாங்கத்தாரால் ஆங்கிலத் துருப்புக்களுக்குக் கொடுக்கப்பட்டவை. அவர்களை எதிர்ப்பதற்கு அவர்களுடைய புத்தகங்களே உதவி புரிந்தன. தான் பிரீன் கூட்டத்தார் பிரிட்டிஷ் துருப்புக்கள் பயிற்சி செய்யும் இடங்களுக்கு அடிக்கடி சென்று கவனிப்பது வழக்கம். அதன்மூலம் அவர்கள் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டார்கள். அத்துடன் எங்காவது, யாரிடமாவது ஒரு றிவோல்வர் கிடைக்குமென்று அவர்கள் கேள்விப்பட்டால் என்ன விலை கொடுத்தாவது அதை வாங்கி விடுவது வழக்கம். அந்த நேரத்தில் தேவையுள்ள பணமும் எப்படியாவது கிடைத்துவிடும்.

1917ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தான் பிரீன் படையினர் நகரெங்கும் தெரியும்படியாக அணிவகுத்துச் சென்றனர். அக்காலத்தில் ஈஸ்டர் கலக சம்பந்தமாக நாடு கடத்தப்பட்ட பலர் அயர்லாந்திற்கு மீண்டும் வந்து வாலிபர்களுக்குப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தனர்.

அரசியல் விவகாரங்களிலும் குடியரசுக்காரர்களுக்குச் செல்வாக்கு அதிகரித்து வந்தது. குடியரசின் பெயரால் நின்ற இரண்டு அபேட்சகர்களுக்குத் தேர்தலில் வெற்றி கிடைத்தது. சில மாதங்களுக்கு முன்னால் லியூஸ் சிறையிலிருந்து விடுதலையடைந்த இமன்டி வெலராவும் குடியரசுக் கட்சியின் சார்பாகப் பாராளுமன்ற ஸ்தாபனம் ஒன்றுக்கு அபேட்சகராக நின்றார்.

அவர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஆங்கிலப் நாடாளுமன்றத்திற்கே செல்வதில்லை என்று உறுதி கூறினார். அவருக்கு மகத்தான வெற்றி ஏற்பட்டது. தேர்தலுக்குப் பின்னர் அவர் திப்பெரரி நகரில் பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் பிரசங்கம் செய்தார்.

அப்பொழுது தான் பிரீனின் படையினர் அனைவரும் ஒரே மாதிரியான பச்சை நிற உடை தரித்து டிவலைராவுக்கு மெய்க் காப்பாளராக நின்றனர். அப்பொழுது திப்பெரரியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரிட்டிஷ் சிப்பாய்கள் தங்கியிருந்தனர்.

அதனால் தான் பிரீன் படையினர் துப்பாக்கிகளை ஏந்திச் செல்ல முடியவில்லை. அவற்றிற்குப் பதிலாக நீண்ட தடிக்கம்புகளை வைத்திருந்தனர் அக்காலத்தில் இராணுவத்தைப்போல் அணிவகுத்துச் செல்வதும், ஒரேமாதிரியான இராணுவ உடையணிவதும், கைகளில் தடிக்கம்பு வைத்திருப்பதும், குற்றமென்று அரசாங்கம் விளம்பரப்படுத்தியிருந்தது. தடிகளையும் தடை செய்து விளம்பரஞ் செய்யப்பட்டது மிகவும் வியப்

## தமிழில் ப.ராமஸ்வாமி

பாகும்! அதன் வரலாற்றைக் கவனிப்போம்.

டப்ளின் நகரத்திலே ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் பொதுக்கூட்டம் ஒன்று நடந்தது. இங்கிலாந்திலுள்ள ஐரிஷ் கைதிகள் மிகவும் கேவலமாக நடத்தப்படுவதைக் கண்டிக்கவே இக்கூட்டம் கூடியது.

பிளங்கெட் என்பவரும் கதால் புருகா என்பவரும் பிரசங்கம் செய்தார்கள். அப்பொழுது டப்ளின் நகரப் பொலிஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் மில்ஸ் என்பவர் அந்த அமைதியான கூட்டத்தைக் கூடவிடாமல் கலைக்க முயன்றார்.

அக் கூட்டத்தில் 'ஹொக்கி' விளையாட்டிற்குச் செல்லக்கூடிய வாலிபர்களும் விளையாடி விட்டுத்திரும்பிய வாலிபர்களும் பலர் இருந்தனர். இன்ஸ்பெக்டர் கூட்டத்தைக் கலைத்துப் பேசுகிறவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று முயற்சித்தபொழுது அவர் மேல் ஒரு ஹொக்கிக் கம்பு எறியப்பட்டது.

அவர் காயங்களடைந்த பின்னால் அக்காயங்களால் இறந்து போனார். இதிலிருந்து அயர்லாந்திலுள்ள பிரிட்டிஷ் துருப்புக்களின் சேனாதிபதியாகிய சேர் பிரியான் மாகன் யாரும் தெருக்களில் ஹொக்கிக் கம்புகளைக் கொண்டு செல்லக்கூடாது என்று சட்டம் போட்டு விட்டார்!

மனிதர்கள் கம்பு ஊன்றி நடக்கக் கூடாது என்று சட்டமிடுவது எவ்வளவு கேவலமோ, அதைப் போன்றது இந்த அநாகரிக உத்தரவும். இந்தச் சட்டம் போடுவதற்கு முன்னால் ஜனங்கள் அதிகமாய்த் தடிகள் வைத்திருப்பதில்லை. ஆனால் அதற்குப் பின்னால் நாடு, நகரம் எல்லா இடங்களிலும் ஜனங்கள் ஹொக்கித் தடிகளைத் தாங்கிச் சென்றனர். முன்பின் தடிகள் வைத்திருக்காதவர்களும் அவற்றை வாங்கி வைத்துக்கொண்டனர்.

தான் பிரீன் கூட்டத்தார் திப்பெரரியில் ஹொக்கித் தடிகளைத்தாங்கி இராணுவ உடையில் அணிவகுத்துச் சென்றது, பகைவர்களுக்குக் கலக்கத்தை உண்டாக்கியதைப் போலவே நண்பர்களுக்கும் கலகத்தை உண்டாக்கியது.

உள்ளூரில் இருந்த ஸின்பீனர்கள் அதைக்கண்டு திடுக்கிட்டுப்போயினர். அப்பொழுது ஸின்பீன் கட்சிக்கு மிகுந்த ஆதரவு ஏற்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதில் சேர்ந்தனர். ஆனால் அவர்கள் தீர்மானங்களைத் தவிர வேறு ஆயுதங்களை உபயோகிக்கத் தயாராக இருக்கவில்லை.

திப்பெரரியிலிருந்த ஸின்பீனர்கள் தான் பிரீன் கூட்டத்தாரிடம் அதிருப்தி கொண்டதன் காரணம் என்னவெனில் அவர்கள் கூட்டம் கூடித் தர்க்கம் செய்து ஒரு நீண்ட தீர்மானம் இயற்றாமலே இராணுவ உடை தரித்து அணிவகுத்துச்சென்றதுதான்.

இத்தகைய மந்தபுத்திக்காரர்களால் பின்னாலும் பல தடைகள் ஏற்பட்டன. ஆனால் தான்பிரீன் கூட்டத்தினர் அவைகளைப் பொருட்படுத்தவில்லை.

திப்பெரரியில் நடந்த இச்சம்பவத்தைச் சில்லறை உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துகின்றனர். உடனே குற்றவாளிகளைக் கைது செய்யும்படி உத்தரவு பிறந்தது.

தான் பிரீன் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியின் விருந்தினராகச் சிறை செல்வதற்கு விரும்பவில்லை.

**கடந்த வாரம்**

**ஐரிஷ் தொண்டர்படை போராளிகள் தான் பிரீன் தலைமையில் பதில் ஆளுநரைக் கொல்வதற்கு தாக்குதல் நடத்துகிறார்கள். ஆளுநர் தப்பிவிடுகிறார். அயர்லாந்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தொண்டர் படை தொடர்ந்து போராடுகிறது. இனி...**

வெளியிலே பல வேலைகள் காத்து நிற்கும் பொழுது, மாமனார் வீட்டில் விருந்துண்ண என்ன அவசரம்? அவனும் ஸீன்டிரீஸியும் வீட்டைவிட்டு வெளியேறி வெளியிடங்களுக்குச் சென்று பொலிஸ் புலிகளின் கண்ணில் படாமல் மறைந்தனர்.

ஆனால் சில நாட்களில் ஸீன் பொலிசாரால் கைது செய்யப்பட்டான். அவன் கார்க் நகரத்து ஜெயிலில் கொண்டு வைக்கப்பட்டான்.

அங்கே வேறு பல புரட்சித் தலைவர்கள் இருந்தனர். ஸீன் அவர்களோடு கலந்து பின்னால் செய்ய வேண்டிய காரியங்களுக்குத் திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்தான். புரட்சிக் காரர்களைச் சிறைகளில் அடைத்து வந்தது அவர்களுக்கு விசேஷ உதவியாக இருந்தது.

பல திறப்பட்ட அபிப்பிராயங்களுடைய புரட்சிக்காரர்கள் வெளியிலேயே ஒன்று கூடுவதற்கு வழியில்லாத நிலையில் சிறைகளுக்குள்ளே ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்வதற்குப் பிரிட்டிஷார் உதவி செய்து வந்தனர்.

பல புரட்சிக்காரர்கள் சிறையில் வைத்துத்தான் இராணுவப் பயிற்சி பெற்று வெடிகுண்டு செய்ய வேண்டிய வழிகளைத் தெரிந்து கொண்டார்கள். ஆதலால் சிறைச்சாலையே புரட்சிக்காரர்களின் சர்வ கலாசாலை என்பது பொருந்தும்.

ஸீன்டிரீஸி இராணுவ நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டு இரண்டு வருஷம் தண்டனை அடைந்தான். ஆனால் எட்டுமாதத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டான்.

இந்த விசாரணையெல்லாம் வீண் ஆடம்பரத்தைத் தவிர வேறில்லை. ஏனென்றால் தேசியத் தொண்டர்கள் எதிர் வழக்காடுவதில்லை. பிரிட்டிஷ் நீதிமன்றத்திற்குத் தங்களை விசாரிப்பதற்கு உரிமையே கிடையாது என்று அவர்கள் கூறிவந்தார்கள்.

விசாரணை நடந்து கொண்டிருக்கும்; சாட்சிகள் பொலிஸார் கட்டிக் கொடுத்த பொய் மூட்டைகளை அவிழ்த்து அளந்து கொண்டிருப்பார்கள். அதே சமயத்தில் குற்றஞ்சாட்டப்பெற்றுக் கைதிக் கூண்டில் நிற்கும் தொண்டர்கள் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது இன்பகரமான கீதங்களைப் பாடிக்கொண்டிருப்பார்கள்.

(பயணம் ...தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

30

# அரங்கம் அந்தரங்கம்

**ப**ணக்காரர்கள் வீட்டைவிட்டு வெளியூருக்குப் புறப்பட்டால், பூட்டைப் பத்துதரம் இழுத்துப் பார்ப்பார்கள்.

கற்பகம் முழு வீட்டையும் பூட்டிக் கொண்டு போகவில்லை. வேலைக்காரர்களுக்கு ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு மற்றவற்றைத்தான் பூட்டினாள்.

மதியம் அவள் விமான நிலையத்திற்குச் சென்றபோது ஒரு மகாராணிக்குரிய வரவேற்பிருந்தது.

பெரிய வீட்டுப் பெண்களுக்கு அரங்கங்களில் அத்தகைய வரவேற்புக் கிடைப்பது சகஜம். அந்தரங்கம் அவர்களைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தாலும் அரங்கத்து வரவேற்பில் அனைத்தையும் மறந்து விடுவார்கள்.

பெட்டியை ஒருவன் வாங்க, டிக்கெட்டை ஒருவன் வாங்கிக் கொண்டுபோய் முத்திரை போட, சாதாரணப் பிரயாணிகளெல்லாம் 'யாரோ, வி.ஐ.பி. போலிருக்கிறது. யார்? யார்?' என்று விசாரிக்கக் கற்பகம் பம்பாய்க்குப் பறந்தாள்.

சிங்கப்பூர் விமானம் வருவதற்கு இரண்டு மணி நேரம் தான் இருந்தது. அதனால் அவள் விமான நிலையத்திலேயே தங்கிவிட்டாள்.

விமானத்தில் இருந்து இறங்கி வந்த நாராயணசாமி, தன் மனைவி பம்பாய்க்கு வந்திருப்பாள் என்று கருதவேயில்லை.

கணவனைப் பார்த்ததும் 'ஒ...' என்று அழுது அவன் கால்களில் விழ வேண்டும் போல் தோன்றிற்று அவளுக்கு.

கொஞ்ச நாள் பிரிவுக்குள் வீட்டில் எவ்வளவு காரியங்கள் நடந்து விட்டன? எதை அவள் சொல்ல முடியும்?

விமானத்தில் வந்த மற்றப் பெண்கள் தங்கள் துணைவரோடு ஒட்டிக்கொண்டு பெட்டியை எடுத்ததையும், ஒன்றாகப் போவதையும் பார்த்தபோது இப்படி ஒரு உயர்ந்த வாழ்க்கை இருப்பதையே தான் சிந்தித்ததில்லையே என்று கலங்கினாள் கற்பகம்.

நாராயணசாமி மனைவியிடத்தில் மட்டற்ற நம்பிக்கையுடையவர். தன்மீதுள்ள ஆசையின் காரணமாகவே அவள் வந்திருப்பதாக அவர் நம்பினார்.

வெளிநாடு சென்று திரும்பியவர்கள் எப்போதுமே மடமடவென்று பேசுவது வழக்கம். அங்கே நடந்தது, நடக்காதது எல்லாவற்றையுமே விவரிப்பார்கள்.

காரில் நாராயணசாமி பேசப் பேச கற்பகம் மவுனதேவதையாகவே உட்கார்ந்திருந்தாள்.

அவர்கள் ஏறிச் சென்றது மதன்லாலின் கார்தான்! அது போய்ச் சேர்ந்த இடமும் மதன்லாலின் விருந்தினர் விடுதிதான்!

அந்த விடுதியில்தான் தன் தம்பி காதலியோடு தங்கியிருக்கிறான் என்பது நாராயணசாமிக்குத் தெரியாது.

அவர்கள் உள்ளே நுழைந்ததும் முதன் முதலில் அவர்களை வரவேற்றது விஜயா வேதாசலம்.

அவள் மட்டும்தான் இருக்கிறாள் என்று கருதிய நாராயணசாமி, கேலியாக, "அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் பரமேசுவரி!" என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

அப்பொழுதுதான் வெளியே புறப்படுவதற்குத் தயாராக இருந்த குமாரசாமியும், லலிதாவும் எதிர்ப்பட்டார்கள்.

சந்தித்துக் கொண்ட அனைவருமே திகைத்தார்கள்.

"அண்ணா" என்றான் குமாரசாமி.

கற்பகத்தைப் பார்த்து, "அக்கா" என்றாள் லலிதா.

என்ன சொல்வதென்று தெரியாமல் ஓர் அறைக்குள்ளே நுழைந்தார் நாராயணசாமி.

டெலிபோன் மணி அடித்தது.

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

–கண்ணதாசன்–

❀ ✎ ◎

**அ**திகாரம் கையில் இருக்கும்போது ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்கிறானோ, அதைக் கொண்டுதான் அதிகாரம் போன பின்பும் உலகம் அவனை மதிக்கும்.

துப்பாக்கி இருக்கிறது என்று பிறரைச் சுடுபவன் அதில் குண்டு தீர்ந்ததும் பிறரால் சுடப்படுவான்.

தேவ லோகத்தில் இந்திர பதவியே, அடிக்கடி மாறுகிறதாம்; மந்திரி பதவியும், அதிகாரி பதவியும் எத்தனை நாட்களுக்கு?



கடவுள் மனிதனுக்குக் கொடுத்த ஒரே அதிகாரம், 'மனிதாபிமானம்.'

அதை மறந்து, பிறஅதிகாரங்களில் வெளியாட்டம் போடுகிறவன், யாருடைய அபிமானத்தையும் ஒரு காலத்திலும் பெற முடியாது.

அதிகாரி கமல் நிலையும் அப்படித்தான் ஆகிவிட்டது.

கட்சிக்குத் தலைவராகி, கட்சி சொத்துக்கே மிராசு தாரராகி விடும் சிலரைப் போல, அதிகாரியாகி 'எல்லாம் நானே' என்று எண்ணத் தொடங்கி, தலைகீழாக நாட்டியம் ஆடியவர் கமல்.

அந்தரங்கத்தில் அவர் அனுபவித்ததற்கு அளவு கிடையாது; அரங்கத்தில் அவரைவிடப் பெரியவர்கள் கிடையாது.

கற்பகத்தின் வீட்டில் இருந்தபோது நளளிரவில் அவருக்கு வந்த அழைப்பு, அவருக்குக் 'கட்டாய ஓய்வு' தரும் அழைப்பே.

அவரைப் பற்றி ரகசியமாகச் சேகரிக்கப்பட்டிருந்த குறிப்புகளில், கடைசியாக எழுதப்பட்ட குறிப்பு– 'ஒரு கொலையை மறைக்க உடந்தையாக இருந்தார்' என்பதே!

ராஜசேகரனின் குடும்பத்தினர் கொடுத்த மனுவை ஆதாரமாகக் கொண்டு, மேலதிகாரிகள் ரகசியப் போலீசார் மூலம் அவரைக் கண்காணிக்க ஆரம்பித்தார்கள்.

"கற்பகத்தின் வீட்டிற்குக் கமல் சென்றிருக்கிறார்."

என்றவுடனே, அவர்கள் ஒரு பெரிய வலையை விரித்தார்கள்.

கற்பகம் வீட்டில், கமல் இருந்த அறைக்குள்ளேயே ஒரு டெலிபோன் இருக்கிறது.

அந்த நம்பரை அறிந்து வைத்திருந்த மேலதிகாரிகள், அவரது மனைவி பேசுவது போல் ஒரு பெண்ணைப் பேசச் செய்து கமல் பேசியதைப் பதிவு செய்து கொண்டார்கள்.

**கவியரசு கண்ணதாசன்**

அவர் அந்த டெலிபோன் பேச்சிலும் சாதாரணமாகவா பேசினார்?

"நான் நினைத்தால் தொலைத்துக் கட்டி விடுவேன்" என்றார்.

"இப்போது கூடப் பக்கத்தில் ஒரு பெண்ணோடுதான் இருக்கிறேன்" என்றார்.

"நான் கொலை செய்வேன், கொலையை மறைப்பேன் என்றார்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# சண்டித்தனம்!



**செ. குணரத்தினம்**

பல வருடங்களை வெளிநாட்டில் கழித்துவிட்டு ஒருநாள் வரதன் தன் சொந்தக் கிராமத்துக்கு வந்தான்.

கிராமமே வெறிச்சோடிப்போய்க் கிடந்தது. 'இந்தக் கிராமம் தானா தன்னுடைய சொந்தக் கிராமம்?' என்று யாரையாவது பார்த்துக் கேட்கவேண்டும்போல அவனுக்குத் தோன்றிற்று. ஆனாலும் அவன் எவரிடமும் அதுபற்றி வாய் திறக்கவில்லை.

வரதனின் தாய் அடிக்கடி வரதனுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் கிராமத்தில் நடக்கும் அழிமதிகளை, அநியாயங்களையெல்லாம் எழுதுவாள். அப்போதெல்லாம் அவன் அதைப் பெரிதாக எடுப்பதில்லை. இப்போது நேரிடையாகவே கிராமத்தைப் பார்க்கும் போதுதான் உண்மை அவனுக்கு உறைத்தது.

பஸ்ஸிலிருந்து இறங்கியதும், ஓட்டோவொன்றைப் பிடித்துக்கொண்டு கிராமத்தை ஊடறுத்துப் போகும்போதுதான் இதெல்லாம் அவனுக்குத் தெரியவந்தது.

வழியில் போவோர் வருவோர் எல்லோரது முகங்களையும் பார்த்தான். எல்லோர் முகங்களிலும் அச்சம், சோகம், சந்தேகம்தான் குடிபுகுந்திருந்தது. கிராமத்தின் அழகு குன்றிப் போனதுபோல மக்களின் வதனங்களும் சோபையிழந்து காணப்பட்டன.

பெருமூச்சு விட்டுக் கொண்டபோது ஓட்டோச் சாரதி கண்ணாடியினூடாக வரதனைப் பார்த்தான்.

"என்ன தம்பி வரதா, மீண்டும் எப்ப திரும்பிப் போறதாக உத்தேசம்?"

அப்போதுதான், தன் முன்னால் ஒருவர் இருந்துகொண்டு ஓட்டோவைச் செலுத்துகிறார் என்ற சங்கதி தெரியவந்தது வரதனுக்கு.

கிராமத்தின் மாறுதல்கள் வரதனின் ஐம்புலன்களையும் அடக்கிவைத்திருந்தன.

சுயநினைவிற்கு வந்தவனாக ஓட்டோச் சாரதியைப் பார்த்தான். இதற்கு முதல் அவனை எங்கேயோ பார்த்தது போலிருந்தது. ஆனாலும் எங்கே என்று சரியாக நினைவில் தட்டுப்படவில்லை.

சற்று கண்களை மூடி, பழைய நினைவுகளை மீட்டுப்பார்த்தான்.

முள்ளம்பன்றி முள்ளாக குத்திக்கொண்டு நிற்கும் நீளமான கருகருவென்ற மீசை. இரத்தக் குண்டுகளாகச் சிவந்து எந்நேரமும் கண்நோய்க்காரனைப்போல தெரியும் பெரிதான கண்கள். முன்னங்கையிலும் மார்பிலும் வாயைப்பிளந்துகொண்டு பாயும் புலியின் பச்சை குத்திய அடையாளங்கள் தெரியும் படியாக அணிந்திருக்கும் நெற்பெனியன். வாரி இழுக்க இழுக்க சுருண்டு சுருண்டு விழும் சுருள்முடி. கம்பீரமான நடை-இத்தியாதி லட்சணங்களோடு செருமியபடியே தெருவால் நடந்துவரும்போது கிராமத்தில் உள்ளவர்களெல்லாம் தெருக்கதவைச் சாத்திக்கொண்டு வீட்டிற்குள் ஓடிச்சென்றுவிடுவார்களே!

'அடடே அதே சண்டியன் சரவணனா இவன்!' என்று எண்ணிக்கொண்ட வரதன்.

"அண்ணே, மன்னிக்கணும், நீங்கதானே ச...ண்டியன் சரவணன்?" என்று கேட்டான்.

"அதெல்லாம் பழைய காலம்! இப்ப நான் சண்டியன் இல்ல தம்பி. சாதாரண மானவன். இப்போதெல்லாம் எவர் அடித்தாலும் பட்டுக்கொள்வேன். இப்போது காலம் மாறிவிட்டது. காலத்துக்கேற்ப நாமும் நம்மை மாற்றிக் கொள்ளத்தானே வேண்டும்!" என்றபடி சரவணன் வேகமாக ஆட்டோவைச் செலுத்தினான்.

"யுத்தம் பல கொடுமைகளைச் செய்தாலும் இப்படியான சில நன்மைகளையும் செய்துதானிருக்கிறது. கிராமம் மாத்திரமல்ல கிராமத்தவர்களின் வாழ்விலும் பலமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாம் காலம் செய்தகோலம்...!" என்று எண்ணியபடி வரதன் ஓட்டோவைவிட்டு இறங்கிக்கொண்டான்.

# முடியாத முடிவு!



**கனி**

ஒன்பது மணிச்சூரியன் அந்தக் கட்டடக் கலவையை சூடேற்றிக் கொண்டிருந்தான். அத்தொகுதியின் முதலாவது அறையிலே சட்டத்தரணியின் அலுவலகம் அமைந்திருந்தது. சக்கரங்கள் பூட்டப்பட்ட இரும்புக் கதவுகளுக்குள்ளே கண்ணாடித் தடுப்புப் போடப்பட்டிருந்தது. பாதணிச் சோடிகள் வாசலில் கழற்றப்பட்டுக் கிடந்தன.

குளிரூட்டப்பட்ட அறையாக இருக்கலாம், என்றெண்ணி பாதணிகளை வாசலில் கழற்றிவிட்டு உள்ளே சென்றமர்ந்தான் அவன். அனல் வந்து மோதியது. குளிரூட்டப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்திருக்கின்றனவே தவிர இன்னும் குளிரூட்டப்படவில்லை.

அந்த அலுவலக அறையில் அவனைப் போலவே வேறு சிலரும் அவஸ்த்தைப்பட்டுக் காத்துக்கிடக்கின்றனர், சட்டத்தரணியின் வருகைக்காக. வீதியில் போவோர் இவர்களை ஒருமுறை பார்த்துவிட்டுத்தான் கடந்தார்கள்.

அந்த வீதியில்தான் எத்தனை விதமான காட்சிகள். உலகம் ஒரு விளையாட்டு மைதானம். எல்லாவிதமான விளையாட்டுக்களும் ஒரே மைதானத்தில்- ஒரே நேரத்தில் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதுபோல வியப்பான எண்ணங்கள் அவனுக்குள்ளே தோன்றின.

திடீரென அந்த அறைமுழுவதும் அவனுக்குப் பழக்கமான பிடித்தமான நறுமணம் பரவுகிறது. மதுரா...! மதுராவும் அவளுடைய கணவனும் அவனுக்கு எதிரேயிருந்த நாற்காலிகளில் அமருகிறார்கள். மதுராவைக் கண்டதும் அவனுக்குள்ளிருந்த- அவனைச் சுதாகரித்துக் கொள்வதில் இரண்டுமூன்று நிமிடங்கள் தேய்ந்து போயின அவனுக்கு.

அவனை நிமிர்ந்து பார்த்ததும் மதுராவின் கண்களிலும் ஓர் ஆச்சரிய மின்னல். கூடவே 'என்னைத் தெரிந்தவர் போல் காட்டிக்கொள்ள வேண்டா'மென்றொரு கெஞ்சல்.

அவன் மௌனமாகிறான். வார்த்தைகளைவிட மௌனம் வலிமையானது. இதனைப்போல எத்தனையோ மௌனங்களில் அவர்கள் கலந்தவர்கள். பின்னர் அதே மௌனத்தில் கலைந்தவர்கள்.

ஒரு மார்கழி நாளில் மேகக்கருமையில் சூழல் மங்கிப்போயிருந்த பகல் பொழுதில் அவன் மதுராவை அருகில் பார்த்திருந்தான்.

சில முகங்கள் பலவருடங்கள் நெருங்கிப் பழகியதுபோல் ஒரு உணர்வை ஏற்படுத்தும். "வா...வந்து...பேசு..." என்றழைக்கும். அப்படித்தான் மதுராவின் வதனமும் அவனைக் கவர்ந்தது. கனவு மிதக்கும் அந்தக் கண்களுக்குக் காவலிருக்கும் இரு புருவங்களும் அவனை அவள்பால் சிநேகங்கொள்ள வைத்தன.

அவனும், மதுராவும் சிநேகங் கொண்டார்கள். ஆனால் அது சிநேகம்தான் என்பதில் இருவருக்குமே சந்தேகமிருந்தது.

அழகான அவளுக்குப் பிடித்தமான பொருளைக் கண்டதும் அதை வாங்கி அவளுக்குப் பரிசளிக்க எண்ணும் மனதை எத்தனை நாட்கள் கட்டுப்படுத்திருக்கிறான். அவள் கைகள் கிறுக்கிய சின்னச் சின்ன காகிதக் கீறல்களைக் கூட கடித உறைகளைக்கூட அவன் பத்திரப்படுத்தியிருந்தான். அவனை அவன் மதுராவிடம் வெளிப்படுத்த எண்ணியபோது அவள் செல்வி அல்ல, திருமதி. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. உறங்கும் இரவோடு விழித்திருக்கும் நிலவுபோல அவன்.

அந்த அலுவலக அறை சற்றுச் சலனமடைகிறது. சட்டத்தரணி வந்துவிட்டார். ஒவ்வொருவராக தத்தமது விடயங்கள் பற்றித் தனித்தனியாக பேசிக்கொண்டார்கள். தனது முறைவர அவனும் தனது விடயத்தைப் பேசி முடித்துவிட்டு வெளியேறுகிறான்.

மதுராவுக்கு சட்டத்தரணியை சந்திக்குமளவிற்கு என்ன இடர் வந்திருக்கும்? அவனுடைய மனம் எப்போதும் அவளைப்பற்றியே நினைத்துப் பார்க்கும், விடை தெரியாத கேள்விபோல.

அவனும் அவனுடைய காதலும்- இன்றும் அவனுடைய நினைவுப் புத்தகத்தில் ஒருபக்கம் அவளுக்காகவே...

*உயிர்க்கடையில் நான் பெற்ற*
*காதல் கடனே உன்னை(த்)*
*திருப்பித் தந்துவிட- இன்னும்*
*எத்தனை முறைநான் பிறக்கவேண்டும்?*

# றுஸ்தா



**உவைஸ்கனி**

"நேற்றுத்தான் அவளை நான் முதல் முதலில் கண்டேன் சொன்னால் நம்பு றுஸ்தா" நம்பவே மாட்டேங்கிறாளே சீ என்ன பொம்புளைக. வெறுத்துக் கொண்டேன் நான்.

"அவள் யார்- ஆசிரியை, என்ன செய்கிறாள்- ரீச்சரா ஒங்களுக்கு என்ன அவளோட கத?" கேட்டாள்- சொன்னேன். கேட்டுக்கொண்டே போனாள்.

"இந்தா றுஸ்தா நிற்பாட்டு. உண்மையைச் சொல்லுறன். நம்புனா நம்பு இல்லாட்டி விடு!"

"அவ பெயர் றுக்ஷானா, றுஸ்தா மாதிரித்தான். 'று'னாவுல தொடங்குது. ரீச்சர்தான்; ஆனாலும் இன்னும் 'வொலண்டியர்.' அழகானவ. மனசுக்கும் புடிச்சவ.அதைவிட மிகவும் சமூகவாதி, கவிதைகளை இரசிப்பாள். சமய ஆசாரங்களும் நன்கு தெரிந்தவள். அதனால் கதைக்கிறேன், பேசுகிறேன் அதில் என்ன குற்றம்?" சொல்கிறேன் நான், சிலையானாள் அவள்.

"என்ன றுஸ்த்தாமா கதைக்காம இருக்கிற?" கேட்கிறேன் மீண்டும் நான். அப்போதும் மௌனம். மெல்லக் கதைத்தாள். பிடிவாதம் தொலைத்தாள். அருகில் அழைத்தாள். தேநீரை ஆற்றி கையினில் கொடுத்தாள், பருகினேன். பருகிக்கொண்டே றுக்ஷானாவின் அழகையும் எனக்குள் பாடினேன். கற்பனை உலா காற்றில் பறக்க காதல் நிலா வானில் ஏற வார்த்தைகள் வாயில் வர மறுத்தன.

கதைத்தாள் அப்பப்பா என்ன கதை ஹொலிவூட்டிலிருந்து சிங்களப் படம்வரைக்கும் அத்துப்படியாகி உதாரணங்கள் காட்டி எதையெல்லாமோ சொன்னாள். மொண்டசூரியிலிருந்து கெம்பஸ் வரைக்கும் நடப்பதை, படிப்பதை, இருப்பதை சொன்னாள்.

நேரம் போனது மடியிலிருந்து அதாவது என் மடியிலிருந்து இறங்கினாள். எங்கேயோ ஓடினாள். என்ர மூத்த ராத்தாவின் மகளா இவள் ஆறு வயசு முடிவதற்குள்ளே இப்படி என்னை உலுப்பி எடுக்கிறாளே அசந்து போகிறேன் எனக்குள்ளே. தூரத்தில் றுக்ஷானா வந்து கொண்டிருந்தாள்.

இனிமேல் காதல் கத்தரிக்காய் என்று எதுவும் இவளிடம் கதைக்க கூடாதென எனக்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டேன்.

# அடையாளங்கள்



**ரூபாராணி**

இருளின் இறுக்கமான பிடியில் இருந்து அந்தச் சின்னக் கிராமம் விழித்துக் கொண்டது. தர்மலிங்கத்தின் தேனீர்க் கடையில் வழமையாகக் கேட்கும் 'முக்காலா முக்காப்பிலா'ப் பாடல் அன்று கேட்கவில்லை.

தர்மலிங்கம் தேனீரைக் குவளையில் ஊற்றி மாறி மாறி மேலுங்கீழுமாக ஆற்றிக் கொண்டிருந்தார்.

புட்டு, ஆட்டிறைச்சிக்கறி, முட்டை சொதி கருவாட்டுப் பொரியல் என்று சாப்பாட்டு வகைகளின் வாசம் மூக்கைத் துளைத்தது. அங்கே போடப்பட்டிருந்த வாங்குகளில் வாடிக்கை குறைந்திருப்பதை நோட்டமிட்ட தர்மலிங்கம் "கணபதி அண்ணே, இந்தாங்க பால்ரீ!" என்றான்.

எங்கோ பார்வையைப் பதித்திருந்த கணபதி வேட்டியை மடித்துக் கொண்டு குவளையை வாங்கியவர், "எங்க கடைப் பொடியன்?" என்று தர்மலிங்கத்திடம் கேட்டுவிட்டு யோசனையுடன் உட்கார்ந்தார்.

"பொடியன் இண்டைக்கு லீவு, பாட்டி செத்துப் போனாவாம். லீவு எடுக்கிறதில மட்டும் குறைச்சலில்ல; வேல செய்யிற எண்டாத்தான் மாச்சல்." தர்மலிங்கத்தாரின் முணுமுணுப்பு அரைகுறையாகக் கணபதியின் காதில் விழுந்தது.

"என்ன கணபதி ரீ ஆறப்போகுது சுடச் சுடக் குடிச்சாத்தான் இந்தக் குளிருக்குக் கொஞ்சம் நல்லாருக்கும்!" பக்கத்தில் இருந்த ஆறுமுகம் சொன்னார்.

"தாமோதிரத்தின் பொண்டாட்டியத் தெரியும்தானே? அவதான் நாகம்மா. நெனச்சா ஆத்திரமா வருகுது ஆறுமுகம். அது ஒரு பொம்பிளையா? பேய், சே... காலங்கெட்டுக் கெடக்கு. இந்தச் சனிகளால தான் நாட்ல இவளவு கஷ்டம்," கொடுப்புக்குள் புரண்டு விளையாடிய வெற்றிலைச் சக்கையை எட்டித் துப்பிவிட்டுச் சொன்னார் கணபதி.

ஆறுமுகத்தின் நெற்றிச் சுருக்கங்கள் வியப்பை வெளிப்படுத்தின.

"நாகம்மா அடிக்கடி நல்லதம்பி வாத்தியாரிட்ட குலுக்கி மினுக்கிப் போய்வாறா, இது எங்க கொண்டு முடியுமோ" என்று ஏழனம் தொனிக்கத் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டினார் கணபதி.

"நாகம்மாக்காவப் பத்தி நீங்க ஏன் ஆத்திரப்படவேணும்? அதுபாவம்; சரியாக் கஷ்டப் பட்டுக் காலத்தக் கொண்டு போகுது.." பீடி குடித்துக் கொண்டிருந்த விநாயகம் சற்று உரக்கவே சொன்னான்.

கணபதி தோளில் தொங்கிக் கிடந்த துவாய்த்துண்டை உதறியபடி விநாயகத்தினருகே வந்து "நாகம்மா பாவமா? வாயக் கிளறாத! புருஷன் செத்தவள் மினுக்கா உடுத்தி பௌடர் அப்பிப்பொட்டு வச்சித்திரியலாமா? என்ன உசாரா றோட்ல கூச்ச நாச்சமில்லாம நடக்கிறா. தூ.." எச்சிலை வெளியே துப்பினார் கணபதி.

"இதென்னடா பெரிய வம்பாப் போச்சி, பொம்பிளைகளவிட மோசம். கடைக்குள்ள எதுக்கய்யா ஊரளப்பு?" தர்மலிங்கம் குரலை உயர்த்தினார்.

நாகம்மா இடியப்பக் கூடையுடன் கடையினுள்ளே நுழைந்ததும் அங்கு ஓர் அசாதரண அமைதி திடீரென்று பரவியது. கணபதி ஆறுமுகத்தைப் பார்த்துக் கண்ணடித்தார். தொண்டைகள் சில இளக்காரமாகச் செருமின.

நாகம்மா தன் கணக்கை ஒப்புவித்துவிட்டு எதையும் கவனியாமல் வெளியேறினாள்.

நாகம்மா ஒரு நடுத்தர குடும்பத்தின் மூத்த பெண். பல வகைப்பட்ட கஷ்டங்களின் மத்தியில் அவள் தாமோதரத்தின் மனைவி ஆனாள். அவர் ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் வேலை பார்த்து வந்தார். இவர்கள் வாழ்க்கை இனிதே ஆரம்பமாகியது.

நாகம்மாவுக்கு இல்லறம் புதுமையும் லட்சியமும் நிறைந்ததொன்றாக இருந்தது. நாட்கள் நகர்ந்தன. நாகம்மா ஒரு குழந்தைக்குத் தாயானாள். அந்தக் குழந்தைக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்த அன்றே தாமோதரம் லாரிவிபத்தில் காலமானார்.

விதி மகா பயங்கரமாக விளையாடித் தன்னையும் குழந்தை விஜயாவையும் அநாதரவாக்கியதை எண்ணி நாகம்மா கண்ணீர் விடாத நாட்களேயில்லை.

கணவன் வாங்கிக் கொடுத்த தையல் மெஷினில் நாகம்மாவின் பாதங்கள் அசுர வேகத்தில் ஆடின. பாடசாலையில் அவள் கற்ற தையல் கலை கை கொடுத்தது.

இரவு பகல் பாராது நாகம்மா இயந்திரமாக மாறினாள். அக்கிராமத்தில் இயங்கும் தர்மலிங்கம் தேநீர்க் கடைக்கு இடியப்பம் விநியோகிக்கத் தொடங்கினாள். பசி, தூக்கம் பாராது உழைத்து விஜயாவை டாக்டராக்கிப் பார்ப்பதே நாகம்மாவின் லட்சியமாக இருந்தது.

அன்று விஜயா வழமைக்குமாறாக பாடசாலையிலிருந்து ஒருமணி முன்னதாகவே வந்துவிட்டாள். நாகம்மாவின் புருவங்கள் கேள்வி ஆகின. விஜயாவின் வாடியமுகமும் வாய் திறவா மௌனமும் அவளைத் திகைப்பிலாழ்த்தின.

"ஏய் விஜயா உனக்கென்னாச்சு? சொகமில்லையா? இல்ல நேரத்தோடு ஸ்கூல் மூடியாச்சா?"

"அம்மா நீ பொட்டுவைக்கிறதவிட்டிடு. நல்லா உடுத்திறதையும் விட்டிடும்மா!" நறுக்கென்று சொல்லிவிட்டு அழுதாள் விஜயா?

"அப்படீன்னு ஸ்கூல்ல சொன்னாங்களா?"

"இல்லை" என்று தலையசைத்த விஜயா தன் புத்தகத்துள்ளிருந்த கடிதமொன்றை எடுத்து நாகம்மாவிடம் கொடுத்தாள். நாகம்மா பரபரப்பின்றி கடிதத்தில் பார்வையைப் பதித்தாள். நாகம்மாவின் சிரிப்பில் விஜயா ஜில் விட்டுப் போனாள்.

நாகம்மா அமைதியாக எழுந்து சென்று ஒரு கட்டுக்கடிதங்களுடன் திரும்பினாள். "இதை எல்லாம் நீ படித்துப்பார்!" என்று சொல்லிச் சென்றாள். கனத்த இதயத்தைக் கையில் பிடித்துக்கொண்டு ஒவ்வொன்றாய்ப் படித்தாள் விஜயா.

'புருஷன் செத்த உனக்குப் பூவும் பொட்டுமா? நீ குலுக்கி மினுக்குவது யாருக்காக? நீ நடத்தை கெட்டவள். நீ ஒரு விதவை மறக்காதே-யாரோ.'

கூரியவாளால் இதயத்தைக் குதறும் வார்த்தைகள் ஒவ்வொரு கடிதத்திலும் விஷப் பாம்புகளாய் நெளிந்தன. விஜயாவுக்கு வந்த கடிதத்திலும் விஷத்துளிகள்.

நாகம்மா மா இடிக்கும் சத்தம் விஜயாவின் இதயத்தை இடித்தது. கண்கள் குளமாகின. தன்தாயின் பவித்திரமான உருவம் அவள் கண்ணீரில் மிதந்தது. விதவைக்கு இலக்கணம் வகுத்த சமுகம் அவள் வாழ்க்கைக்கு வழி வகுக்கவில்லையே! 'புருஷனை இழந்தவள் நிரந்தரமாய்ப் பட்ட மரமாகி நிற்க வேண்டியது தானா? அது துளிர்விட முயற்சித்தால் நடத்தை கெட்டவள் என்று தீர்ப்பிடுவதா?'

விஜயாவின் எண்ண ஓட்டத்தில் ஆத்திரத்தோடு வினாக்கள் அள்ளுண்டு வந்தன.

விஜயா மெதுவாக நடந்து சென்று தன் தாயை நெருங்கினாள். அவள் உதடுகள் நடுங்க "என்ன மன்னிச்சிடும்மா," என்றாள். நாகம்மா உலக்கையை ஓரமாகச் சாத்திவிட்டு நிமிர்ந்தாள்.

"இதோபார் விஜயா, வாழ்க்கையில் அடிபட்டுப்போனவள் நான். அந்த அனுபவத்தில் சொல்கிறேன். மேல் மட்டத்தில் உள்ளவர்கள் எதைச் செய்தாலும் சமுகம் அதை அங்கீகரிக்கிறது. நம்போன்ற சாதாரண ஜனங்கள் செய்தால் விமர்ச்சிக்கிறது. இதற்காக அலட்டிக் கொள்ளாதே. நீ போய்ப்படி!" முகத்தில் வழிந்த வெயர்வையைச் சுண்டியெறிந்துவிட்டு நாகம்மா மீண்டும் முழுமூச்சுடன் மாவிடிக்கத் தொடங்கினாள். அந்த 'இடி'யில் தான் அவள் லட்சியமே அடங்கியிருக்கு. என்பதை விஜயா மட்டுமே அறிவாள்.

www.padippakam.com

# இலக்கிய நயம்

தருவது ரசிகன்



## கிட்டாதாயின்

"இரவும் நீயே
பகலும் நீயே!

காற்றும் நீயே
மழையும் நீயே!

உறவும் நீயே
பிரிவும் நீயே!

தென்றலும் நீயே
தீயும் நீயே!

வீணையும் நீயே
விரலும் நீயே!

அம்பும் நீயே
வில்லும் நீயே!

வாளும் நீயே
கேடயமும் நீயே!

விருந்தும் நீயே
மருந்தும் நீயே!

படைப்பதும் நீயே
உண்பதும் நீயே!

முத்தும் நீயே
முள்ளும் நீயே!

இன்பமும் நீயே
துன்பமும் நீயே!"

அவளை நினைத்து
அவன்
உள்ளம் உருகியது!

பனிப் பாறையாக
மனது!
அவள் நினைவுகள்
சூரியன்!

பாறை உருகும்
சூரியன் உருகுமா?

அவளும் அப்படித்தான்
உருகாதிருக்கிறாளோ?

எந்தப் பாடலும்
அவளை இளகவைக்கவில்லை!

எந்த விண்ணப்பமும்
அவளால் ஏற்கப்படவில்லை!

"கனிய மறுக்கும்
இதயம் உனதோ?

உருக மறுக்கும்
உள்ளம் உனதோ?

உன்னை நினைத்தேன்
உயிரில் நுழைத்தேன்.

கண்ணே மறுக்காதே
காதலை வெறுக்காதே!"
என்றெல்லாம் அவன்
பகல் இரவாய் வேண்டினான்.

இதயக் கதவுகள்
திறக்கவில்லை!

சம்மத மணியோசை
கேட்கவும் இல்லை!

காத்திருந்து
காலம் கரைந்தது!

வழி பார்த்திருந்து
விழிகள் சோர்ந்தன!

"வேறு பெண்ணா
இல்லை?

அவள் ஒருத்திதான்
அழகியா?

உன்னை நேசிக்காத
காதல்
உனக்கு ஏனடா?

உதறிவிடு தோழா
புதிதாக ஒரு
உறவை அணிந்துகொள்!"

நண்பர்கள் அவனுக்கு
பாதை காட்டினார்கள்!
காதல் போதை
கலைய மறுத்தது!

"ஒரு நாள் கூட
சிரித்ததும் இல்லை!

ஒரு நாள் கூட
பேசியதும் இல்லை!

ஒரு நாள் கூட
அவள் உன்னை
பார்த்ததும் இல்லை!

அவள் பெயர்
அறியாய்!

அவள் குணம்
அறியாய்!

அவள் மனம்
அறியாய்!

இதன் பெயர்
காதலா?

காதல் என்பது
இரு மனம் கலப்பது!

காதல் என்பது
ஒருவரை ஒருவர்
உளமாற உணர்வது!

காதல் என்பது
இருவரும்
ஒருவராய் நிறைவது!

ஒருவரை ஒருவர்
அறியாக் காதல்
புறக் காதல்!

அகக் காதல்
என்பது
நிஜக் காதல்!

புறக் காதல்
என்பது
நிறக் காதல்!

நிறம் மாறும்
சாயம் போகும்!

நிலையில்லாத
நிறத்தை நம்பாதே!

உள்ளத்தின்
திறத்தை நம்பு!

பெரு முலை
கண்டு,
மலை என்று
வியந்து,
மேனி நிறம்
கண்டு,
செவ்வாழை என்று
வியந்து
சில நாள் புரண்டு
மோகம் முடிந்ததும்
முற்றும் தீர்ந்ததும்
பற்றுத் துறந்தோம்
என்று ஓடிய மனிதர்
காதலை அறியார்.

காதலை அறிந்தவன்
காதலை துறவான்!

காதலை உணர்ந்தவன்
காதலை மறவான்!

அவசரக் காதல்
சரசத்தில் முடியும்!

நிதானக் காதல்
சாவிலும் வாழும்!

இதயம் என்பது
ஒரு வீடு!
அவள் வீட்டில்
கட்டாயமாக
குடியேற ஆசைப்படாதே!

எவள் இதயம்
உனக்காக திறந்திருக்கிறதோ
அங்கு உனக்கோர்
ஆசனம் காத்திருக்கும்!

அதுவரை தேடு
காதலைத் தேடு
காதலால் தேடு!
கட்டாயக் காதலும்
நித்திய புலம்பலும்
நிம்மதிக் கேடு!"

நண்பர்கள் சொன்ன
ஒவ்வொன்றும்
அவனுக்குள் விழுந்தது!

புலம்பலை நிறுத்தி
காதலை
புதிதாய் பார்த்தான்!

"விரும்பாதவள்
பின் செல்லேன்!
மனம் வருந்தேன்!"
என்றான் தெளிந்தான்.

உடுக்கை இழந்தவன்
கைபோல-என்
இடுக்கண் களையும்
மெய்யுரை பகன்றீர்!

நல்ல நண்பர்கள்
கிடைப்பவன் எவனும்
நரகத்தில் விழான்!
நட்பு என்னை
காப்புச் செய்தது!
இதுவே நட்பு
தப்பில்லா நட்பு!"
நண்பர்களைப் புகழ்ந்தான்.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு!"**

குறள்: 788 அதிகாரம்: 79.

(ஸ்போர்ட்ஸ்)

## புயல்வேக ஆட்டக்காரர்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியில் புதிதாகச் சேர்ந்திருக்கும் புயல்வேக ஆட்டக்காரர் ரிக்கார்டோ பாவல். சிங்கப்பூரிலும், டொரண்டோவிலும் நடந்த 6 கிரிக்கெட் போட்டிகளில் 30 அட்டகாசமான சிக்சர்கள் அடித்துள்ளார்.



இந்த சிக்சர் மன்னனின் வயது 20. கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னர்களில் ஒருவர் மேற்கிந்தியத்தீவு வீரர் விவியன் றிச்சார்ட்ஸ். 8 வருடங்களுக்கு முன் ஓய்வுபெற்ற அந்த அதிரடி வீரருக்குக் கிடைத்த மரியாதையும் அங்கீகாரமும் தற்போது அவரைப் போலவே ஆடும் இந்த அதிரடி வீரருக்குக் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது.

இவ்வருட ஆரம்பத்தில் ஓய்வு பெற்ற கார்ல் ஹூப்பருக்குப் பதிலாக மேற்கிந்தியத் தீவுகள் அணியில் சேர்க்கப்பட்டார் பாவல். உலகக் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கெதிராக ஒரே ஒரு போட்டியில் விளையாடிய இந்த ஜமெய்க்கா வீரர் அப்போட்டியில் வெறும் 4 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

சிங்கப்பூரில் இந்தியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் 93 பந்துகளில் 121 ஓட்டங்களைக் குவித்து கோப்பையை வெல்ல வழிசமைத்தார். இதில் 9 பவுண்டரிகளும் 8 சிக்சர்களும் அடங்கும். இதன்மூலம் கடந்த 5 வருடங்களுக்குப் பின் மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிடைத்த முதல் வெற்றிக் கோப்பை இதுதான்.

சிங்கப்பூரில் நடைபெற்ற லீக் போட்டிகளில் ஸிம்பாப்வேயுடனான போட்டியில் 36 பந்துகளில் 51 ஓட்டங்களைக் குவித்தார். இதில் 4 சிக்சர்கள் அடங்கும். இப்போட்டித் தொடரில் சிறந்த ஆட்டக்காரராகவும், இறுதிப் போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

12 வயது முதல் கிரிக்கெட் விளையாடி வரும் பாவலை, கப்டன் பிரையன் லாராவும், முன்னாள் கப்டன் கிளைவ் லொயிட்டும் பாராட்டியுள்ளார்கள்.

## டெண்டுல்கர் கப்டனாக நீடிப்பார்

வரும் வருடம் மார்ச் மாதம் வரை நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகள் அனைத்திற்கும் இந்திய அணியின் கப்டனாக சச்சின் டெண்டுல்கர் இருப்பார். இத்தகவலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜெயவந்த் லீலே தெரிவித்துள்ளார்.

முதுகுவலி காரணமாக டொரண்டோ கிரிக்கெட் மற்றும் கென்யா கிரிக்கெட் போட்டிகளில் டெண்டுல்கர் பங்கேற்கவில்லை. டொரண்டோ போட்டிக்கு கங்குலியும், கென்யா போட்டிக்கு ஜடேஜாவும் கப்டன்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அவுஸ்திரேலியாவில் சிகிச்சை பெற்றுத் திரும்பியிருக்கும் டெண்டுல்கர் மீண்டும் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டு அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை நீடிப்பார். முதுகுவலியில் இருந்து குணமடைந்துள்ள டெண்டுல்கர் சில வாரங்களின் பின் மீண்டும் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளார்.

அத்துடன் கடந்த 24.09.99 டெண்டுல்கர் ஆண்குழந்தை ஒன்றிற்குத் தகப்பனாகியுள்ளார். டெண்டுல்கர்-அஞ்சலி தம்பதிக்கு ஏற்கனவே சாரா என்ற பெண் குழந்தை ஒருவரும் உள்ளார்.

## கபில்தேவினால் தரம் மேம்படும்

"இந்தியக் கிரிக்கெட் அணிக்கு கபில்தேவ் பயிற்சியளிப்பதால் அதன் தரம் மேம்படும்," என முன்னாள் இந்திய சகலதுறை ஆட்டக்காரர் ரோஜர் பின்னி தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு பயிற்சியளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கபில்தேவ், 2 வருட காலம் இந்தப் பதவியில் இருப்பார். 1983ல் நடந்த 3வது உலகக் கோப்பையை இந்தியா வெல்லக் காரணமாக இருந்தவர் கபில்தேவ்.

இது குறித்து ரோஜர் பின்னி கருத்துத் தெரிவிக்கும்போது,

"இந்திய அணியின் பயிற்சியாளராக கபில்தேவ் நியமிக்கப்பட்டிருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இந்தப் பதவியில் அவரைத் தவிர வேறு யாராலும் சிறப்பாகச் செயற்பட முடியாது. எனவே அவரது பயிற்சியின் மூலம் இந்திய அணியின் தரம் மேம்படும்!" என்று கூறியுள்ளார்.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக ஃபிரான்ஸ் நாட்டின் பெயரை புலிகள் கூறியுள்ளனரே?**

கி. நவரத்னம், கொழும்பு-09.

தென்னாபிரிக்கா, பிரிட்டன் ஆகியவை புலிகளுக்கு உதவுவதாக ஆட்சியாளருக்கு ஐமிச்சம்! அதனால்தான் ஃபிரான்ஸ் பெயரைக் கூறியுள்ளனர் புலிகள் என்று நினைக்கிறேன்!

☆☆

**அரசாங்கத்துக்கான ஆதரவை வாபஸ் பெறப் போவதாகக் கூறியுள்ளாரே அமைச்சர் அஷ்ரப்?**

கு. ஞானசேகரன், மட்டக்களப்பு.

அதே அறிக்கையில் ஜனாதிபதியையும் புகழ்ந்துள்ளாரே பார்த்தீரா? ஊடலும், கூடலும் அரசியல் நாடக உத்திகள் அப்பனே-உத்திகள்!

☆☆

**சர்வமதத் தூதுக்குழுவின் விஜயம் சமாதானத்தைக் கொண்டுவருமா?**

மு. மகேசன், வவுனியா.

கொண்டு வராது! கொண்டு வரவே வராது! தீர்வுக்கான உருப்படியான யோசனை இக் குழுவிடமும் இல்லாதபோது சமாதானத்தை எங்கிருந்து கொண்டுவருவது?!

☆☆

**அம்பாறைப் படுகொலைகள் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

செல்வி இ. உஷா, காரைதீவு.

கண்டிக்கத்தக்கது! அதே சமயம் அதற்கான சூழலை தோற்றுவித்தது யார் என்பதையும் நோக்கியாக வேண்டும்!

☆☆

**அமைச்சர் தொண்டா அரசாங்கத்தில் இருந்து விலகுவாரா?**

எம். பரமசாமி, மஸ்கெலியா.

பொதுஜன முன்னணி எதிர்க்கட்சியாக மாறினால்தான் உங்கள் கனவு கைப்படும்!

☆☆

**சிந்தியா! என் அபிமான லவ்ஸ்டார் அஜித்தும் ஜொள்ளு ஸ்டார் சிம்ரானும் மறு படி இணைந்து நடிப்பார்களா?**

மி. விஜயகுமார், குருநாகல்.

இணைந்துவிட்டார்கள். 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்' என்னும் படத்திற்காக!

☆☆

*** தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியை இந்திய அணி மண் கவ்வ வைத்து விட்டதே?**

ஆர். வைத்தியா, கொழும்பு-06.

இப்படித்தான் இந்திய அணி திடீரென்று உச்சிக் கொப்புக்கு செல்லும். நாமெல்லாம் உற்சாகம் கொப்பளிக்கப் பார்த்துக் கொண்டிருக்க, கொப்பு முறிந்து பொத்தென்று விழுந்தும் போகும். திறமையான வீரர்களைக் கொண்ட திறமையாக ஆடா அணி இந்திய அணி மட்டும்தான்!

☆☆

**வளர்முக நாடுகளது வறுமையை ஒழிக்க செல்வந்த நாடுகள் ஒத்து ழைக்க வேண்டும் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி. இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண ஏனைய நாடுகளது உதவியையும் பெற்றால் என்ன?**

பி. சிறிதரன், நாரஹேன்பிட்டி.

போதிப்பது சுலபம்! சாதிப்பது...?

☆☆

**சிந்தியா! தலைக்கனம் பிடித்தவர்களைத் திருத்த முடியாதா?**

மா. பானுமதி, மட்டக்களப்பு.

இந்தக் கவிதையைப் பாருங்கள்:

**"தலைக்கனம்**
**அழிவின் ஆரம்பம்"**
**என்றான் மனிதன்.**
**"தவறு மனிதா தவறு!**
**என் தலைக்கனம்**
**ஒளியின்- ஆதாரம்**
**அஸ்திவாரம்"**
**என்றது தீக்குச்சி!"**

(நன்றி: எபோ)

☆☆

**வெற்றிக்கு மூலதனம் அதிஷ்டமா? முயற்சியா?**

எம். ரிபாயா, கம்பளை.

அமெரிக்காவில் அரசு விழா ஒன்றில் பெரும் விஞ்ஞானியான தாமஸ் அல்வா எடிசனை எல்லோரும் பாராட்டினார்கள். "நீங்கள்தான் உலகிலேயே பெரிய விஞ்ஞானி!" என்று புகழ்ந்தார்கள்.

அதற்கு எடிசன் பணிவோடு:

"நான் ஒன்றும் அவ்வளவு பெரிய விஞ்ஞானி அல்ல!" என்று கூறினார்.

உடனே அந்த விழாவுக்கு வந்திருந்த ஆளுநர் "நீங்கள்தானே ஆயிரம் கண்டுபிடிப்புக்களுக்குச் சொந்தக்காரர்" என்று கேட்டார்.

அதற்கு எடிசன் கூறினார்:

"நான் கண்டுபிடித்தது 'கிராமஃபோன்' ஒன்று மட்டும்தான். மற்ற எல்லாக் கண்டுபிடிப்புக்களும் ஏனையோரது யோசனைகள்தான். அந்த யோசனைகளைக் கூறியவர்கள் அதனைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்காமல் விட்டுவிட்டனர். ஆனால் நான் அந்த யோசனைகளை அசைபோட்டேன். அவற்றை செயற்படுத்தக் கடுமையாக உழைத்தேன்!



'டைம்' படத்தில் பிரபுதேவா-சிம்ரான்

அதனால்தான் இவ்வளவு பொருட்களைக் கண்டுபிடித்தேன்!"

☆☆

**நாம் எதிர்பார்ப்பதற்கு மாறான சம்பவங்கள் தொடர்ந்து நடக்கும்போது விரக்தி ஏற்படத்தானே செய்யும்?**

வி. உமாபதி, பதுளை.

மாவீரன் நெப்போலியன் தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் கேட்கும் முதல் கேள்வி:

"நீ கொண்டுவந்துள்ள மோசமான கெட்ட செய்தி இருந்தால், அதனை முதலில் சொல்லிவிடு!" என்பதுதான்.

"இப்படி ஏன் கேட்கிறீர்கள்?" என்று அவருடைய உதவித் தளபதி கேட்டார்.

அதற்கு நெப்போலியன் கூறிய பதில் இதுதான்:

"வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம். அதில் மோசமான எதிரியைத்தான் முதலில் எதிர்கொள்ள வேண்டும். கெட்ட செய்திகளில்தான் நாம் சவாலாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய விஷயங்கள் இருக்கும். நல்ல செய்திகள் சும்மா இரசித்து மகிழ்வது மாதிரியான இனிமையானவைதான். அவற்றில் நம் திறமைக்குச் சவாலாக எதுவும் இருக்காது!"

☆☆

**மரதன் ஓட்டப் போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றதோடு, பதக்கங்கள் பலவற்றை இலங்கை பெற்றுள்ளதே?**

திவாகரன், கொழும்பு-10.

பாராட்டலாம்! மரதன் ஓட்டத்தில் முன்னணிக்கு வந்துள்ள இலங்கை, மிலேனியம் நோக்கிய ஓட்டத்தில் சார்க் நாடுகளில் மிகவும் பின்தங்கிய நாடாக இருப்பது பாராட்டத்தக்கதல்ல!

☆☆

**சூரியக் கிரகணத்தைப் பார்ப்பது இருக்கட்டும், சூரியனை நேருக்கு நேர் பார்க்க முடியுமோ?**

கு. ரவீந்திரன், மட்டக்குளி.

முடியும், கழுகாக இருந்தால்!

☆☆

**தங்களுக்கு மட்டுமே எல்லாமும் தெரியும் என்று இறுமாப்புக் கொள்பவர்கள் எப்படிப் பட்டவர்கள்?**

ஜெ. சுசீந்திரன், கந்தப்பளை.

தன்னைத்தானே மேதாவிகளாக நினைத்துக் கொள்வது, சிறிய மனிதர்களுக்கு இறைவன் கொடுத்த பெரிய வரம் என்று எங்கோ படித்ததாக ஞாபகம்.

☆☆

**குடிப்பழக்கத்தைக் கைவிட முடியாதா? எப்படி முயன்றாலும் என்னால் முடியவில்லையே?**

ஆர்.எம்., கண்டி.

மனமுண்டானால் மார்க்கமுண்டு! முதலில் மனதை அடக்கி வெல்லுங்கள். ஒரு குட்டித் தமாஷ் கதை.

பெரும் குடிகாரர்களை அந்தப் பழக்கத்தில் இருந்து மீட்பதில் ஒரு டாக்டர் புகழ் பெற்று விளங்கினார். அவரது நண்பர் அவரிடம் வந்து, "நீ குடிகாரர்களை எப்படிக் குணமாக்குகிறாய்? அந்த இரகசியத்தைக் கூறு!" என்று கேட்டார்.

டாக்டர் சிரித்தபடியே கூறினார்: "இதில் இரகசியம் எதுவுமில்லை. என்னிடம் வைத்தியத்திற்கு வந்த பிறகு, அவர்களிடம் குடிப்பதற்கு பணமே இருக்காது!"

☆☆

## சிந்தியா பதில்கள்

**'பெண்களிடம் இதைச் சொல்லக்கூடாது- எதை?- இரகசியத்தை' என்று தனியார் வானொலி ஒன்றில் மூத்த அறிவிப்பாளர் ஒருவரே கூறினாரே! இவர்கள் எல்லாம் எந்த நாட்டில் இருக்கிறார்கள்? நம் பெண்களைப் பற்றி அறியாதவர்களா இவர்கள்?**

கி. வதனி, கொழும்பு-06.

பெண்களின் அர்ப்பணிப்புக்கும், அயராத பணிக்கும் உலகுக்கே முன்மாதிரியான பெண்களாக தமிழ்ப் பெண்கள் மாறியுள்ளனர். நீங்கள் எந்த அறிவிப்பாளரைக் கூறுகிறீர்கள் என்பது தெரியவில்லை. யாராக இருந்தாலும் பத்தாம் பசலித்தனமான கருத்தை இன்னமும் பற்றிப் பிடித்திருக்கிறார் என்று தெரிகிறது! திருத்திக்கொள்வது வரவேற்கத்தக்கது!

☆☆

**'அவ்வையார்' படம் காண்பித்தார்களே. பார்த்தீரோ?**

எஸ். சிவபாலன், கல்கிசை.

பார்த்தேன் ஐயா! அதில் பிடித்தவை கே.பி. சுந்தராம்பாளின் குரலும், யானைகளும்!

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 20

# வேடதாரிகளுக்குச் சாட்டையடி!

ஆண்டவருடைய இராச்சியத்தை மண்ணுலகில் ஸ்தாபிக்க மனிதனாகப் பிறந்த இயேசுபிரானின் போதனைகள் திக்கெட்டும் பரவியது. பல்வேறு நாட்டவரும், பல்வேறு இனத்தவர்களும் பல்வேறு மதங்களைப் பின் பற்றுபவர்களுமாக பல்லாயிரக் கணக்கானோர், இயேசுபிரான் சென்ற இடமெல்லாம் அவரைத் தொடர்ந்து சென்று அவருடைய அருள் வாக்கினைச் செவிமடுத்து வந்தனர். ஆனால் இயேசுபிரான் உதித்த யூத குலத்தவர்கள் பலரே இயேசுபிரானுக்கு எதிராகப் பல சதித் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தனர்.

திருச்சட்ட நூல் அறிஞர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக் கொள்வோரும், அவர்களுக்கு உறுதுணையாக நின்ற பரிசேயர் கூட்டமும் இயேசுபிரானிடம் விதண்டா வாதத்திலீடுபட்டு, அறிவற்றவர்கள் போல் வீண் வினாக்களைத் தொடுத்து, பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் தங்கள் அறிவீனத்தைப் பறை சாற்றிக்கொண்டிருந்தனர்.



இயேசு பெருமானைத் தங்கள் வினாக்களால் திக்குமுக்காட வைத்துவிடலாம் என்று கர்வத்துடன் வந்தவர்களெல்லாம் இயேசு பிரானுடைய ஒரு சிறு வினாவுக்குத் தானும் விடை பகர முடியாமல் வாயடைத்து நின்றனர். அவர்களைப் புறக்கணித்துவிட்டு, இயேசு பிரான் தன் சீடர்களையும் திரண்டிருந்த மக்களையும் பார்த்து தமது திருவாக்கினைத் தொடர்ந்தார்.

### தண்டனை

"மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள்; செயலில் காட்ட மாட்டார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக்கூட முன்வரமாட்டார்கள். தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள்.

தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள்; அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள்; சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி (போதகர்) என அழைப்பதையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் 'ரபி' என அழைக்கப்படவேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள்.

### தாழ்த்துகிறவர் உயர்த்தப்பெறுவர்

இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்கவேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார். நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர். உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். தம்மைத் தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, மக்கள் நுழையாதவாறு அவர்கள் முன்பாக விண்ணக வாயிலை அடைத்துவிடுகிறீர்கள்: நீங்கள் நுழைவதில்லை, நுழைவோரையும் விடுவதில்லை;

"வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு, நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகின்றீர்கள்; அவ்வாறு சேர்த்தபின் அவரை உங்களைவிட இருமடங்கு நரகத் தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள்.

குருட்டு வழிகாட்டிகளே, யாராவது திருக்கோவிலின்மீது ஆணையிட்டால் ஒன்றுமில்லை; ஆனால் அவர் கோவிலின் பொன்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப் பட்டவர் என்கிறீர்கள். குருட்டு மடையரே! எது சிறந்தது? பொன்னா? பொன்னைத் தூயதாக்கும் திருக்கோவிலா? யாராவது பலிபீடத்தின்மீது ஆணையிட்டால் ஒன்றுமில்லை; ஆனால் அவர் அதில் படைக்கப்பட்ட காணிக்கையின்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் என்கிறீர்கள்.

குருடரே! எது சிறந்தது? காணிக்கையா? காணிக்கையைத் தூயதாக்கும் பலிபீடமா? எனவே பலிபீடத்தின்மீது ஆணையிடுகிறவர் அதன்மீதும் அதன்மேலுள்ள அனைத்தின்மீதும் ஆணையிடுகிறார். திருக்கோவிலின்மீது ஆணையிடுகிறவர் அதன்மீதும் அதில் குடிகொண்டிருக்கிறவர்மீதும் ஆணையிடுகிறார். வானத்தின்மீது ஆணையிடுகிறவர் கடவுள் அரியணைமீதும் அதில் வீற்றிருக்கிற கடவுள் மீதும் ஆணையிடுகிறார்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிடுகிறீர்கள். இவற்றைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றையும் விட்டுவிடக் கூடாது. குருட்டு வழிகாட்டிகளே! நீங்கள் பருகும்போது கொசுவை வடிகட்டி அகற்றுகிறீர்கள். ஆனால் ஒட்டகத்தையோ விழுங்கி விடுகிறீர்கள்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள். ஆனால் அவற்றின் உட்புறத்தையோ கொள்ளைப் பொருட்களாலும் தன்னல விருப்புகளாலும் நிரப்புகிறீர்கள். குருட்டுப் பரிசேயரே, முதலில் கிண்ணத்தின் உட்புறத்தைத் தூய்மையாக்குங்கள். அப்பொழுது அதன் வெளிப்புறமும் தூய்மையாகும். வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை புறம்பே அழகாகத் தோற்றமளிக்கின்றன; அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லாவகையான அழுக்குகளும் நிறைந்திருக்கின்றன. அவ்வாறே நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள். ஆனால் உள்ளேயோ போலித்தனமும் நெறி கேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள்.

வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, நீங்கள் இறைவாக்கினர்களின் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்; நேர்மையாளரின் நினைவுச் சின்னங்களை அழகுபடுத்துகிறீர்கள்; 'எங்கள் முதாதையர் காலத்தில் நாங்கள் இருந்திருந்தால் இறைவாக்கினர்களின் கொலைக்கு உடந்தையாக இருந்திருக்க மாட்டோம்!' என்கிறீர்கள்.

**இராஜகுமாரன்**

இவ்வாறு நீங்கள் இறைவாக்கினரைக் கொன்றவர்களின் வழிமரபினர் என்பதற்கு நீங்களே சாட்சிகள். உங்கள் முதாதையர் செய்த கொடுமையின் அளவுக்கு நீங்களும் செய்து முடியுங்கள். பாம்புகளே, விரியன் பாம்புக் குட்டிகளே, நரகத் தண்டனையிலிருந்து நீங்கள் எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்? எனவே இதைக் கேளுங்கள்! நான் உங்களிடையே இறைவாக்கினரையும் ஞானிகளையும் மறைநூல் அறிஞர்களையும் அனுப்புகிறேன். இவர்களுள் சிலரை நீங்கள் கொல்வீர்கள்; சிலரைச் சிலுவையில் அறைவீர்கள்: சிலரை உங்கள் தொழுகைக் கூடங்களில் சாட்டையால் அடிப்பீர்கள்; நகரங்கள் தோறும் அவர்களைத் துரத்தித் துன்புறுத்துவீர்கள். இவ்வாறு நேர்மையாளரான ஆபேலின் இரத்தம் முதல் திருக்கோவிலுக்கும் பலிபீடத்திற்கும் நடுவே நீங்கள் கொன்ற பரக்கியாவின் மகன் சக்கரியாவின் இரத்தம்வரை இம்மண்ணில் சிந்தப்பட்ட நேர்மையாளர் அனைவரின் இரத்தப் பழியும் உங்கள்மேல் வந்து சேரும். இத்தலைமுறையினரே இத் தண்டனைகள் அனைத்தையும் அடைவர் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

### "எருசலேமே, எருசலேமே!"

"எருசலேமே, எருசலேமே, இறை வாக்கினரைக் கொல்லும் நகரே, உன்னிடம் அனுப்பப்பட்டோரைக் கல்லால் எறிகிறாயே! கோழி தன் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பது போல நானும் உன் மக்களை அரவணைத்துக்கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன். உனக்கு விருப்பமில்லையே! இதோ உங்கள் இறை இல்லம் கைவிடப்பட்டுப் பாழடையும். எனவே இது முதல்,

'ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசிபெற்றவர்!' என நீங்கள் கூறும்வரை என்னைக் காண மாட்டீர்கள் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்!"

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு-ஆ] 17 விடை:** சிறுபிள்ளைகளுக்கு உரியது.

**பரிசு பெறுவோர்:**

1. கே. இரெத்தினசிங்கம், இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.
2. மா. சிவதாசன், இல'8,காசுக்கடைத் தெரு,திருகோணமலை.
3. ஏ.சி.எம். அன்வர், இல. 66, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.
4. எஸ்.ரி. ஸ்ரீபன், 1/8, 47ம் ஒழுங்கை,வெள்ளவத்தை,கொழும்பு-06.
5. செல்வி சாலினி தேவராஜா, விகாரை மேற்கு ஒழுங்கை, அக்கரைப்பற்று-09.

**திருமறை [பு.ஆ] 20 வினா :-** மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருப்போர் யாவர்?


ஒக்டோபர் 09 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை பு.ஆ.20–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**




## தேர்தல் திருவிழாவின் பின்னர்...

இந்தியாவில் தேர்தல் திருவிழா முடிந்தபின்னர் அடுத்த கட்ட காட்சிகள் என்னாகும்? இந்திய சஞ்சிகைகள் வெளியிட்ட கருத்துப்படங்களை உருவித் தருகிறோம்.




## காதிலை பூ கந்தசாமி



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331




## அடடே



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## வித்தகன்

→ உலகிலேயே இன்று முதல்தரப் பொப்பிசைப் பாடகராக மைக்கேல் ஜாக்சன் விளங்குகிறார்.

ஒரே வருடத்தில் எட்டு 'கிரம்மி' விருதுகளைவென்று சாதனை புரிந்தவர் ஜாக்சன். 1984ம் ஆண்டில் இச் சாதனையை மைக்கேல் ஜாக்சன் நிலைநாட்டினார்.



←அமெரிக்காவில் இண்டியானா மாநிலத்திலுள்ள கேரி என்ற ஊரில் ஜாக்சன் 1958 ஆகஸ்ட் 29ம் திகதி பிறந்தார். இவருடைய மூத்த சகோதரர்களால் நடத்தப்பட்டு வந்த இசைக்குழுவில் சிறுவயதிலேயே மேடைகளில் பாடிவந்தார். இதில்கிடைத்த உற்சாகம் இவரை 1979ல் தனியான இசைக்குழுவினைத் தோற்றுவிக்க உதவியது.

1982ல் இவர் பாடி வெளியிட்ட ஒலிப் பேழை மொத்தம் 4 கோடி 80 இலட்சம் பிரதிகள் விற்பனையாகி உலக சாதனை படைத்தது. □

↑ உயிரினங்களில் ஒட்டுணிகளின் அணைவினால் பல விசித்திரத் தோற்றங்கள் உருவாகின்றன. குறிப்பாக நீரிலும் நிலத்திலும் உயிர் வாழக்கூடிய தவளை இனங்களின் இயல்பான தோற்றத்தை ஒட்டுணிகள் இயல்புக்கு மாறான வடிவத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

தவளை முட்டையிலிருந்து வெளியானதும் தலை பெருத்த சிறு புழுவைப்போல் தான் நீரில் நீச்சலடிக்கும். வால் தவக்கை என்று இப்பருவத்தை அழைப்பார்கள். இக் காலகட்டத்தில் இதனை அணைத்து கொள்ளும் ஒட்டுணி வால் தவக்கையின் கால்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ குறைக்கவோ செய்துவிடும். படத்தில் காணப்படும் தவளைகள் இரண்டும் இயல்புக்கு மாறான தோற்றத்தைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். ■

## நதியோரம்



→ ஐரோப்பாவில் பல நாடுகளுக்கூடாக ஆயிரத்து 320 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து வட கடலில் சங்கமிக்கும் ஐரோப்பிய வரலாற்றுடன் தொடர்புடைய நதியான றைனின் அழகிய தோற்றம் இது.

கிழக்கு சுவிற்சர்லாந்தில் அல்ப்ஸ் மலைச் சிகரங்களில் றைன் உற்பத்தியாகிறது. லீச்ஸ்டென்டியன், ஒஸ்ட்ரியா, ஃபிரான்ஸ், ஜெர்மன் ஆகிய நாடுகளின் எல்லையாகவும் இந்நதி விளங்குகிறது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் றைன் நதியின் கரையோரங்களில் காணப்படும் இயற்கை எழிலை கண்டு களிப்பதற்காகவே இங்கு ஏராளமாக வருகின்றனராம். ■

ஜப்பான் நாட்டில் வீடியோப் படங்களில் காட்டூன் கதாபாத்திரங்கள் ஆக்கிரமித்து வருகின்றன. இவற்றில் அண்மைக் காலத்தில் சிறியவர்களை மட்டுமல்லாமல் பெரியோர்களையும் வெகுவாகக் கவர்ந்துவிட்ட பாத்திரமான 'மரியோ' வின் தோற்றத்தையே இங்கு பார்க்கிறீர்கள். ↘

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் ஹரிசன் (Harison) 14.09.1999

கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த கோபால கிருஸ்ணன்-யாழினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஹரிசன், தனது 1வது பிறந்தநாளை 14.09.1999 அன்று செவ்வாய்க்கிழமை சுவிஸ் சூரிச்சில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா-அம்மா, அப்பப்பா, அப்பம்மா, வவுனியா பெரியப்பா, பெரியம்மா அண்ணாமார் சங்கீத், கணாத்யவுன், அக்காமார், கினித்தா, சுவேத்திக்கா, சீலான் மாமா, கனடா குமார் மாமா மாமி குடும்பத்தினர் மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறை இயேசுவின் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.



## விற்பனை

1982ல் 'டொங்கி கொங்' என்ற வீடியோப் படத்தில் மரியோ முதன் முதலில் தலை காட்டினார். இதன் பின்னர் இவருக்கு இரசிகர்கள் காட்டிய ஆதரவினால் 'மரியோ' தொடர்ந்து பல வெற்றிப்படங்களில் நடித்து வருகிறார்.

அண்மையில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட 'மரியோ பிரதர்ஸ்-3' என்ற படம் மட்டும் உலகம் பூராவும் ஒன்றரைக் கோடிப் பிரதிகள் விற்பனையாகிவிட்டனவாம். இது ஒரு உலக சாதனையாகும்.

↓ பார்த்ததும் பொம்மைகள் போன்று தெரிகின்றன. ஆனால் பொம்மைகள் அல்ல. இவையெல்லாம் விதம் விதமான இனிப்புக்கள், சாக்லேட்டுக்கள். பெல்ஜியம் நாட்டில் சாக்லெட் பிரியர்கள் அதிகமாகியுள்ளனர். இதனால் சாக்லேட் நிறுவனங்கள் புதுவிதமான வடிவங்களில் தயாரித்து அசத்துகின்றன.

## விருந்து



## இனிப்பு



ஐரோப்பாவிலேயே மிக நீளமான- 18 கிலோமீட்டர் (10 மைல்) நீளமான புதிய பாலம் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1998 மார்ச் மாதம் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. ↑

5 கிலோமீட்டர் நீளமான உணவு மேசை இதே பாலத்தில் தான் அமைக்கப்பட்டது. 15 ஆயிரம் பேருக்கு விருந்து படைக்கப்பட்டது. சாதாரணமாக நடந்து திரிந்து உணவு பரிமாறுவது சாத்தியப்படாது என்பதனால் உணவுகளை எடுத்துச் சென்று பரிமாற 20 பஸ்கள் அமர்த்தப்பட்டன. உலகிலேயே இதுவரை பெரிய்ய விருந்துப் பந்தி இதுதான். □